

வைரஸ் ஒன்றின் வாக்குமூலம் 56 பக்கம்

தேன்பொழுது 04 பக்கம்



விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்... 13 பக்கம்



# சிரித்திரன்

புரட்டாதி - மார்கழி 2021 நகை 33 சுவை 375 விலை 150.00 SIRITHTHIRAN Est.1963




ISSN 2773-7101
9 772773 710004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்

siriththiran.com

# சிரித்திரன்

Est:1963

தேசம் விட்டுப் போனாலும்
மண் வாசம் விட்டுப் போகாமல்
எம் நேச உறவுகளுடன் உறவாட சிரித்திரன்...



"வீடு சிரிக்க ஒரு ஏடு"

உங்கள் உள்ளம் மகிழவும் இல்லம் சிரிக்கவும்
புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் **சிரித்திரனை**
தவறாது பெற்றுக்கொள்ள **www.siriththiran.com** எனும்
இணையத்தளத்தின் ஊடாக **சந்தாதாரர்** ஆகுங்கள்...

## இலங்கையில்...

சிரித்திரனின் சந்தாதாரராக
இணைவதற்கு தொடர்பு
கொள்ளுங்கள்...

மின்னஞ்சல் : *subscribe@siriththiran.com*
வட்ஸப் : *+94 741238937*
தொலைபேசி : *+94 212222974 / +94 741238937*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EVERGREEN PRINTERS

# எவகிறீன் அச்சகம்



**OFFSET PRINTING** | **DIGITAL PRINTING** | **SCREEN PRINTING**

## GENERAL PRINTING

MAGAZINES
BOOK
CATALOGUE
ANNUAL REPORT
BOOKLET
POSTER
LEAFLET / FLYER
BROCHURE
NEWS LETTER
BILL BOOK
INVOICE
ALL KINDS OF CALENDAR
VISITING CARD
NOTE BOOK / PAD
LETTER HEAD
RECEIPT
ENVELOPE
INVITATION CARDS
POST CARD
WEDDING CARDS
FILE / FOLDER
ETC..

## PACKAGING

BOXES
LABELS

## OUTDOOR

BANNER
BANTING
OUTDOOR STICKER
ETC..

## SPECIAL PRODUCTS

JOB IDENTITY CARDS
HARD COVER
CHEQUE
MUG PRINTING
EMBOSSING
HOT STAMPING
HIGH GLOSS LAMINATING
ALL KINDS OF SCREEN PRINTING

வாடிக்கையாளர்களுக்கும்
அச்சக நிறுவனங்களுக்கும்
விசேட விலைக்கழிவு.

**HIGH TECH DESIGNING &**
**HIGH TECH PRINTING WITH US**






*Evergreen* PRINTERS

தமிழர் தாயகத்தின் அச்சக
முன்னோடிகள்..

021 221 9893
0777 1414 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்"

# சிரித்திரன்

Est. 1963

புரட்டாதி – மார்கழி 2021 நகை 33 சுவை 375


புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம் (Centre for Creativity and Innovation) நிறுவனத்தால் இவ்விதழ் வெளியிடப்பட்டது.
65 வேலப்பர் ஒழுங்கை
(கனகரத்தினம் கல்லூரி முன்வீதி),
அரியாலை, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு: நியூ எவகிறீன் அச்சகம் (New Evergreen Printers)

சிரித்திரன் குழு:

| | |
|---|---|
| பொறுப்பாசிரியர் | : செல்வராசா நந்தகோபால் |
| இணை ஆசிரியர்கள் | : சுரேஷ் கணபதி |
| | முத்து இராகவன் |
| | வாணி சுந்தர் |
| ஓவியர் | : பிருந்தாஜினி பிரபாகரன் |
| தொலைபேசி | : +94 21 22 22 974 |
| WhatsApp | : +94 74 123 8937 |
| மின்னஞ்சல் | : editor@siriththiran.com |
| அஞ்சல் | : 65 வேலப்பர் ஒழுங்கை |
| | (கனகரத்தினம் கல்லூரி முன்வீதி), |
| | அரியாலை, யாழ்ப்பாணம். |
| இணையம் | : www.siriththiran.com |

(இவ்விதழில் இடம்பெறும் கதைகள் மற்றும் கதாபாத்திரங்கள் அனைத்தும் கற்பனையே. எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே.)



மெயில்வாகனத்தார்

# மீளும் வழி

ஜனநாயகத்தின் பரிணாம வளர்ச்சியே சமஷ்டி என்ற அதிகாரப் பகிர்வாகும். உண்மையில் இப்பொழுது உள்ள ஆட்சி முறைகளில் மிகச்சிறந்தது ஜனநாயக தேர்தல் ஆட்சிமுறைதான். அதில் பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் இதைவிட சிறப்பானது இப்போதைக்கு இல்லை என்பதுதான் உண்மை. ஆனாலும் இலங்கை போன்ற நாட்டிற்கு அதன் ஜனநாயக ஆட்சி முறையின் அனுபவம் 7 தசாப்தங்களாக உள்ளன. அதில் தெற்கில் மார்க்ஸிசம் வடக்கு கிழக்கில் 30 வருட இனமோதல் என நாட்டின் இயல்புப் போக்கை மாற்றிய சூழ்நிலைகளும் உள்ளன. அதற்கான காரணங்களும் தீர்க்கப்படாமல் அப்படியே உள்ளன.

ஆனாலும் கிரேக்ககாலம் தொட்டு ஐரோப்பியர்கள் மற்றும் அவர்களின் வம்சாவளியினரின் புதிய குடியேற்ற நாடுளிலும் உள்ள ஜனநாயக ஆட்சிமுறையின் வயது பலநூறு ஆண்டுகளாகும். ஆகவே காலத்திற்குக் காலம் எதிர்கொண்ட மனித சமுதாயத்தின் வளர்ச்சியும் அதற்கான தீர்வாகவும் ஆட்சி ஒழுங்கமைப்பில் சிறப்பான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளனர். அதிகாரப் பரவலாக்கல் என்ற முறையினூடாக பொறுப்புக்களும் பிரித்துக்கொடுக்கப்பட்டன.

ஆனால் நமது நாட்டிலோ ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு தனிமனிதர்களைக் கடவுளாக்கி அவர்களிடம் பொறுப்புக்களை வழங்கிவிட்டு ஒதுங்கும் தன்மை காணப்படுகின்றது. கடந்த காலத்தில் பெறப்பட்ட கடன்கள் அனைத்திற்கும் முழு நாடுமே பொறுப்பானதாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை போன்ற நாடுகளில் ஏனைய அதிகாரங்கள் குறைந்த உள்ளூராட்சி சபைகளின் பொறுப்புக்களும் கடமைகளும் குறைந்து காணப்படுகின்றன. இதனால்தான் தற்போது நாட்டின் மக்கள் எதிர்கொண்டுள்ள அவல நிலைக்கு முகம் கொடுப்பதில் கூட அவை மக்களினால் நேரடியாக விமர்சனங்களிற்கோ நெருக்கடிகளுக்கோ உள்ளாகவில்லை.

இலங்கையின் பொருளாதார சீர்கேடு என்பது இப்போழுது இருக்கின்ற நிலைமையில் சீர்படுத்தக் கூடியதொன்றாக தெரியவில்லை. இதற்கு அரசாங்கமானது அனைத்து அரச நிறுவனங்களையும் பொறுப்பக்கூற வைப்பதுடன் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை வழங்கி அடைவு மட்டங்களைப் பரிசீலிக்க வேண்டும்.

இலங்கையில் மக்கள் 1948களில் இருந்ததைப் போன்ற நிலை இன்று இல்லை. கல்வித்தகைமையிலும் நிர்வாக வியலிலும் அனுபவம் பெற்றுள்ளார்கள். எனவே வளர்ந்து விட்ட பிள்ளைக்கு தந்தை பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுப்பதைப் போல மத்திய அரசு இப்போது செயற்பட வேண்டும். இல்லா விட்டால் எமது நாடு ஜனநாயக ஆட்சி முறையில் வளர்ச்சி காணாத நாடாகி விடும். அதுமட்டுமில்லாமல் அடுத்த தலை முறைக்கும் கடனில் மூழ்கிய இலங்கையே கிடைக்கும். ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் பொழுது

பிரமுகர் : திரு.சந்துரு,

திருமதி சந்துரு மேனகா

நேர்காணபவர்: செல்வராசா நந்தகோபால்

**குரல்வழி ஊடகத்தில் பரீட்சயமான உங்களால் காட்சி ஊடகத்தில் இயங்க எப்படியான முயற்சிகளை எடுக்கவேண்டியிருந்தது? ஏற்கனவே இதில் அனுபவம் உள்ளதா?**

அதற்கு எந்தவிதமான பயிற்சியும் தேவைப்படவில்லை. ஏனோ தெரியவில்லை அது இயல்பாகவே எமக்குள் வந்துவிட்டது. குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு எதுவும் இல்லை. முன் அனுபவம் இல்லை. எங்களை நாங்களே வளர்த்துக் கொண்டோம். ஆனால் இப்போது இந்தத்துறை பற்றி நிறைய கற்றுக்கொள்கிறோம்.

**குடும்பமாக இத்துறையில் இயங்குவதில் உள்ள சாதகபாதகங்கள் என்ன?**

சாதகம் இயல்பாக வேலை செய்யவும், பேசவும், புரிந்துணர்வோடு நடக்கவும், நேரகாலம் பார்க்காமல் உழைக்கவும், ஒன்றாக எந்த நேரத்திலும் திட்டமிடவும் முடிகிறது. பாதகம் என்று நாம் அறிய எதுவும் இல்லை.



**இணையத்தில் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கும் பலவற்றுக்கு மத்தியில் தங்களால் இத்துறையில் போட்டியிட்டுத் தக்க வைக்க முடியும் என்ற துணிச்சல் எவ்வாறு தோன்றியது?**

எங்கள் மீதும் எம் திறமை மீதும் நாம் கொண்ட அசைக்க முடியாத தன்னம்பிக்கை அத்தோடு குடும்பம், கடவுளின் பக்கதுணை உண்டு என்ற நம்பிக்கையும் துணிவும் தான் காரணம்.

**அறிவிப்பு, நடிப்பு என்பதைத் தாண்டி வேறு எந்தத்துறையில் உங்களை அடையாளப்படுத் தலாம்?**

எந்தத் துறையாக இருப்பினும் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் எனும் நம்பிக்கை உண்டு. முடியும் என்று நினைத்தால் முடியாதது எதுவும் இல்லை. ஆனால் தற்போது ஊடகத்துறையில் மாத்திரமே அனுபவம் உண்டு.

- **எதிர்காலத்தில் சந்துரு மேனகாவிடமிருந்து வேறுவகையான படைப்புக்களையும் நாம் எதிர்பார்க்கலாமா? அது எப்போது?**

நிச்சயமாக நிறையத் திட்டங்கள் உண்டு. வித்தியாசமான இன்னும் பிரமாண்டமான நிறையப் படைப்புகள் விரைவில் வெளிவரும்.

- **இன்றைய ஊடகவெளியை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஒரே மாதிரியான பாணியில் அனேகமாக செயற்படுகிறார்கள். ஆனால் அவ்வாறு செல்லாமல் கொஞ்சம் வித்தியாசமான பாணியை உருவாக்க வேண்டும். இப்போது உலகமே சமூகவலைத்தளங்களை அதிகமாக நாடுகிறது எனவே இவ்வாறு மாறிவரும் நிலையில் நம்மை அதற்கேற்றால் போல் மாற்றியமைக்க வேண்டும்.

- **உங்களுடைய படைப்புகளுக்கான மையக் கருத்தை எங்கிருந்து உள்வாங்குகிறீர்கள்? இதற்கு உங்களைத் தவிர்ந்த வேறு யாராவது பங்களிக்கிறார்களா? (அதாவது குழு போன்று)**

நிறையத் தேடல்தான் காரணம். தேடல் மூலம் கிடைப்பவற்றைப் பயன்படுத்தி எம் எண்ணங்களையும் அவற்றோடு இணைத்து எமக்கேற்றாற்போல் உருவாக்குவோம். இது எங்களின் தனிப்பட்ட முயற்சி மட்டுமே. ஆனால் எங்கள் குடும்பத்தின் ஒத்துழைப்பும் உண்டு.

- **பெரும்பாலும் உங்கள் கதைக்களங்கள் நகர வாழ்வியலை மட்டுமே மையமாக வைத்து இயக்குவதன் காரணம் என்ன? மாற்றங்கள் நிகழ்த்த நீங்கள் உத்தேசித்துள்ளீர்களா?**

அப்படி இல்லை. குடும்பங்களுக்குள் நடக்கும் விடயங்கள் பொதுவானவைதானே. படப்பிடிப்புகள் எல்லாமே நகரப்புறங்களில் நடைபெறுகிறது. அதற்கு இன்றைய காலகட்டமே காரணம். கொஞ்சம் சுமுகமாக மாறும் போது காட்சிப்படுத்தும் இடங்கள் மாறுபடும்.

- **தற்போது சமூக ஊடகங்களிலே முழுநேரமாகத் தம்மை இணைத்துக் கொண்டுள்ள இளங்கலைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

இந்தத்துறை நிரந்தரமானது. உங்கள் திறமையை முழுமையாகக் காட்டுங்கள். அதற்கு தேடல் முக்கியம். நிச்சயம் சாதிக்கலாம்.

## வாழ்த்துரை




சிரித்திரன் இதழ் யாழ்ப்பாணத்தில் புதுப்பொலிவுடன் வெளிவருவதில் உவகை கொள்கிறேன். மனிதன் சிரிப்பதனால்தான் மன அழுத்தங்களைக் குறைக்கலாம் என்பதற்கு தமிழில் ஒரு பழமொழி உள்ளது.

அதாவது "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்." என்பர். அந்த வகையில் நகைச்சுவையாக, விகடமாக, சிந்தனையினைத் தூண்டும் ஓவியங்கள் மூலம் சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை ஆர்வத்துடன் வாசிப்பதற்கு இந்நூல் பலகாலமாக வெளிவரும் அதேவேளை, மீண்டும் வாசகர்கள் கைகளில் தவழும் பாக்கியம் கிடைத்தமை மிக்க மகிழ்ச்சி.

மேலும் மக்களிடையே சிரித்திரன் சிரித்த படி சிறப்பு மலராக வெளிவருவதையொட்டி எனது வாழ்த்துச் செய்தியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்காலக் கணணி யுகத்தில் சிரித்திரன் மலர் புதிய பரிமாணத்தில் மிளிர வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்.

**மருத்துவர் சி.ஜமுனாநந்தா**
**பிரதிப் பணிப்பாளர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை



சிரித்திரன் என்னும் சிற்றிதழ் ஒரு காலத்தில் ஈழத்து மக்களின் வாழ்வியலை அழகாகப் பதிவு செய்த ஆவணமாக அன்று விளங்கியது. அது சிற்றிதழாகத் தமிழ் மக்களின் கைகளிலே தவழ்ந்து களிப்பூட்டியது. தமிழிலே சமகாலத்தில் வேறு செய்தித்தாள்கள் வெளிவந்து கொண்டிருந்தாலும் சிரித்திரன் மக்களைப் பெரிதும் ஈர்க்கின்ற சிற்றிதழாக விளங்கியது. சிற்றிதழ் என்றால் என்ன என்பதைக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி வருமாறு விளக்கியுள்ளது.

"வணிக நோக்கம் அல்லாமல் புதிய கருத்துப் போக்குகள் சோதனை முயற்சிகள் கொண்ட படைப்புக்களுடன் நடத்தப்படும் குறைந்த எண்ணிக்கையிலான வாசகர்களைச் சென்றடையும் இதழ், சிறுபத்திரிகை"

சிரித்திரனுடைய பணியும் இந்த விளக்கத்தை நன்கு உள்ளடக்கியே நடைபெற்றது. ஆனால் அது ஒரு தனித்துவமான இலக்கோடு செயற்பட்டது. மக்களை அவர்கள் அறியாமலே நெறிப்படுத்த வேண்டும் என்ற வகையில் தன் உள்ளடக்கங்களை வகுத்துக் கொண்டது. இந்த வகையில் எழுத்துருச் செய்திகளோடு கோட்டுச்சித்திரங்களையும் இணைத்துக் கொண்டது. குறிப்பாகக் கோட்டுச் சித்திர மாந்தர்களின் சிற்றுரையாடல் மூலமாக அக்கால மக்களின் வாழ்வியற் போக்கை வாசகர் மனங்களிலே பதிய வைத்தது.

'இடுக்கன் வருங்கால் நகுக' என்ற வள்ளுவருடைய கூற்றை மக்கள் நன்குணரும்படி சிரித்திரனுடைய நகைச்சுவையான உரையாடல் எழுத்துரு எல்லோரையும் கவர்ந்தது. அதற்கென ஆசிரியர் பயன்படுத்திய மக்கள் மொழியாடல் மகிழ்வையூட்டியது. சமூகத்தைக் கூர்மையாக நோக்கி நகைச்சுவை கலந்து சொற்களால் நெறிப்படுத்திய சிரித்திரனுடைய பணி காலத்தின் தேவையை அன்றும் இன்றும் நிறைவேற்றுகின்றது. இடையிலே சிரித்திரன் வருகையானது தடைப்பட்டாலும் இப்போது மீண்டும் மிடுக்குடன் உலாவருகின்றது. அதற்காகப் பணியாற்றும் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள் அவர்கள் பணி நீண்ட நெடுங்காலம் இடையூறின்றித் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன். சிரித்திரன் ஒரு சிற்றிதழ் என்ற ஊடகப் பெயருக்கப்பால் ஒரு பண்பாட்டுக் களஞ்சியமாக எதிர்காலத்து எம்முடைய தலைமுறையினருக்கு ஒரு 'முதுசொம்' ஆகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை

**முனைவர் ச.மனோன்மணி**



## யாழ்தேவியில் கேட்டது

■ கோணர் சீற்றில் குந்திக் கொண்டிருப்பவர் எங்கு போகிறார் என்று கேட்டால் கொழும்புக்கு என்றார். கொழும்பு போற மூஞ்சை மாதிரி தெரியவில்லையே! உண்மைதான் நான் சீற் பிடிக்க வந்தனான் கொழும்புக்கு போவது எனது மகள் என்றார்.

■ கோட்டை புகையிரத நிலையத்தில் ரயிலில் இருந்து இறங்கியவர் எல்லா இருக்கைகளிலும் தனது பையைத் தேடினார். தனது இருக்கைக்கு முன்னால் இருந்தவரை விசாரித்த போதுதான் தெரிந்தது. இவர் வவுனியாவில் ஏறும் போது ஒருவருக்கு எழும்பி சீற் கொடுத்தார் அவர் போகும் போது இவரது பையும் எடுத்துச் சென்றார் என்று.

■ கச்சான், கடலை என்று வைத்திருப்பர் புதிதாக யாரையும் நட்புக் கொள்ள விரும்பமாட்டார். அத்தனையும் அவரது வாயில் போட்டு முடிக்கும் வரைக்கும்.

■ பாடசாலையில் இரண்டு மணி மட்டும் வெள்ளை யூனிபோம் போட நாங்கள் பட்டபாடு. எப்பிடித்தான் இரவு பகலாக வெள்ளை யூனிபோமுடன் அலைகிறார்களோ இந்த ரயில்வே ஊழியர்கள்.

■ இவருக்கு இண்டைக்கு ராசி இல்லைப் போல இருக்கு. வழமையா காலுக்கொரு சீற் தலைக்கொரு சீற் எண்டு படுத்துக்கிடந்து வாறவர் இண்டைக்கு கையும் காலும் உழைய நிண்டு வாறார். இருக்கிற எனக்கு உவரைப் பாக்க சந்தோசமாக் கிடக்கு.

■ வீட்டில கிணத்தில நல்ல தண்ணி இருந்தும் ஏணெண்டும் கேளாதவை யாழ் தேவியிலை ஏறினா போத்தல் தண்ணியிலையும் விதவிதமா பார்த்து வேண்டினம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் சிரிப்பு

**மனைவி:** இந்தப் பெற்றோல் விலை
காலத்திலும் காரில் போக வேண்டுமா?
நடந்து போனால் என்ன?


**கணவர்:** நடந்து போவது பெருநஷ்டம்... கடன்
கேட்பார்கள்.



**ஜோதிடர்:** தம்பிக்கு இந்த
வருடம் 2 பங்கு
செலவும் 8 பங்கு
வரவும்.


**வந்தவர்:** இந்த விலைவாசியில்
உது நம்பமுடியாத
சோதிடமாக இருக்கே!





**ஒருவர்:** மணப்பெண் மணவறைக்குத்
தலை நிமிர்ந்து வருகிறாளே!

**மற்றவர்:** காலத்தை உணர்ந்து பேசும்...
பெண்கள் விண்வெளியில்
நடக்கும் காலமையா இது.



உன் அண்ணா கப்பலில் வேலை செய்து பணம்
அனுப்புகிறான்... உன் அப்பா என்ன
செய்கிறார்...?

**தண்ணியில் மிதக்கிறார்.**




**தோழி: உமது கணவரின்
விவசாயம் ஏன்
பாழானது?**

**பெண்: "விவசாயக்
கடன் எடுக்க
அலைந்து திரிந்தார்.
பயிர்கள்
கவனிப்பாரில்லாமல்
கருகிப் போச்சு"**

**நல்லெண்ணத் தூது
போகவேண்டும்
இந்த
நல்லெண்ணைய்
வியாபாரிகளிடம்**

ஏன்

**நல்லெண்ணைய்
விற்கிற விலையில்
எப்படித்
தீபாவளிக்கு
முழுகுவது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### மதிப்பிற்குரிய சிரித்திரனே!

கொரோணாக் காலத்திலும் மிளிர்கின்றாயே வாழ்த்துக்கள்! சிரித்திரனில் வரும் ஆக்கங்கள் நன்று. அதிலும் ஆவணி மாத சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட "படக்கொப்பியும் பயில்வானின் புகழும்" என்ற சிரிகதை என்னை பிரமிக்கவைத்துவிட்டது.




அன்றைய காலகட்டத்தின் ஒரு நிகழ்வை அவ்வளவு சிறப்பாக சொல்லியிருக்கிறார் எழுத்தாளர். அன்று ஒரு திரைப்படம் எவ்வாறு போடப்பட்டது, அதனை எவ்வாறு சனங்கள் பார்ப்பது, எப்படியான உணர்வுகள் ஏற்படும் என்பதை யாழ்ப்பாணப் பேச்சு வழக்கும், வாசிக்கத் தூண்டும் சிரிப்புடனான மொழிநடையும் கொண்டு அவ்வளவு சிறப்பாக எழுதியிருக்கிறார் கதையாசிரியர்.

இப்படைப்பினைத் தந்த கதையாசிரியருக்கு எனது நன்றிகளும் வாழ்த்துக்களும்!

**பூலோகராசா விநாசித்தம்பி,**
**இளவாலை.**

### தகனம்.

சிரிப்புக்கு மட்டுமல்ல மனஉணர்வுக்கும் ஓர் ஆக்கம் இம்மாத சிரித்திரனில் மிளர்ந்திருக்கின்றது. தாய்மை அடையாத ஒரு பெண் தன் கணவனின் தங்கையின் மகனை அன்போடு அரவணைக்கும் காட்சியையும், அத்தோடு கணவன் ஆசையாக கொஞ்சும் ஒரு நீலநிற கண்ணாடி பொம்மை விழுந்து உடைந்து விட்டது எனத் தங்கையின் மகனைத் திட்டுகிற காட்சியும், அதன்பின் கணவன் அவளை "குழந்தைகள்தான் எனக்குப் பெரிது. அதுகளின்ர அருமை உனக்கு விளங்காது... நீ ஒரு... தானே..." என்று அவளை திட்டும் போது அவள் உணர்ந்த மன வேதனையை வரிகளின் ஊடே எடுத்துக்காட்டியிருக்கிறார். விடிந்ததும் எதுவும் நடவாததுபோல் பேசிய காட்சிகள், பின் "இதோ மாலையாகிறது. நீ வருவாய் கணவனும் மனைவியுமாய் நம் வாழ்வு தொடரும். இருளும் விடியும் பகல் தொடரும் மீண்டும் இருளும் பின் விடியும்...!" இப்படியாக தகனம் எனும் சிறுகதை முடிவடைகிறது. ஒரு பெண்ணின் தாய்மை உணர்வையும், தாய்மை பாக்கியத்தை அடையாததால் அவள் படுகின்ற மனவேதனையும் மிக அருமையாக கண் முன்னே கொண்டு வந்திருக்கிறார்.

**பாலசுந்தரம் கீர்த்தனன்,**
**வட்டக்கச்சி,**

### சொல்லாட்சி - நன்றி

சிரித்திரனுக்கு முதலில் எனது நன்றிகள் உரித்தாகட்டும்! **"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகற்கு"** எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க நன்றி சொல்வது தமிழரின் கடமை அதை நாம் மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச் சொல்லாட்சியில் நன்றி எனும் சொல்லைப் பற்றி பல விடயங்கள் கூறப்பட்டிருக்கிறது. நானும் தெரியாத விடயங்களை தெரிந்து கொண்டேன். திருக்குறள், பழமொழிகள், இலக்கியங்கள் எல்லாவற்றிலும் நன்றி என்பது முக்கிய இடத்தை வகிக்கின்றது.




அத்தோடு ஆக்கத்தை வாசித்துக் கொண்டு போகும்போது சிரித்திரன் தனது 6வது இதழை பூர்த்தி செய்துள்ளது என கூறப்பட்டிருந்தது. மேன் மேலும் தனது பணியைத் தொடர என்னுடைய வாழ்த்துக்களும் கூட...

**மயில்வாகனம் காந்தரூபி,**
**புத்தூர்.**

### சந்தியடிச்சமாச்சாரம்

சமூகத்தில் தற்போது நடைபெறுகின்ற யதார்த்தமான, உண்மையான விடயங்களைச் சிரிப்புடனும் யாழ்ப்பாண பேச்சுவழக்குடனும் உரையாடல் மூலம் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இப் பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமைகிறது, அதிலும் இம்மாதத்தில் நீங்கள் கொண்டு வந்துள்ள கருப்பொருளானது மாணவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும் தேவையான ஒன்றே. சூம் வகுப்புகள் நடைபெறுவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் சீராகப் போனாலும், ஏழைமாணவர்கள்கலந்து கொள்வதற்கான வசதிகள் இல்லாமை, தொலைபேசியுடன் அதிக நேரம் செலவிடுகின்றமை அண்மையில் தொலைபேசிக்காகத் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளான் ஒரு மாணவன். இவ்வாறாக பல பிரச்சனைகள் இதற்கு முடிவுண்டா?

**தம்பிராசா இளங்கோவன்,**
**மட்டுவில்.**

**சிரித்திரனுக்கு வணக்கம்!**

சிந்தைக்கும் சிரிப்பிற்கும் துளிர்விட்ட சிரித்திரனே வாழ்க பல்லாண்டு! பயணத்தடையில் நேரம் போகவில்லையென இச் சஞ்சிகையை கையில் எடுத்த போது இதனுடைய அட்டைப்பக்கத்தை பார்த்தவுடன் என் சிந்தை சிந்திக்கத் தொடங்கியது எனலாம். "மூடை நிறைய காசு கொண்டு போனாலும் இப்போது கூடையிலதான் சாமான் வாங்கணும்" எனும் உண்மையினை சமூகத்திற்கு கேலிச்சித்திரத்தின் மூலம் உணர்த்தியிருப்பது மிக அருமை.

**மகேந்திரன் வசந்தா,**
**கல்வியங்காடு,**

## வாழ்த்துரை

சிரிப்புக்கு ஓர் சஞ்சிகை
என்றால் அது நம்
சிரித்திரனே
**"செய் தொழில் தெய்வம்**
**சிரிப்பே சீவியம்"** என
உன் வரவை இவ்வாண்டிலே
தொடர்ந்து உலகெங்கிலும்
வெற்றி நடை போடுகின்றாய்!
காலங்கள் உருண்டோடினாலும்
கோலங்கள் மாறவில்லை என
சுந்தர் அன்று உருவாக்கிய
கேலிசித்திரம் உண்மையை
பறைசாற்றி நிற்கிறது.

**செ.அன்னலிங்கம்**
**கொக்குவில்,**

## சிரித்திரனைப் பற்றிய எனது கண்ணோட்டம்

சிரித்திரன் சஞ்சிகையானது 1963ம் ஆண்டு தொடக்கம் சுமார் 58 வருடங்களாக பல விடயங்களைத் தாங்கி பிரசுரிக்கப்பட்டுவரும் ஒரு மிகச்சிறந்த தமிழ் இதழாகும்.

இது அரசியல், சமூகவியல், இலக்கியம், தத்துவம், பொருளாதாரம், விஞ்ஞானம், கலை, கலாசாரம் போன்ற பல விடயங்களைச் சிரிப்பினூடாகச் சிந்தனையைத் தூண்டி, மக்கள் மனதில் ஆழமாகப் பதியவைப்பதில் தன்னிகரற்று விளங்குகிறது.

நீண்ட பல ஆண்டுகளாக கறுப்பு வெள்ளையில் வெளிவந்த இதழானது, தற்போது புதுப்பொலிவுடன் கண்ணைக்கவரும் வர்ணத்தில் வெளிவருவது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும். அதில் வெளிவரும் ஆழமான கருத்துகளை மனதில் பதியவைக்கும் கதைகளைக்கொண்டே அந்தந்தக்கால சமூகநிலைப்பாட்டைப் பற்றி மிக நன்கு அறியமுடியும். மிகப்பழைய இதழிலுள்ள கதைகளை வாசிக்கும்போது எம்மை அந்தக்கால நினைவுகளுக்கு அழைத்துச் சென்று உணரவைக்கும் வலிமையுடையது.

அதில் வெளியிடப்படும் கதைகள், கட்டுரைகள், மகுடியாரின் பதில்கள், மெயில் வாகனத்தாரின் செய்தி, படங்களுடன் கூடிய நகைச்சுவை துணுக்குகள், மிஸ்டர் மிஸ்சிஸ் டாமோடிரன், சுந்தரச் சிரிப்பு, செய்திச்சோடி போன்ற பல பகுதிகள் எல்லாம் மிகவும் ரசிக்கக்கூடியதாகவும் ஆழ்ந்த கருத்துடையதாகவும் இருப்பது சிறப்பு.

சிரித்திரன் இதழில் விளம்பரங்களையும் அனுமதிப்பதன்மூலம் பிற வியாபாரத்தை அதிகரிக்கச் செய்வதுடன் தனது செலவையும் குறைக்க முயல்வது பாராட்டப்படவேண்டியதே.

நானும் கிட்டத்தட்ட 1970ஆம் ஆண்டிலிருந்து சிரித்திரன் வாசகராகவே இருந்து வருகிறேன். தவிர்க்க முடியாத காரணங்களால் இடையில் சிறிதுகாலம் தடைப்பட்டிருந்தாலும் மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிவருவது எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி என்று கூறுவதில் பெருமைப்படுகிறேன். அண்மையில் நான் பார்த்த ஐந்து இதழ்களில் வெளிவந்த பழைய கதைகள் என்னை அந்தக் காலத்திற்கே அழைத்துச் சென்றது.

சிரித்திரன் மாத இதழானது இனிவருங்காலங்களில் தங்குதடையின்றி வெளிவந்துகொண்டே இருக்க வேண்டும் என்று எமது சிரித்திரன் சஞ்சிகையை மனதார வாழ்த்துகிறேன். நன்றி.

**அன்புடன்,**
**தம்பி ராசலிங்கம்,**
**சிட்னி, அவுஸ்ரேலியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசிய ஹாஸ்யம்



**சண்முகம் : என்ன சாத்திரியாரே இப்போ செயற்கை சந்திரன் செயற்கை சூரியன் என்றெல்லாம் உருவாக்குகிறார்களே... எதிர்காலத்தில் செயற்கைச் செவ்வாய், புதன், வியாழன் எல்லாம் உருவாக்கினா எந்த கிரகங்களை வைத்து பலன் சொல்லப்போறீங்க?**

சாத்திரியார் : அப்போ செயற்கை மனிதரையும் உருவாக்கி விடுவார்கள் அவர்களுக்குச் செயற்கை கிரகங்களை வைத்து பலன் சொல்லலாம் தானே!

**சண்முகம் : ???**

சாத்திரியார் : உங்களுடைய ஜாதகம் நல்ல யோகங்களைக் கொண்டது?

**சண்முகம்: நான் படித்துப் பட்டதாரியாகி பத்து வருடமாச்சு... இதுவரை ஒரு உத்தியோகமும் கிடைக்கவில்லையே!**

சாத்திரியார் : வருகின்ற குரு மாற்றம் உங்களுக்கு பெரும் அதிர்ஷ்டத்தை கொண்டு வரப்போகிறது.

**சண்முகம்: பக்கத்து வீட்டு பரமகுரு மாறாமல் இருக்கும் வரை எனக்கு கஷ்டம் கஷ்டம் தான்!**

சாத்திரியார் : ஜலதோசத்திற்குப் பரியாரியிடம் மருந்து வாங்கப் போறன்.

**சண்முகம்: சனிதோஷத்திற்கு சாத்திரியாரிடம் பரிகாரம் கேட்கப்போறன்.**

சாத்திரியார் : உங்கள் ஜென்ம வீட்டிற்கு நாலாம் வீட்டில் இருக்கும் சந்திரன் உங்கள் வீட்டைப் பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல...!

**சண்முகம் : எப்படி அவ்வளவு கரெக்டா சொல்லுறீங்க நாலாம் வீட்டில் இருக்கும் சந்திரன் என்ரை மூத்த மகளை எப்போதும் பார்த்தபடியே திரிகிறவன்.**

---

# பழமொழிகளும் அதன் அர்த்தங்களும்!

பழமொழிகள் பல வகையான அர்த்தங்களைக் கொண்டிருக்கும் அதே வேளை அவற்றின் இருவகையான பொருள் கொண்ட தன்மை பல இடங்களில் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டு, அதன்படி ஒழுகுவோரும் உண்டு.

எனவே பழமொழிகள் சொல்லப்பட்டதன் உண்மையான நோக்கம் என்ன? அது கூற விளையும் கருத்து என்ன என்பதை கடந்த இதழில் பார்த்தோம். அதேபோல் இம்முறையும் சில பழமொழிகள் வாசகர் பார்வைக்காக தருகின்றோம்.

## களவும் கற்று மற.

**பொருள்:** தீய பழக்கமான களவு (திருட்டை) நாம் கற்றுகொண்டு, மறந்து விட வேண்டும்

**உண்மையான பொருள்:** களவும், கத்தும் மற.

களவு - திருடுதல் கத்து - பொய் சொல்லுதல். தீய பழக்கமான திருடுதல், பொய் சொல்லுதல் இவற்றை ஒருவன் தன் வாழ்நாளில் மறந்து ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

## சேலை கட்டிய பெண்ணை நம்பாதே!

**பொருள்:** சேலை கட்டும் பெண்களை நம்பாதே!

**உண்மையான பொருள்:** சேல் அகட்டிய பெண்ணை நம்பாதே!

சேல் என்பது கண்ணை குறிக்கும். கணவன் உடனிருக்கும் போது, (சேல்) கண்ணை அகட்டி வேறொருவனைப் பார்க்கும் பெண்ணை நம்பக் கூடாது.

## அரசனை நம்பி புருசனைக் கைவிட்டது போல

**பொருள்:** அரசனை நம்பிக்கொண்டு, தன் கணவனை கைவிட்டது போல.

**உண்மையான பொருள்:** அரசினை நம்பி புருசனைக் கைவிட்டது போல

அரசினை என்பது அரச மரத்தைக் குறிக்கும். திருமணமான பெண்கள் பிள்ளைப்பேறு பெற அரச மரத்தை சுற்றுவார்கள். கட்டிய கணவனை கவனிக்காமல் வெறும் அரச மரத்தை சுற்றுவது பயன்தராது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எவர் சதி?

காலகாலமாக நாமும் கண்டு வந்த கனவுகள்
கற்பனையில் சித்திரமாய் ஒட்டிநிற்கும் நினைவுகள்
யாதுமே பலித்திடாதும் கையில் சேர்ந்திடாமலும்
நம்மை ஏய்ப்பதேனோ? என்று ஏக்கம் தீர்க்கும் நனவுகள்?

ஆனையின் பசி எமக்கு சோளப்பொரியே வாய்த்தது.
ஆசை கோடி நெஞ்சிலேங்க... அற்பபிச்சை சேர்ந்தது.
தேனைத் தேடியே முயன்றோம் சக்கை தானே மிஞ்சுது
சேர்த்த ஆசை எச்சில் கொண்டு எப்படி நாம் வாழ்வது?

கானல்நீரைத் தேடி ஓடித் தாகம் தீரும் என்கிறோம்.
கால்கள் போகும் பாதை எங்குசேரும்... யாவர்
அறிகுவோம்?
வேனில் மாரி வந்துமென்ன என்றும் வெந்து தீர்க்கிறோம்.
மீட்சியற்ற 'சாதகத்தை' என்ன செய்து மாற்றுவோம்?

மேய்ப்பரில்லை மீட்பரில்லை மந்தைகளா?யெம்குடி
மேய்ச்சலுக்கும் தரவையில்லை... சாண்வயிற்றுக்கெதுவழி?
ஓய்ந்து போகுதெம் முயற்சி... மாறுமோ நம் தலைவிதி?
உண்மை நீதி தர்மம் எம்மைத் தள்ள...செய்ததார் சதி?

தனபாலசிங்கம் ஜெயசீலன்
யாழ்.மாநகர ஆணையாளர்

# முகத்தை இழத்தல்

இறுதியில்
நான் ஏதோ சாதித்து விட்டதாக
அம்மா பெருமை கொண்டாள்
ஓவியப் போட்டியில் எனது மகள்
வென்றுவிட்டாள்
இந்தப் பிரபஞ்ச வெளி
முழுதும் உரக்கச் சொன்னாள்
பெரும் புன்னகை
உரத்த சிரிப்பு
அவள் தங்க நிற பற்கள்
தெரிந்தன
யார் அறிவீர்
அழகாய் வரையக் கூடியவள்
நான் மட்டுமே
அழகிய வண்ணங்களை
நான் அழித்து எறிகின்றேன்
அவர்களுடைய இடத்தில்
மோசமான ஓவியத்தை
வரைகின்றேன்
மோசமான ஒன்று
நான் சொல்லியாக வேண்டும்
ஆனால்
புன்னகையில் மிளிரும் என் தாயின்
முகத்தை கிழிக்க நான்
விரும்பவில்லை


ஆங்கிலம் - Janet S. Wong
தமிழில்- கோகுலராகவன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரமானந்தம் பகிடிகள்



**பெரியவர்**:- தம்பி
உன்ரை எதிர்கால
இலட்சியமென்ன?
டாக்டரா அல்லது
எஞ்சினியரா.


**மாணவன்**:- ஐயோ அந்த
நினைப்பெல்லாம்
இப்ப இல்லை.
சீன உணவு தயாரிக்கும்
Chef ஆக
வருவது

**பெரியவர்**:-. ?? ?? ??



**பாலன்**. ஏன் பிள்ளைகள் தகப்பனை அழ
அழ இழுத்துச் செல்கிறார்கள்

**சீலன்**:-Lock down முடிந்தும் வேலைக்குப்
போக மாட்டேன் என்று
அடம்பிடிக்கிறாராம்



**நோயாளி**:- டாக்டர் ஒரே வாந்தியும் மயக்கமுமா வருது.

**டாக்டர்**:- நேற்று என்ன சாப்பிட்டனீர்

**நோயாளி**:- அந்த சைனாக்காரன்ர ரெஸ்ரோரன்டில
பாம்புக்கறிப் பிரட்டலும் தவளை சூப்பும் சே
பொரியலும்.

**டாக்டர்** :- உமக்கு புதுப்பழக்கம். ஒவ்வெ
பழக வேணும்.



**புரோக்கர்**:- என்ன மணியண்ணை மகளுக்கு
மாப்பிள்ளை பாத்திட்டியளே.

**மணியண்ணை**:- ஓம் ஜிங் பிங்கின்ரை மகனைப்
பாத்திருக்கிறன். வாற கிழமை கலியாணம்.



**கீதன்**:- அவர் ஏன் எந்த நேரமும் AC
அறைக்குள்ளேயே இருக்கிறா

**மதன்**:- அவர்தான் காட்டை விற்று
பணக்காரர் ஆனவராம்



**மதன்**:- எதிர்காலத்தில்
இலாபம் தரும்
தொழிலொண்டு
சொல்லுங்கோ.

**மாலா**- பாம்புப்பண்ணை
தவளைப்பண்ணை
பல்லிப்பண்ணை
நத்தைப்பண்ணை
வைப்பது.

**மதன்**:- ?? ?? ??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.ப.வேந்தன்

# விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்...

கிளிசரைகெட்ட நாயள். ஏனடா உங்கடை கொப்பன்மாற்றை வேட்டியைக் கொழுத்துறதுதானே என்ரை வேட்டிதானா உங்களுக்கு கிடைச்சது ஆள்ஆரெண்டு தெரிஞ்சுதெண்டா தேங்காய் சிரட்டேக்கை கிடக்கிற எண்ணைச் சீலைக்குப் பதிலா அவன்ரை தலை கிடந்து எரியும்.


வேட்டியை மடிச்சுக்கட்டி வெறும்மேலோடை நிண்டு கத்திக் கொண்டு நிண்ட மரத்தாரைத்தான் அண்டைக்கு ஊரே பிராக்குப் பாத்தது.

ஏனடி மரத்தான் கத்திறான் எண்டு வாசலுக்கை நிண்ட அம்மா கேக்க கடைக்காற பூமணி அக்காதான் சரியான தகவல் சொன்னவா.

அதொண்டும் இல்லை அன்ரி உந்தப் பொடி பெட்டையள் கோயிலடியிலை பந்தப்பானை கொழுத்தப் போறம் எண்டு மரத்தான்ரை கொடியிலை காயப்போட்ட பருத்தி வேட்டியை வேலிக்காலை தடியப் போட்டு இழுத்தெடுத்து கொழுத்திப் போட்டாங்கள். விசயம் தெரிஞ்சு மனுசன் கூத்தாடுது.

உதுக்கு அவற்றை ரண்டாவது பெடி கௌதமன்தான் ஐடியா குடுத்ததாம். இப்ப மனிசன் பெடியை தேடிக்கொண்டு திரியுது எண்டு சொல்ல சுத்தி நிண்ட பெண்டுகள் எல்லாம் சிரிச்சினம்.

விளக்கீடு வந்தா எங்கடை ஊரிலை வருசா வருசம் இப்பிடி ஏதாவதொரு கூத்து நடக்கும். இப்பிடித்தான் போன வரியத்துக்கு முதல் வரியம் கனகக்கா ரீச்சர் வீட்ட பொடியள் சுத்தின பந்தம் பட்டு வேலி எரிஞ்சுபோக அந்த மனிசி ஒப்பாரி பாடிக் கொண்டு திரிஞ்சது தை வரைக்கும் ஊருக்குள்ள உதுதான் கதை.




போனவரியம் மில்கார இளங்கோன்ரை சாறத்திலை நெருப்புப்பட்டு அவன்பாவி யட்டியோடை ஒழுங்கை முழுக்க ஓடித்திரிஞ்சவன்.

இப்பிடி விளக்கீட்டுக் கதைகள் ஏராளம். உண்மையிலை அப்பத்தைய விளக்கீட்டுக்கும் இப்பத்தைய விளக்கீட்டுக்கும் நிறைய வித்தியாசம். காலம் மாறேக்கை எல்லாம் மாறும்தான். ஆனால் பழசை நினைக்கேக்கை மனசில என்னவொரு ஆனந்தம்.

ச்சா... அது ஒரு காலமப்பா.

சொன்னா நம்பமாட்டியள் எங்கடை எல்லா பண்டிகைகளும், மாதிரி விளக்கீட்டுக்கும் நிறைய கதைகள் சம்பவங்கள் கிடக்கு. அதையெல்லாம் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கிட்டா விடியும்.

என்னைப் பொறுத்த வரைக்கும் விளக்கீடு எண்டா அது எங்கடை அப்பாக்குப் பிறகுதான். நாராயன்ரை வீட்டிலை விளக்கீடு பாக்கவெண்டே சின்னஞ்சிறுசுகள் பெடி பெட்டையள் எண்டு ஒருக்கா வந்திட்டுத்தான் போவினம். இப்ப மாதிரி எண்டா போனிலை படம் எடுத்து வைச்சிருப்பினம். அப்ப படம் எடுக்கிறதே பெரிய விஷேசம் எண்டதாலை அதுக்கும் குடுப்பனை இல்லை.

அப்பான்ரை விளக்கீடு படு விஷேசமா இருக்கும். முதல் நாளே மனிசன் நல்ல பூவரசம் தடியள் அளவா வெட்டி சீவி வைக்கும்.

புது பருத்தித்துணி வேண்டித்தான் திரிச்சீலை சுத்தும் அதைப்போலை வருசாவருசம் புதுச்சுட்டியள்தான் வேண்டுவார். அம்மா களுவி வைச்ச போன வரிய சுட்டியள் எல்லாம் தாவாரத்திலை தொங்கும். அதைப்போலை வாழைத்தண்டு தெரிவுசெய்து வெட்ட அரைநாள் பிடிக்கும். செத்தல் தேங்காய் பார்த்து தானே உரிச்சு எடுத்து வைப்பார். அது பெரிய ஏற்பாடு நான்தான் அவற்றை கையுக்கையும் காலுக்கையும் கிடந்து இழுபடுவன்.

வேலை செய்து கொண்டே அப்பாட்டை நிறைய விசயங்கள் படிச்சிடலாம். அவர் என்ன படிச்சவர் எண்டு தெரியாது ஆனா எதைக் கேட்டாலும் பதில் சொல்லிடுவார்.

ஏனப்பா இருபத்தேழு சுட்டி மட்டும் பெரிசா வேண்டி தனிய வைச்சிருக்கிறியள்?

அது தம்பி சாத்திரத்திலை சொல்லியிருக்கு விளக்கீட்டுக்கு இருபத்தேழு தீபம் கட்டாயம் இருக்க வேணும் எண்டு.

அதையும் சும்மா கண்டபடி வைக்கக் கூடாது. அதுக்கும் ஒழுங்குகள் இருக்கடா, முத்தத்திலை நாலு குசுனிக்கை ஒண்டு விறாந்தேக்கை ஒண்டு, பின் கட்டில இரண்டு, குந்திலை இரண்டு, துளசி மாடத்திலை இரண்டு, நிலைப்படிக்கு இரண்டு, சாமிப்படத்துக்கு கீழை இரண்டு, மற்றது வாசல்லை ஒண்டு அதைத்தான்ரா ஜெம தீபம் எண்டு சொல்லுறது.

இந்த இருபத்தேழு விளக்கும் இருபத்தேழு நட்சத்திரங்களைக் குறிக்குமடா எண்டு நீண்ட விளக்கம் தருவார்.

இதை ஏன் எல்லாரும் கொண்டாடீனம்?

அதடா எங்கடை முன்னோர்கள் வெளிச்சத்தை கடவுளா கும்பிட்டவை. தீபமேத்துறது ஒரு வழிபாட்டு முறை. தமிழரின்ரை முதல் மாசம் கார்த்திகை எண்டும் அதைத்தான் திருக்கார்த்திகை விளக்கீடு எண்டு கொண்டாடுறதெண்டும்




சொல்லுறவை விளக்கீட்டைப் பற்றி சங்ககால இலக்கியங்களிலையும் பாடியிருக்கிறாங்கள். அதோடை சிவனை நெருப்பெண்டும் சொல்லுறவை.

இதுக்கு விஞ்ஞான விளக்கமும் இருக்கடா கார்த்திகை மாதம் மழை முடிஞ்சு ஒயுற நேரம் காணியள் வளவுகள், குளம், குட்டையளுக்கை பூச்சி புளுக்கள் பூரானுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு விஷங்கள் வெளிக்கிட்டுத் திரியும். அதுகளை வரவிடாமல் செய்யிறதுக்குத்தான் உதுகளைக் கண்டுபிடிச்சது எண்டும் சொல்லீனம்.

இப்பிடி கன கதைகள் இருக்கடா எண்டு பெரிய பிரசங்கம் வைப்பார்.

உண்மைதான் எங்கடை சனங்களுக்கு உந்தக் கதைகள் ஒண்டும் தெரியாது. ஆனா ஒண்டு, தெரிஞ்சோ தெரியாமலோ இண்டைக்கு வரைக்கும் உதுகளைச் செய்து வாறது பெரிய சந்தோசம்.

எந்த விளக்கீடு மறந்தாலும் எனக்கு ஒரேஒரு விளக்கீட்டை மட்டும் மறக்க ஏலாது. இதைச் சொன்னா நீங்கள் சிரிப்பியள் ஆனா எனக்கு கவலைதான் வரும் பின்ன இருக்காதா சும்மா விசயமா அது.

94ஆம் ஆண்டு எண்டு நினைக்கிறன் அப்ப எனக்கு 16 வயசு O/L படிச்சுக்கொண்டு இருக்கிறன். அப்ப நாங்கள் கிளிநொச்சிலை இருந்தனாங்கள். எங்கடை ஊருக்குள்ளை மொத்தம் 30 வீடுதான் அதுக்கு பேரே முப்பது வீட்டுத் திட்டம்தான்.

ஒரு பக்கம் முழுதும் வீடுகள்.

முன்பக்கம் எல்லாம் வாழைத் தோட்டம். எங்கடை வீடு 14ஆம் நம்பரிலை இருந்தது.

எங்கடை எரியாவிலை என்னையும் சேர்த்து அறுவது எழுவது பெடி பெட்டையள் இருக்கும். அந்தக் குடியிருப்பையே தலைகீழா புரட்டி வைப்பம்.

பொதுவா 13ஆம் நம்பர் வீட்டில பேயள்தான் இருக்கிறதெண்டுவினம். ஆனால் எங்கடை வீட்டுக்கு பக்கத்து வீட்டிலை தேவதைகள் குடியிருந்ததுகள் ராதிகா, ரதீபா இரண்டு பேரும் இரணைதான் ஆனா ஒரே மாதிரி இல்லை.

ராதிகாவை விட ரதிபா கொஞ்சம் எடுப்பா இருப்பா அவாக்கு எடுப்பும் கூட, என்ரை வீட்டுக்காரர் எனக்கு அவளைத்தான் பட்டம் சொல்லித் தெளிப்பினம்.

முந்தியெண்டா எனக்கு கெட்ட கோவம் வரும். பிறகு பிறகு கூப்பிடா கொஞ்சம் சந்தோஷமா இருக்கும். அவளும் என்னைக் காணேக்கை ஒரு மாதிரித்தான் சிரிக்கிறவள். பள்ளிக்கூட வாக்கிலை கொய்யாப்பழம் எல்லாம் கொண்டு வந்து தாறவள்.

உப்பிடித்தான் அண்டைக்கும் விளக்கீடு வந்தது எங்கடை குடியிருப்பு விளக்கீடு கொண்டாட பெரும் அமளிதுமளியா றெடியாகிக் கொண்டிருந்திச்சு. ஒவ்வொருத்தரும் வீட்டு வாசல்வழிய வாழமரம், பப்பாமரம் எண்டு மரங்களை நட்டு பந்தங்கள் கட்டி மும்முரமா வேலை நடந்துகொண்டிருந்தது.

மம்மலாக ஊரே சும்மா தீப ஒளியிலை தேவலோகமா தெரிஞ்சுது. எங்கடை செற்பெடியள் ஆறெழு பேர் எல்லாற்றை வீடுவழியவும் எப்பிடி எப்பிடி விளக்கேத்தியிருக்கெண்டு பாக்க வெளிக்கிட்டம். ஆனா உண்மையிலையே அதுக்கு போறேல்லை.

*....நாசமாப்போச்சுது உவள் ரதீபாவும், ரீச்சற்றை பெடி விமலனும் வாழைச்சருகுக்கை இருட்டுக்கையிருந்து கதைச்சுக் கொண்டிருந்ததுகள். எனக்கு தூக்கிவாரிப் போட்டது...*



தம்பர்: என்ன ஒரே யோசனையாக இருக்கிறாய்?
வம்பர்: என்ன வாழ்க்கையடா இது? கடையிலை பால்மா வாங்கப் போனால் அதுக்குத் தட்டுப்பாடாம்! தியேட்டரில சினிமா பார்க்கப் போனால் அதுக்கும் கட்டுப்பாடாம்...!

தீப்பந்த ஒளியிலை ஒவ்வொரு வீட்டு வாசல்லையும் நிண்டு விளக்கு கொழுத்துற பொம்பிளைப் பிள்ளையள் அந்த விளக்கொளியிலை சும்மா தேவதை மாதிரி இருப்பாளுகள். அதைப் பார்க்கத்தான் போறது.

இவள் ரதீபாவும் முழுப் பாவாடை சட்டை போட்டு தலையிலை பூவெல்லாம் வைச்சுக் கொண்டு தேப்பனோடை வாசல்லை நிண்டு விளக்கு கொழுத்தினவள்.

சும்மா தளபதி படத்திலை வாற சோபனா மாதிரி கிடந்திது. வாசல்லை கையிலை சுட்டியைத் தூக்கிக் கொண்டு வரேக்கை

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும் பனித்த சடையும்"... எண்டு என்ரை மண்டைக்குள்ளை இளையராஜா வயலின் வாசிச்சார்.

கொஞ்ச நேரத்தாலை ஆளைக் காணேல்லை. கன நேரத்துக்குப் பிறகு ரதீபான்ரை அம்மாட்டைக் கேட்டன். அன்ரி எங்கை ரதீபா எண்டு. அவள் அத்தை வீட்டை போட்டாள் எண்டு சொன்னா அவளின்ரை அத்தை வீடு 27ஆம் நம்பரிலைதான் இருக்கு. சரியெண்டு நானும் பெடியளோடை வெளிக்கிட்டன்.

25ஆம் நம்பர் வீடு ஆரோக்கியத்தின்ரை வீடு சரியான தண்ணிச்சாமி. அவனுக்கு அம்பது கிராம் எண்டும் ஒரு பட்டப்பெயர் இருக்கு. சரியான கசவாரம். அவன்ரை வீட்டு வாசல்லை மரவள்ளித்தடியை மூண்டாகிளிச்சு அதிலை ஒரு தேங்காய் பாதியை வச்சு கொழுத்திக்கிடக்கு. ஒருத்தரையும் காணேல்லை. கங்காதான் சொன்னான். "டேய் அரோக்கியத்தின்ரை தேங்காய்ப்பாதி சும்மா அரைப்பதத்திலை வெந்து வாசம் வருகுது எடடா சாப்பிடுவம் எண்டு. நான் மாட்டன் எண்டுட்டன்.

பார்த்தீபன்தான் சொன்னான் எடடா ஒண்டும் வராது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*நீங்கள் சராயம் குடிப்பதை நிறுத்தி விட்டதாகக் கேள்விப்பட்டேன்.*

***சந்தோஷம் எப்படி திடீரென்று உங்களால் நிறுத்த முடிந்தது?***

*அதொன்றும் பெரிய விடயமல்ல... பேசாமல் கசிப்புக் குடிக்கத் தொடங்கிவிட்டேன்.*

## இலங்கை சிக்கன வாழ்வு வழிகாட்டி

01. குழந்தை பெறுவதைப் பிற்போடுதல்.

02. இரண்டு வேளை மாத்திரம் உணவு உட்கொள்ளல்.

03 . உள்ளாடைகள் அணியத் தேவையில்லை.

04. தூரப்பயணங்களைத் தவிர்த்து விடுங்கள்.

05. பால்தேநீர் குடிப்பதற்கு பால்மா, தேயிலை இல்லாததால் உள்ளூர் பால்மா, இலைவகைகளை கண்டறிந்து பருகுங்கள்.

**- தேவா**

## தேடல்

ஒருநாள் நடுநிசியில் முல்லா வீட்டை விட்டு வெளியேறி வீதியில் சுற்றித் திரிந்தார். முல்லாவைக் கண்ட காவலாளி 'முல்லா நடுநிசியில் வீதியில் எதைத் தேடிக் கொண்டிருக்கின்றீர்கள்' என கிண்டலுடன் கேட்டான். முல்லாவோ 'எனது தூக்கம் ஓடிவிட்டது' அதைத்தான் தேடிக் கொண்டிருக்கின்றேன்' என்றார் நகைப்புடன்.

-அல்தமிஷ்



நான் பாக்கிறன் எண்டு. கண்ணா மெல்ல மெல்ல சும்மா பிராக்குப் பாக்கிற மாதிரிப் போய் தேங்காயை எடுக்க ஆரடா அது தேங்காயை எடுக்கிறதெண்டு முத்தத்து வாங்கிலை படுத்திருந்த ஆரோக்கியம் கத்திக்கொண்டு எழும்பேக்கை கீழ விழுந்து போனான்.

டேய் அம்பது கிராம் எழும்பீட்டுது. ஓடுங்கடா எண்டு கத்திக்கொண்டு கண்ணா தேங்காய் பாதியொடை ஓடிவர ஆளுக்கொரு பக்கமாய் ஓடி ஒளிஞ்சிட்டம். தேங்காய் பாதியை எடுத்ததை விட வாங்கிலை விழுந்த நோவும் அம்பது கிராம் எண்டு கூப்பிட்டதும் ஆரோக்கியத்துக்கு கடும் கோபம். நட்டுவைச்ச மரவள்ளியைப் புடுங்கிக் கொண்டு ஒழுங்கை முழுவதும் ஓடிச் திரிஞ்சான் பாவி.

நான் தனிய மாட்டீட்டன் ஒரு மாதிரி ஓடிப்போய் முன்பக்கத்தில வாழைத் தோட்டத்திலை வாய்க்கால் சருகுகளோடை படுத்துக் கிடந்தன் பின்னாலை குசுகுசுவென்று சத்தம் கேட்டது. ஆரடா உதுக்குள்ளை எண்டு காது குடுத்துக் கேட்டன். நாசமாப்போச்சுது உவள் ரதீபாவும், ரீச்சற்றை பெடி விமலனும் வாழைச்சருகுக்கை இருட்டுக்கையிருந்து கதைச்சுக் கொண்டிருந்ததுகள் எனக்கு தூக்கிவாரிப் போட்டது என்ரை ஐயோ எண்டு கத்த வேணும் போல கிடந்தது. கத்தினா ஆரோக்கியம் கண்டு பிடிச்சு வெளுத்துப்போடுவான் எண்ட பயத்திலை கத்தாமல் கிடந்திட்டன்.

அதுகள் கண்டபாட்டிலை குசுகுசுவெண்டு கதைச்சுக் கொண்டிருந்ததுகள் எனக்கெண்டா என்னிலை எண்ணைச்சீலை போட்டுக் கொழுத்தினமாதிரிக் கிடந்தது

அடுத்தநாள் விடிய நான் ரதீபாவை பார்க்க விரும்பேல்லை நேரத்துக்கே பள்ளிக்கூடம் போட்டன்.

வகுப்பிலை சமய வாத்தி வந்ததும் வராததுமாய் முதல்நாள் விளக்கீட்டைப்பற்றி வகுப்பெடுக்க ஆரம் பிச்சார். எனக்கு இருப்புக்கொள்ளேல்லை.

பிள்ளைகளே "திருஞானசம்பந்தர் தனக்கு நிச்சயம் செய்த 'பூம்பாவை' என்ற பெண் திடீரென்று மரணமடைய "விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" என்று பாடினார் எண்டார். சம்மந்தருக்கும் எனக்கும் சம்பவம் வேறையாக இருந்தாலும் பாட்டு பொருந்தும்தானே.

இப்ப சொல்லுங்கோ உந்த விளக்கீட்டை நான் வாழ்நாளில் மறக்கேலுமோ?

உங்களுக்குச் சிரிப்பாக் கிடக்கு எனக்கு...

**முற்றும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்கியச்சிமிழ்

## இன் தமிழ் இனிமை தேடி



நல்லை மன்றாடி மைந்தன்.

எமது மண்ணின் தவிர்க்க இயலாப் பிரதானத்துவத்தோடு காலங்கடந்தும் மிளிர வல்ல தனித்துவம் வாய்ந்த கவிஞர்களிலொருவர் சண்முகம் சிவலிங்கம்.(சசி)

அவரது நீர்வளையங்கள் எனும் தொகுப்பு பல காரணங்களால் எமது வரலாற்றின் ஆவணங்களின் வரிசையில் நிற்கும் ஒரு கவிதை நூல்.

சொல்லும் முறை, மொழிநடை, சொற்பிரயோகம் மற்றும் பார்வை ஆகிய அம்சங்களால் அவரது கவிதைகள் சிறந்து விளங்குகின்றன.

அவரெழுதிய "ஒரு மானுடன் பாடிய பாட்டு" மேற்சொன்ன சிறப்புக்களோடு மனிதமனம், மனச்சான்று ஆகிய இரண்டினதும் இயல்புகளை அடிநிலைப் பண்புகளால் வரித்துக் கொண்டு தனக்கே உரித்தான தனித்தன்மையுடன் நெஞ்சைத் தொடுகிறது.

அக் கவிதையை அதன் முழுமை கலையாத வடிவத்தோடு வாசிக்கும் பொழுது ஏற்படும் அனுபவம் மறக்க இயலாத ஒன்றாக ஒளிர்கிறது.

**ஒரு மானுடன் பாடிய பாட்டு**

"வாளியில் நீரெடுத்து வந்தாய்
வரும் போது
உன் தோளினது சட்டைத் தொடுப்பு வழுவியது
வாளியின் பாரம் வளைந்த உடலோடு
மேலே எடுத்துவிட்டுக்குனிந்தாய்
தனிந்ததுமே
ஏதோ நினைத்தது போல்
என்னை ஓர் முறை
பாதி நிமிர்ந்து தலை சாய்த்துப் பார்த்தாய்
ஓ...
பூவே உனது விழிகளில் பூத்திருந்த
நேயத்துக் கென்ன பொருளை நினைப்பனோ?
வாளியில் நீரெடுத்து வந்தவோர் நாணமோ?
தோளினது சட்டை வழுவிய துணுக்கமோ
ஏதேதோ...?
ஏதோ?
எனக்குத் தெரியாத
பேதலிப்பில் உன்னுடைய பிஞ்சு இதழிடையே
மூடிக்கிடந்த முதிரா முறுவலையும்
ஆயத் தெரியாது அப்பால் நடக்கையில்
ஓ! பூவே
நான் புதிய உணர்வொன்றில்
மானுடன் ஆகி வாய் முணுமுணுத்தேன்
என் நினைவுக் கரங்கள்
உன்னைத் தீண்டவிடமாட்டேன்
என் நினைவுப் பூச்சி உன்னில் ஊரவிடமாட்டேன்
உன் நினைவின் வருடலினால்
என் இதயம் ஆறும்
உன் நினைவின் அதிர்வுகளால்
என் இதயம் பாடும்
ஓம்... ஓம் ஓம் எனது பூவே
என் நினைவுக் கரங்கள்
உன்னைத் தீண்ட விடமாட்டேன்
என் நினைவுப் பூச்சி
உன்னில் ஊர விடமாட்டேன்"

மனித மனம் அலை பாய்ந்து கொண்டிருக்கும் இயல்புடையது. அதிலும் இயற்கையாக ஈர்ப்புக்குரிய விடயங்களில் கட்டறுந்தோடும், மேலுள்ள கவிதையின் முன் பகுதியில் சித்தரிக்கப்படும் காட்சி தற்செயலான ஒரு நிகழ்வுகளைக் காட்டுவது. அந்த நிகழ்வு கவிஞரை ஒரு கணம் நிலைகுலைய வைக்கிறது. அவர் காண நேர்ந்த பெண்ணை அவர் கண்ட விதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மனதைத் தறி கெட்டோட வைக்கக்கூடியதெனிலும் அவரது ஈர்ப்பையும் கவர்ச்சியையும் தாண்டி அந்தப் பெண் மீது ஏற்படும் மதிப்புணர்வு அவரது மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளச்செய்கிறது.

பச்சையான நினைவுகளும் கற்பனைகளும் பூச்சிபோல் அவள் குறித்து ஊர்ந்து செல்ல முடியுமெனிலும் கவிஞரின் நேரிய மனச்சான்று அவ்வாறு நிகழ்ந்து விடமால் கட்டுப்படுத்திக்கொள்ளத் தூண்டுகிறது.

பொதுவாக ஒரு அழகியபெண் சார்ந்த சற்றே எல்லை மீறிய தோற்றத்தைக் காண நேர்வதால் ஏற்படும் மனரீதியான நிலைகுலைய ஒரு நாணயமான மானுடனாகத் தவிர்த்துக் கொள்ள முனையும் ஒருவனின் மனநிலை அழகுணர்ச்சிக் கவிதையில் எடுத்துக்காட்டப்படுகிறது.



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



சிரித்திரன் சஞ்சிகை 1963ஆம் ஆண்டில் உதயமாகி தொடர்ச்சியாக வெளிவரும் அதே வேளை, இவ்வருடம் "புதிய கண்டுபிடிப்புக்களுக்கான வளர்ச்சியகத்தினால்" புதுப்பொலிவுடன் வெளிவரும் சிரித்திரன் சஞ்சிகையின் தீபாவளிச் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தீபாவளியை முன்னிட்டு மலரும் சிரித்திரன் தீபாவளி சிறப்பிதழ் "செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்" என்னும் தாரக மந்திரத்தை தலை மேற்கொண்டு "மண்வாசம் விட்டுப் போகாமல் உள்ளம் மகிழவும் இல்லம் சிரிக்கவும்" சிரித்திரன் தனது பங்களிப்பினை வழங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது. தற்காலத்தில் வாசிப்புப் பழக்கம் அருகிவிட்டது. மாணவர்கள், பெரியோர்கள் என அனைவரும் அதனை ஈடுபாட்டுடன் கைக்கொள்வதில்லை. ஆனாலும் சிரித்திரன் இதழ் சிரிப்புடன் சிந்திக்க தூண்டுவதனால் மக்கள் மத்தியில் மன மகிழ்வுடன் தானும் ஒரு அறிவுச் சஞ்சிகையாக வலம் வருகின்றான்.

தற்போதய சமூகத்தில் பலதரப்பட்ட பிரச்சினை களுக்கு ஒவ்வொரு தனி மனிதனும் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் சமூகத்தின் விரக்தியை போக்கும் வகையில் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பதுடன் அதனூடாக சமூக உள, ஆரோக்கியத்தை பேணுவதிலும் சிரித்திரனின் வகிபாகம் தற்போதய சூழ்நிலையில் மிக முக்கிய தேவையொன்றாகவும் இருப்பது வியந்து பாராட் டத்தக்கது.

மேலும் பல்வேறு வரலாற்றுத் தகவல்கள், அறிஞர் பெருமக்களின் சிறப்புக்கள், இலக்கிய அம்சங்கள், வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு விடயங்களை உள்ளடக்கி வெளிவரும் சிரித்திரன் சஞ்சிகை மக்களைத் தொடர்ந்து சிந்திக்கவும், சிரிக்கவும் துணை நிற்பான் என்னும் மனநிறைவோடு இப்பணியைத் தொடரும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கான வளர்ச்சியகத்தின் நிறுவனப் பொறுப்பாசிரியர், இணை ஆசிரியர்கள், மற்றும் பணியாளர்களைப் பாராட்டி மலரும் சிறப்பிதழுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரி வித்து மகிழ்கின்றேன்.

**நன்றி**

**திரு.கணபதிப்பிள்ளை மகேசன்.**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




“லண்டனிலிருந்து மூலை முடுக்கெங்கும்
உள்ள எம் ஆளுமைகளைத்
தேடும் ஒரு பயணம்...”

உலகை வலம் வரும்
உற்சாகம்
வெற்றிநடை

செய்திகளை உடனுக்குடன் பார்வையிட...

WWW.VETRINADAI.COM

செய்திப்பக்கம் ; சமூகப்பதிவு ஆய்வு ; விளையாட்டு ; உரையாடல்
நிகழ்வுகள் ; வாழ்த்துக்கள் ; உலக சாதனைகள் மற்றும் பல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஒரு உண்மையான இலட்சியவாதி எப்படிப்பட்டவனாக இருப்பான்?**

தனது இலட்சியத்திற்கு இடையூறாக வரும் அனைத்தையும் அலட்சியம் செய்து முன்னேறும் துணிச்சல் மிக்கவனாக இருப்பான்.

**ப.ரஞ்சினி, ஏழாலை.**

**உண்மையான கலைஞன் எப்படிப்பட்டவனாக இருப்பான்?**



பெயர் புகழ் விரும்பாதவனாக வணக்கத்திற்குரியவனாக இருப்பான். தெய்வச் சிலைகளை உருவாக்கும் சிற்பிகள் அதன் பிறகு தமது பெயரைப் பொறித்து வைப்பதில்லையே!

**சி.கமலக்கண்ணன், மட்டுவில்.**

**அரசியல்வாதிகள் - அதிகாரிகள் இவர்கள் பின்னால் திரிவோர் எப்படியானவர்கள்?**

அரசியல்வாதிகளின் பின்னால் திரிவோர் அவர்களுக்கு கைதட்டி காக்கா பிடிப்பார்கள். அதிகாரிகளின் பின் திரிவோர் அவர்களுக்குக் கைதட்டி சேவகம் செய்வர் அவ்வளவுதான்.



**க.செவ்வேள், அரியாலை.**

**தமிழ் அரசியல்வாதிகள் எப்போது ஒருமித்து செயற்படப்போகிறார்கள்?**

தமிழ் மக்கள் அறிவு பூர்வமாகச் சிந்திக்கத் தொடங்கும் போது!

**கி.ராதிகா, பளை.**

**ஏழை எப்போது பொருளீட்டுவான்?**

கனவு காணும் வேளைகளில் மட்டும்.

**தெ.பகீரதன், வட்டுக்கோட்டை.**



**மனிதன் எப்படி வாழ வேண்டும்?**

மனிதனைப் போலல்லாது மனிதனாகவே வாழவேண்டும்.

**செ.ஹரிஸ்நாத், ஆவரங்கால்.**

**தற்போதைய எதிர்க்கட்சியால் நன்மையுண்டா?**

யாருக்கு நன்மையுண்டா என்று கேட்கிறீர்கள்? தமிழ் மக்களுக்கா?... எதுவானாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரே கொள்கைகளை கடைப்பிடிப்பவர்களே...!

**மா.மயூரிகா, சுன்னாகம்.**



**தமிழ்ப் பிரதிநிதிகளின் தலைக்கறுப்பைக் காணவில்லையே?**

தமிழ்த் தலைவர்கள் பெரும்பாலும் நரை, திரை (மூப்பு) என்ற கட்டங்களை எட்டிவிட்டவர்களே! தலைக்கு சாயம் அடிக்க மறந்திருக்கலாம். அதனால் தலைக் கறுப்பைக் காணவில்லை.

**தா.கணபதி, மிருசுவில்.**

**உலகநாயகன் கமலின் அரசியல் தோல்வி பற்றி உங்கள் கருத்து என்ன?**

நடிகர் திலகத்துக்கு அரசியலில் ஏற்பட்ட தோல்வி போன்றதே இதுவும். இருவரும் அரசியல்வாதியாக நடிக்கும் ஆற்றல் மிக்கவர்கள்... அரசியல்வாதியாக வாழத் தகுதியை ஏற்படுத்திக் கொள்ளாதவர்கள்.

**அ.அருணநாதன், கொடிகாமம்.**

**நாளுக்கு நாள் விபத்து மரணங்கள் அதிகமாகி வருகின்றதே... என்ன காரணம்?**

வீதிகளிலேயே மனிதரின் விதியை முடிக்க யமதர்மன் விதித்திருக்கலாம்!

**ப.கீர்த்தனா, பேசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆன்மீகவாதி அரசியல்வாதியானால் என்ன நடக்கும்?**

ஆண்டவனைத் துதித்தவர் ஆள்பவனைத் துதிக்க ஆரம்பித்து விடுவார்.

புவேதநாயகம்,
யாழ்ப்பாணம்.



**விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவே முடியாதா?**

முதலில் கொரோணாவைக் கட்டுப்படுத்தட்டும்... விலைவாசி கொஞ்சமேனும் தானாகவே கட்டுப்பாட்டுக்குள் வரக்கூடும்.

உ.தமிழ்நிலவன், உடுப்பிட்டி.



**விருதுகள், பாராட்டுக்கள், கௌரவங்களைத் தேடி அலைவோர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சன்மானத்திற்காகத் தன்மானத்தை அடகு வைப்போர்.

பெ.மதனகீதன், இரணைமடு.

**நம்மவரிடையே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிமாகி வருகின்றனவே என்ன காரணம்?**

ஆண்கள் தலைதடுமாறி நடப்பதை விடவும் வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

ப.உதயகுமார்,
களுதாவளை.



**நம் அரசியல்வாதிகளில் ஒருவரும் இலட்சியவாதிகளாக இல்லையே...!**

மக்களை அலட்சியம் செய்து அரசியல் நடத்துபவர்கள் எப்படி இலட்சியவாதிகளாக இருக்க முடியும்?

பி.சிவரதன், மாங்குளம்.

**நான் ஒரு எழுத்தாளனாக வர விரும்புகிறேன். அதற்கு என்ன தகுதிகள் வேண்டும்?**

மனிதநேயம், சமூகஅக்கறை, இயன்றளவு சுயமாகச் சிந்திக்கும் திறனையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

து.உஷாந்தினி, பெரியபண்டிவிரிச்சான்.

**இணையவழிக்கல்வி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அதில் இணைந்து கொண்டு கற்பதற்கு வழியற்ற ஏழை மாணவர்களின் நிலை பற்றித்தான் இப்போது நினைக்க முடிகிறது.

ச.கிருஷ்ணமேனன், நல்லூர்.

**அடிக்கடி நாட்டின் அமைச்சர்கள் மாற்றப்படுகிறார்களே...! மாற்றம் ஏதும் நிகழுமா?**

ஆட்சியும், அதிகாரமும் ஒருவரிடம் தானே இருக்கிறது. பதவி மாற்றம் கொள்கை மாற்றம் ஆகாது தம்பி.

அ.ராகவன், விசுவமடு.

**இப்பொழுதெல்லாம் நாட்டில் அட்டவதானி, தசவதானி, சதாவதானி என எவரும் இல்லையே ஏன்?**

வீதிகளில் அவதானமாக வாகனம் ஓட்டத் தெரியாதவர்களால் எப்படி நீங்கள் கேட்கும் அவதானிகளாக மாறமுடியும்.

செ.கவிதா, வட்டக்கச்சி.

**அரசியல்வாதி எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?**

வாய்ச் சொல்வீரனாக அல்ல... வரலாற்றினை மாற்றி அமைக்கும் வல்லமை கொண்ட செயல் வீரனாக...?

அ.கந்தசாமி, வெள்ளவத்தை.



**ஜனனம் மரணம் ஒப்பிடுக பார்க்கலாம்?**

ஜனனம், மரண யாத்திரையின் தொடக்கப்புள்ளி. மரணம் வாழ்க்கை யாத்திரையின் முற்றுப்புள்ளி.

கு.மதிவதினி, கொழும்பு.

**பஞ்சம் ஊழலை ஒழிப்பேன் என்று கூறும் அரசியல்வாதி எப்படிப்பட்டவனாக இருப்பான்?**

தேர்தலில் கட்டுப்பணத்தை மீளப்பெறும் தகைமையற்றவனாக இருப்பான்.

ஜெ.நியாஸ் ஹாரிஸ், நீர்கொழும்பு.

**திருவிழாக்கள் இல்லாத ஆலயங்கள் எப்படி உள்ளன?**

ஆன்மீக அன்பர்களுக்கு அத்தியவசியமான அமைதியுடன் திகழ்கின்றன. பரபரப்பான பக்தியின் உறைவிடமாக உள்ளன.

வே.சியாமளா, கரவெட்டி.

**ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது உண்மையா?**

ஏழையை சிரிக்க வைப்பவனில் தான் இறைவனைக் காண முடியும்.

த.இனியவன், மருதங்கேணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிதொடர

## வாழ்த்துகின்றேன்.!

சிரித்திரனே!!

சுந்தரின் மனத்திலன்று
மலர்ந்த நல் மலர் நீயே!!
"சிரித்திரன்" எனும் பெயரில்
வளர்ந்துவரும் மலர்நீயே!!!

சமுதாயம் சீர்திருத்தம் முதலான
உயர்ந்த இலக்குகளுடன்
உனைப்படைத்த சுந்தர்க்குத்
தீபத்திருநாளில் என் வணக்கம்!

வாசகரின் சிந்தனையில்
நல்லவல்ல கருத்துக்களை
வளர்க்கின்ற(பெ)அரும்பணியைச்
செய்கின்றாய் சிரித்திரனே!

சிரித்திட மட்டுமன்றி நாம்
சிந்திக்கவும் கதை படைப்பாய்!
சீர்திருத்தக் கருத்துக்களை
வளர்த்திடவும் கதை படைப்பாய்!!

கேலிச்சித்திரங்கள் மூலமும்
சீர்திருத்தக் கருத்துக்களை
வாசகரின் உளங்களிலே
வளர்க்கின்றாய் சிரித்திரனே!

செந்தமிழில் பிறமொழிகள்
கலப்பதனைக் கண்டுள்ளம்
கொதிக்கின்ற சிரித்திரனே!
வாழ்கவுன் தமிழ்த் தொண்டு!!

பலதடைகள் தாண்டியின்று
உலாவரும் சிரித்திரனே!
வரும் தடைகள் தகர்த்தெறிந்து
பணிதொடர்வாய் சிரித்திரனே!!

உன்பணிகள் விரித்துரைக்கும்
அறிவாற்றல் எமக்கில்லை!
உன்பணிகள் கருத்துரைக்கத்
தமிழிலும் வார்த்தையில்லை!!

உன்னு(யி)யர்ப் பணிதொடரத்
தீபாவளித் திருநாளில் வாழ்த்துகின்றேன்!!
இன்றுபோல் பல்லாண்டுன்
பணிவளர வாழ்த்துகின்றேன்!!

வாசகரின் உளங்களையுன்
உயி(ய)ர்ப் பணியால் வென்றுனது
வாசகரின் நெஞ்சிலென்றும்
நிறைந்திருப்பாய் சிரித்திரனே!!

-முருகு-

## இறைபுகழ்



ஒருநாள் முல்லாவின் கழுதை எங்கோ காணாமல் போய்விட்டது. முல்லா உரத்த குரலில் இறைவனைப் புகழ்ந்து பாடிக் கொண்டு வீதியில் கழுதையைத் தேட ஆரம்பித்தார். இதனைக் கண்டவர்கள் 'முல்லா உங்களது கழுதைதான் தொலைந்து விட்டதல்லவா, பின்னர் ஏன் இறைவனை புகழ்ந்துபாடிக் கொண்டிருக்கின்றீர்கள்' எனக் கேட்டார். அதற்கு முல்லா 'நானும் அந்தக் கழுதையில் சவாரி செய்திருந்தால் நானும் காணாமல் போயிருப்பேன். அதனால் தான் இறைவனைப் புகழ்ந்து பாடுகின்றேன்' என்றார்.

-அல்தமிஷ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி திருகுதாளங்கள்



விமல் - சந்திரன்ரை பெடியன் ஏன் கூப்பிடக் கூப்பிட பேசாமல் நிக்கிறான்?
கமல் - தீபாவளிக்கு கொழுத்தின வெடியில காதுரண்டும் சிதறிப் போச்சுதாம். நேற்று தகப்பனுக்கு மேல மரம் விழுந்து ஐயோ எண்டு குளறவும் திரும்பியும் பாக்கேல்லையாம்.



குமார் - அவர் ஏன் புது உடுப்பு போட்டிருந்தும் மூஞ்சையை நீட்டிக் கொண்டிருக்கிறார்.?
பாலன் - மனிசி இந்த முறை கௌரிகாப்பு விரதமாம் அதாலை தீபாவளிக்கு மச்சம் சமைக்கேல்லை எண்டு கோவமாம்.



தம்பர் - தீபாவளிக் கொண்டாட்டம் எப்பிடிப் போகுது?
கம்பர் - விலைவாசித் திண்டாட்டத்தோட போகுது.



மாலா : ஏன் இந்த முறை தீபாவளிக்கு உடுப்பு எடுக்கேல்லை?
சீலா : வழமையா எடுக்கிற கடைக்கார ஹுக்கு கொரோணாவாம்.
மாலா : ஏன் வேறை கடையள் இல்லையே?
சீலா : அந்த கடைக்காரர்தானே கடன் தருவார்.



கதிரவேலு : தீபாவளிக்கு ஆடு பங்கு போட்டனியாம் எனக்கு ஏன் சொல்லேல்லை?
கணபதி : காசுக்கு வேண்டிப் பங்கு போட்டிருந்தா சொல்லியிருப்பன் போட்டது கள்ள ஆடு எப்பிடிச் சொல்லுறது?



லீலாவதி - மாலான்ரை பெட்டையள் ஏன் இந்த முறை தீபாவளி கொண்டாடேல்லை?
பங்கயம் - புதுப்படத்திலை நடிகை போட்டுவாற உடுப்பு எல்லா கடையிலையும் தேடி இல்லையாம். அந்தக் கோபத்திலை கொண்டாடேல்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபலமான விளையாட்டுக்கள் தோன்றிய கதைகள்

விளையாட்டுகள் எம்மை வலுவாக்குகிறது. மன அழுத்தத்தை எதிர்த்துப் போராடுகிறது. விளையாடும் போது ஒட்டுமொத்த நல்வாழ்வின் உணர்வை நமக்குத் தருகிறது. மேலும் எதிர்கால மோதல்கள் மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கும், நமது சமூக திறன்களை வளர்ப்பதற்கும் விளையாட்டு நம் மனதிற்கு உதவுகிறது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அதனால்தான் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் அதிகநேரம் விளையாட்டில் ஈடுபடுகின்றனர். இப்படிப்பட்ட நல்ல திறன்களை தரக்கூடிய விளையாட்டுக்கள் தோன்றிய கதைகளை நாம் இன்று பார்ப்போம்.

## காற்பந்தாட்டம்

**19ஆம்** நூற்றாண்டுக்கு முன்பிருந்தே கால்பந்தாட்டம் நடைமுறையில் உள்ளதாக வரலாறுகள் கூறுகின்றன. உலகின் பெரும்பாலானவர்கள் காற்பந்தாட்டத்தினை FOOTBALL என்றே அழைத்தனர். ஆனால் அமெரிக்கர்களுக்கு ஏற்கனவே FOOTBALL என்று ஒரு விளையாட்டு இருந்தது. ஆங்கிலேயர்கள் 19ஆம் நூற்றாண்டுவரை பந்து சம்பந்தப்பட்ட அனைத்து வகையான விளையாட்டுகளையும் விளையாடினார்கள். கிட்டத்தட்ட அனைவருமே அவற்றை FOOTBALL என்று அழைத்தனர். பின்னர், 1863ஆம் ஆண்டில், FOOTBALL ASSOCIATION நிறுவப்பட்டது.



## கூடைப்பந்தாட்டம்

**டாக்டர்** ஜேம்ஸ் நைஸ்மித், என்பவரால் 1891 ஆம் ஆண்டில் YMCA பயிற்சி பள்ளியில் ஒரு உள்ளக விளையாட்டைக் கொண்டுவர வேண்டியிருந்தது. இதற்காக உண்மையான கூடைகள், மரத்தினால் செய்யப்பட்டன. இந்த விளையாட்டு விரைவாக நடுமுழுதும் பரவியது. டாக்டர் நைஸ்மித்-இன் கண்டுபிடிப்பான இவ்விளையாட்டு, 1936ஆம் ஆண்டு பேர்லினில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளின் ஒரு பகுதியாக மாறியது.



## ஹொக்கி



**1600களில்** இருந்த வரலாற்றுச் சான்றுகள் டச்சு மக்கள் பனிக்கட்டி மீது கோல்ஃப் போன்ற விளையாட்டை விளையாடுவதைக் காட்டுகிறது. அமெரிக்காவில், வட இந்தியர்கள் இன்றைய லாக்ரோஸைப் போன்ற ஒரு செயலில் ஈடுபட்டிருந்தனர், ஆனால் அவை உறைந்த குளங்கள் மற்றும் ஏரிகளில் விளையாடப்பட்டன. ஹொக்கி என்பது ஒரு தனி நபர் அல்லது ஒரு சிறிய குழுவினரின் கண்டுபிடிப்பு அல்ல. 1800களில் சுமார் சிறிய நகரமான விண்ட்சரில், நோவா ஸ்கொட்டியா கனடா நாட்டில் தோன்றியதே ஹொக்கி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப்பகிடி



## தெரியாது சார்

அன்று பாடசாலை ஒரே அமைதியாக இருந்தது. வகுப்பு மாணவ மாணவிகள் ஒரே 'கப்சிப்' என்று இருந்தனர். இவ்வளவுக்கும் காரணம் பாடசாலைப் பரிசோதகர் வந்திருந்ததுதான். பரிசோதகர் ஒவ்வொரு வகுப்பாகச் சோதித்துக் கொண்டு வந்தார்.

எங்கள் வகுப்பிற்கு (ஐந்தாம் வகுப்பு) வரும் முறையும் வந்தது வகுப்புக்குள் வந்தவுடனே "தமிழ் மொழியில்தான் கேள்வி கேட்கப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு வினை முற்றிற்கு ஓர் உதாரணம் சொல்லுங்கள் பார்க்கலாம் என்றார்.

நாங்கள் 'தெரியாது' என்று சொல்லிவிட்டோம். பரிசோதகருக்கு வந்ததே கோப ம். பக்கத்தில் நின்று கொண்டிருந்த எங்கள் தமிழ் ஆசிரியரைப் பார்த்து "என்ன படிப்பிக்கிறீர்கள் இங்கே! வினைமுற்றிற்கு ஓர் உதாரணம் கேட்க, எல்லோரும் 'தெரியாது, தெரியாது' என்று சொல்கிறார்களே" என்று எரிந்து விழுந்தார். ஆசிரியரோ அமைதியாக 'பிள்ளைகள் சொன்னதில் என்ன பிழையிருக்கிறது? 'தெரியாது' என்ற சொல்லே வினைமுற்றுதானே என்றாரே பார்க்கலாம்.

**-மின்மினி, அல்வாய்.**

# பதிவுகள்

தாலாட்டு நினைவில் இல்லை
எனினும்
நிலாப்பாட்டும்,
கைவீசம்மா கைவீசுவும்
இன்னமும் நன்றாகவே
ஞாபகத்தில் உள்ளது.

முதல் நாள் பாடசாலை அனுபவம்
அக்கா சொல்லக் கேள்வி
ஆயினும் நினைவில் வரமறுக்கிறது!
இருப்பினும்,
அந்தக் குட்டை வாத்தியாரும்
கரகரத்த குரலொலிக்கேற்ப
அசைந்து மிரளவைக்கும் பிரம்பும்
கனவில் இப்போதும்
பயமுறுத்தும் நினைவுகளே...

புத்தம்புதுப்புத்தகத்தினுள்
எண்ணைதடவி, பக்குவமாய்
வைத்து,
அடிக்கடி 'குட்டி' போட்டு விட்டதா?
எனப் பார்த்து ஏங்கும்
மயிலிறகுக் கதிரின் ரகசியம்
இன்னமும் புரிந்தும் - புரியாத அதிசயம்!

சந்தி வெற்றிலைக்கடைக்காரனின
இளவயது முகத்தை மீள கொண்டுவரும்
முயற்சி அடிக்கடி தோன்றும்...
மிகப்பரிச்சயமான முகம்...
ஆனால் அவரின் இன்றைய
கிழத்தோற்றமே முன்நிற்கும் பிம்பமாக!

சின்னவயதில் ஐயா,
அந்தக் கால அம்மா,
பத்தோ, பன்னிரெண்டோவயதில்
கண்ணாடியில் பார்த்த என் முகம்,
எல்லாமே - பரிணாம வளர்ச்சியின்
தேய்மான படிவங்களாகவே...
ஆயினும் -
ஆலடி வைரவரும்
சிவன் கோவில் மூலஸ்தான அம்மனும்
கட்டுத்தேர்களும்...
பதினாறு வயதில்
என்னுள் பாதிப்பை ஏற்படுத்திய
வகுப்புத்தோழியின்
குறும்புச் சிரிப்பும்
இன்னமும் பதினாறாகவே -
இந்த அறுபதிலும்

- நகைமுகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்திரைக் கதை



நகைக்கடைக் கண்ணாடிப் பெட்டியில் கண்ணைப் பறித்த இரத்தினக் கல்லைப் பார்த்துத் தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது. 'எனக்கு ஏன் மதிப்பில்லை? நானும் ஒரு கல்தானே! என்று ஓலமிட்டது. தெருவோரத்தில் கிடந்த கடப்பாரை கூறியது, 'ஏ குறுணி காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கிறாய். ஆனால், இரத்தினக்கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக் கொண்டிருந்தது"

'அப்படியென்றால்?" என்று இழுத்தது குறுணிக்கல்.

கடப்பாரை சொன்னது,

**'நிறைவாகும் வரை மறைவாக இரு"**

**- காசி ஆனந்தன்**

## கி/பழம்

**காய் முதிர்ந்தால்**

**பழம் என்பார்கள்!**

**மனிதர் முதிர்ந்தால்**

**கிழம் என்பார்கள்!!**

**- முருகு**

## வாழ்த்து செய்தி

**சமூகச் சீர்திருத்தத்திற்கான ஊடகவியலுக்கு புதிய பரிமாணம் தந்தவர் 'சிரித்திரன்' சுந்தர்**



தமிழ் அச்சு ஊடகத்துறையில் புதிய பல பரிமாணங்களுக்கு வித்திட்டவர் மாமனிதர் 'சிரித்திரன்' சுந்தர். ஒரு எழுத்தாளராக மாத்திரமன்றி, கருத்துப்பட ஓவியராகவும் அவர் கொண்டிருந்த பரிமாணம் எமது மண்ணில் மிக அரிதானது.

இயல்பாகவே தான் வாழ்ந்த சமூகத்திலிருந்தே சிந்தனைகளைக் கருக்கொண்ட 'சிரித்திரன்' சுந்தர், கருத்துப்படங்களில்தான் படைத்த பாத்திரங்கள் வழியே தனது சமூகச் சீர்திருத்தத் திற்கான வெளிப்பாடுகளை முன்வைத்த போது, அவை வாசகர்களால் முழுமனதோடு ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, மிகுந்த ஆர்வத்துடன் பரந்த தளங்களிலும் அவை வரவேற்புக்குள்ளாகி யிருந்தமைஒரு வெற்றிகரமான ஊடகவியலாளராக அவரைக் காலத்தால் பதிவுசெய்கின்றது.

தான் வாழும் சமூகத்தின் நலனை மனதில் இருத்தி, அந்தச் சமூகம் கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளையும் தவறான கற்பிதங்களையும் அறச்சீற்றத்தோடு, அங்கதச்சுவை மிளிர அவர் முன்வைத்தவிதம் இன்றுவரை ஈழத்தமிழ் அச்சு ஊடக உலகில் எவராலும் பொருத்தமாகப் பிரயோகிக்கப்படாத உத்தியாகவே இருந்து வருகின்றது.

ஈழத்திலிருந்து ஒரு சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவருவதென்பது மிகப்பெரும் சாதனையாகக் கருதப்படும் சூழலில் முப்பது வருடங்களுக்கும் அதிகமாக 'சிரித்திரன்' வெளிவந்ததும், பல எழுத்தாளர்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அறிமுகப்படுத்தியதும் என்றும் மறக்க முடியாத வரலாற்றுப் பதிவுகளாகும். ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்னர், 'செய்தொழிலே தெய்வம் சிரிப்பே சீவியம்' என்ற விருதுவாக் கியத்தை தாங்கி இன்றும் வெளிவந்து கொண்டிருக்கும் 'சிரித்திரன்' மாமனிதர் சிவஞான சுந்தரத்தை என்றும் எமக்கு நினைவூட்டி நிற்கும். வாழ்த்துக்கள்..!

**கலாநிதி சி.ரகுராம்**
**தலைவர், ஊடகக் கற்கைகள் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவும் உறவும்



# ஒடியற் கூழ்



தேன்மொழி சபா

"அம்மா" என அழைத்தவாறு வீட்டுக்குள் நுழைந்தான் ஆதவன். அவனது குரலைக் கேட்டதும் "எப்படியடா வருத்தங்கள் எல்லாம் சுகமாகிவிட்டுதா? பயணத்தடை போட்டதால உன்னட்ட வரமுடியேலை, எனக்கூறிக்கொண்டு ஹோலுக்குள் வந்தாள் கற்பகம். மகனின் கையில இருந்த ஒடியல்மா பைக்கற்றை பார்த்தவுடன் "என்ன கூழ் குடிக்கப்போறாய் போல," என்றவளை "ஓ இண்டையோட கொரோணா வைரசு என்ன எந்த வைரசும் எனக்கு கிட்ட வரப் பயப்பிடவேணும்" எனக் கூறியபடி பைக்கற்றை கொடுத்தான்.

"கூழுக்கு கனசாமான் வேணுமே, யார் மீன்தலை நெத்தலியெல்லாம் வேண்டியாறது?" எனக் கணவனைப் பார்த்தாள் கற்பகம். "சரி சரி, நான் போயிட்டுவாறன்," என்றபடி எழும்பினார் குகதாசன். " அப்பா! நான் இறால் மீன் எல்லாம் வேண்டியந்திட்டன், நீங்கள் கிழங்கு, பயித்தங்காய், பாவக்காய் எல்லாம் வேண்டியாங்கோ." எனக் கூறிக் கொண்டு முன்னுக்கு இருந்த கட்டிலில் படுத்தான்.

தாயின் மனம் குழப்பமடைய "வா தங்கைச்சி, பத்து நாளாய் சாப்பாடு தண்ணி வெந்நீரில்லாமல் நாக்கு செத்துப் போய் வந்திருக்கிறான், இந்தா மாவை நல்லாத் தண்ணி விட்டு கலக்கு, பிலாக்கொட்டையை துப்பரவு செய்" எனக்கூறியபடி மீனைக் கழுவத்தொடங்கினாள்.

மகளும் பலாக்கொட்டையை துப்பரவு செய்து விட்டு, ஒடியல்மாத் தண்ணியை கரைத்து வைத்தாள்.

கற்பகம் மீனைக்கழுவி பொரியலுக்கு தேவையான இறால் மீனை வேறாக்கி, கூழ்ப் பானைக்குள் பொருட்கள் அவியக்கூடிய அளவிற்கு நீர்விட்டு அடுப்பை பற்ற வைத்தாள். மாநீரை மூன்றாம் தரம் மாற்றிவிட்டு, விரல் அளவு இஞ்சி, ஐந்தாறு செத்தல், வெள்ளைப் பூண்டு எல்லாவற்றையும் சிறிது நீர் விட்டு விழுதாய் அரைத்தெடுத்தாள். கிழங்கு பயற்றங்காயோட ஒருகைபிடிப் பலாக்கொட்டையும் சேர்த்தாள். மீன் இறாலுடன் அரைத்தவிழுதையும் நாலைந்து பச்சைமிளகாயும் எடுத்து, உப்பையும் சேர்த்து கொதிக்கும் நீருக்குள் போட்டு மூடிவிட்டாள்.

மற்ற அடுப்பில் சிறிய துண்டுகளாக வெட்டிய கிழங்கையும் மீன் இறாலையும் பொரிக்கத் தொடங்கினாள். பினைந்த பழப்புளியில் தேசிக் காயளவு எடுத்து ஊறப்போட்டாள். தகப்பன் முருங்கைக்கீரை கொடுக்க அதையும் நன்றாக அலசி பானைக்குள் போட்டு மூடிவிட்டாள். பின்பு மாநீரை ஊற்றி, அதனுடன் சிறிது மஞ்சள் தூள், அளவான உப்பு புளியையும் சேர்த்து நன்றாக கூழ்ப்பதமாகக் கலக்கினாள்.

இலை அவிந்ததும், அடுப்பைக் குறைத்து, கலவையை பானைக்குள் ஊற்றி, இறைநினைப்போடு, சுவையாக வரவேணும், வருத்தங்கள் சுகப்படவேண்டும் என்ற பிரார்த்தனையோடு நன்றாகத் துளாவினாள். அதனுடன் பொரித்தவற்றையும் சேர்த்து நன்றாக கலக்கினாள், இரண்டு மூன்று கொதியில மா அவிந்ததும் அடுப்பை அணைத்து,. பானையை இறக்கி எல்லாரையும் கூழ்குடிப்பதற்காக அழைத்தாள்."

குகதாசன் சுரண்டிய சிரட்டைகளை மகளிடம் கொடுத்து கழுவச் சொன்னார். "அப்பாடா இந்தப் பதினாலு நாளும் என்ர நாக்கு செத்துபோச்சு இண்டைக்காவது அதுக்கு உயிர்வருகுதோ பாப்போம்", "என்றவாறு சிரட்டையை தங்கையிடம் வாங்கி, கூழை ஊற்றிக் குடிக்கத் தொடங்கினான் ஆதவன்.

முகத்தில ஒருவிதமான பிரகாசத்தோடு "அப்பா சுப்பர் அப்பா, கனநாளுக்குப் பிறகு கூழ் அந்தமாதிரி, இதை நீங்கள் கிழமைக்கு ஒருக்கா குடிச்சீங்களெண்டால், உங்களிட்ட இருக்கிற சிலபேர் கோட் வாசலுதான் போய் நிப்பினம்" என புன்சிரிப்போட கூற, "ஆர் கொம்மாவோ?" எனக் கற்பகத்தை பார்க்க, "உங்களிட்ட இருக்கிற கொலஸ்ரோலும், சலரோகமும் தான்", எனக்கூற தகப்பனும் ஒரு புன்சிரிப்புடன் கூழ் குடிக்கத்தொடங்கினார். அவர்களுடன் தாயும் மகளும் சேர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "மேலோன் என்றும் வாழ்வோன்"



ஈழத்து இலக்கிய படைப்பாளிகளில் குறிப்பிட்டுக்கூறத்தக்கவர்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களில் ஒருவராக நந்தினி சேவியர் அவர்களைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட நந்தினி சேவியர் பின்னைய நாட்களில் திருகோணமலையில் வசித்து வந்தார். பாடசாலைக்கல்வியை மட்டுவில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை மட்டுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வதிரி திருஇருதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார்.

பின்னர் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியிலும் பயின்று தொழில்நுட்பக் கல்வியிலும் தேர்ச்சி பெற்றார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனச்சார்பு) வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவர். இவ்வாறு பல வகைகளிலும் தனது வாழ்வியலை மேற்கொண்டிருந்த நந்தினி சேவியர் 1967ஆம் ஆண்டு எழுத்துத் துறையில் தடம்பதித்து, ஈழத்தின் இலக்கியச் செயற்பாடுகளுடன் தனது நேரத்தினை அதிகமாக செலவிட்டுச் சமூகச் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தவும் முன்நின்று உழைத்தார்.

இவரது இலக்கியங்களில் சிறுகதைத்துறையிலேயே பலராலும் நன்கு அறியப்பட்டார். நந்தினி சேவியர் என்ற பெயரிலேயே அதிகம் எழுதிவந்தார். இவருடைய பத்தி எழுத்துக்கள் மற்றும் கட்டுரைகள் சில தேவசகாயம், தாவீது, கிறிஸ்ரோ ஆகிய பெயர்களிலும் வெளிவந்துள்ளன.



# நந்தினி சேவியர்

நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் ஆகியவற்றை எழுதியிருந்தாலும் அவை இன்னமும் நூல்வடிவம் பெறவில்லை. இவரின் சிறுகதைகள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவருடைய படைப்புக்கள் பல தாயகம், மல்லிகை, வாகை, அலை, புதுசு, இதயம், ஒளி, சிந்தாமணி, வீரகேசரி, தொழிலாளி, சுதந்திரன், ஈழமுரசு, மற்றும் ஈழநாடு ஆகிய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன.

வடமாகாண கல்வி அமைச்சின் கலை இலக்கியச் செயற்பாடுகளுக்கு இவர் செய்த பங்களிப்பு அளப்பரியது. இவை மாத்திரமன்றி மேகங்கள், 'கடற்கரையில் தென்னை மரங்கள் நிற்கின்றன' ஆகிய நாவல்களையும் 'ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள்' என்ற குறுநாவலையும் எழுதியுள்ளார். ஆனால் அவை இன்னமும் பிரசுர வடிவம் பெறவில்லை.

இவ்வாறு ஆத்மார்த்தமாக இலக்கியத்திற்காக தன்னை வித்திட்டவர், முதுமையிலும் இனிமையான இலக்கியங்களைப் படைத்துக் கொண்டிருந்த வேளையில் சில நாட்களாக காய்ச்சால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த செப்ரெம்பர் 16ஆம் திகதி தனது 72வது வயதில் இவ்வுலகைவிட்டு இயற்கை எய்தினார்.

இவரது இலக்கியப் பங்களிப்புக்காக 2011ஆம் ஆண்டு கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது கிடைத்தது. அது மாத்திரமன்றி கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது, அத்துடன் சாகித்திய மண்டலப் பரிசும் வழங்கப்பட்டது.

கிழக்குமாகாணத்தில் பல்துறை சார்ந்து வழங்கப்பட்ட சிறந்த நூல் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். நந்தினி சேவியரின் படைப்புகளுக்காக 2013ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதும் வழங்கப்பட்டது.

இவை மாத்திரமன்றி பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுக்கான "சங்கச் சான்றோர் விருது" வழங்கிக் கௌரவித்தது.

இவ்வாறு இலக்கியத்தின் ஊடாக பல படைப்புக்களை வெளியிட்டு அனைவரின் சிந்தனையையும் தூண்டிய நந்தினி சேவியர் தற்கால இலக்கியத்துறையில் பயணிக்கும் இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.முத்துலிங்கம்

# பார்வதி

இந்தத் தலைப்பில் பல கதைகளை நானே படித்திருக்கிறேன். ஆனால் தலைப்பை மாற்றுவதற்கில்லை. ஐம்பது வருடங்களுக்கு முன்பு இது உண்மையாகவே என் கண்முன்னே நடந்த கதை. எனது பிராயம் ஐந்தில் இருந்து எட்டு வரைக்குள் இவையெல்லாம் நடந்து முடிந்துவிட்டன. என் பிஞ்சு மனத்தில் ஆணி அடித்தது போல சம்பவங்களும், சம்பாஷணைகளும் நிலைத்து நிற்கின்றன. இங்கே நடந்தது நடந்தபடியே கூறியிருக்கிறேன்.

பார்வதி என்றால் முதலில் நினைவுக்கு வருவது அவளுடைய தோசைதான். தோசை என்றால் கம்பாஸ் வைத்து வட்டம் அடித்தது போல இருக்கும். அந்த மணம் நாலு வீடு தள்ளியும் மணக்கும். ஆட்களை சுண்டி இழுக்கும்.

எங்கள் வீட்டிலிருந்து மூன்றாவது வீடுதான் பார்வதி வீடு. விடியற் காலை பல பலவென்று விடியும் போது கொழும்பு ரயில் வந்து சேரும். அதுதான் பார்வதி தோசை சுடும் மும்முரமான நேரம்.

முதலில் தோசை மாவை அகப்பையில் எடுத்துத் தோசைக் கல்லில் ஊற்றுவாள். அதுவே ஒரு தனி அழகு. அது உஸ் என்று சொல்லி வைத்தபடி அப்படியே வட்டமாக உருவெடுக்கும். கொஞ்சம் பொறுத்துத் தோசைக் கரண்டியால், அது பாதி காயும் போதே, கீழே கொடுத்து தெம்பி மற்றப் பக்கம் பிரட்டுவாள். அது படக்கென்று விழும். பிறகு அவதானித்து பொன்னிறமாக அது மாறும் போது எடுத்து ஓலைப் பெட்டியில் வைப்பாள் அல்லது நீட்டிக்கொண்டிருக்கும் சில பேருடைய தட்டிலே போடுவாள்.


தோசை அப்ப ஆவி பறந்தபடி இருக்கும். எடுத்து நேராகப் பார்த்தால் ஊசி ஓட்டைகள் ஒரு நூறாவது பார்க்கலாம். எல்லாத் தோசையும் அதே மாதிரிதான் அச்சில் வார்த்தது போல வரும். அதிலே ஒரு 'விள்ளல் எடுத்து வாயிலே போட்டால் அது மெத்தென்று புளிப்பு கலந்த ஒரு ருசியாக மாறும், தேவாமிர்தமாக இருக்கும், பார்த்துக் கொண்டிருக்கும் போதே கரைந்துவிடும். சாதாரணமான தோசை மாவுக்கு இப்படி ஒரு மெதுமையையும், மணத்தையும், ருசியையும் சேர்ப்பதென்றால் அது ஒரு பரம ரகஸ்யம்தான். என்னுடைய அம்மாவும், மற்ற ஊர் பெண்டுகளும் அந்த இரகஸ்யத்தை அறிய எவ்வளவோ முயற்சித்தார்கள், ஆனால் பலிக்கவில்லை.

இந்தத் தோசையை அப்படியே சாப்பிடலாம். அதுக்குச் சேர்த்துக் கொள்ள ஒன்றுமே தேவையில்லைதான். ஆனால் பார்வதி அதற்கென்று ஒரு சம்பல் செய்வாள். சம்பல் என்றால் சின்ன வெங்காயம், சிவப்பு செத்தல் மிளகாய், தேங்காய்ப்பூ, கொஞ்சம் உப்பு, ஒரு சொட்டுப் புளி என்று எல்லாம் போட்டு செய்ததுதான். இதற்கு கறிவேப்பிலையும் சேர்த்து பக்குவமாக தாளித்துப் போடுவாள். அப்ப அதில் இருந்து ஒரு திவ்யமான மணம் வரும். சம்பலை கொஞ்சம் தொட்டு தோசையையும் விண்டு வாயில் போட்டால் அதுவே ஒரு தனி மயக்கம்தான்.

சம்பல் இடிக்கும்போது பார்வதி யாருடனும் கதைக்கமாட்டாள்,




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



'நாணமாம்' முணுமுணுவென்று வாய்க்குள்ளே ஏதோ சொல்லுவாள். மந்திரமோ என்னவோ. நாங்கள் 'குஞ்சு குருமான்' அப்ப அங்கே போய் சத்தம் போட்டு விளையாடுவோம் . அவள் ஒன்றுமே பேசமாட்டாள் அந்த நேரத்தில்.

பார்வதிக்கு பன்னிரெண்டு வயது நடக்கும் போது கல்யாணம் ஆகிவிட்டதாம். சின்னையாபிள்ளைக்குத் தொழில் விவசாயம்தான். அன்னியோன்னியமான அந்தத் தம்பதிகளுக்கு பிள்ளையே பிறக்கவில்லை. எவ்வளவோ வைத்தியம் பார்த்தார்கள். கோயில்கள் எல்லாத்துக்கும் போய் வந்தார்கள். தவறாமல் விரதம் பிடித்தார்கள். பிள்ளை மாத்திரம் உண்டாகவே இல்லை. பார்வதி உடைந்து போனாள். இப்படியே இருபது வருடம் ஓடியது. நம்பிக்கை முற்றிலும் போய் விட்டது.

அப்போதுதான் நல்லூர் கந்தசுவாமி கோயில் தேரடியில் ஒரு சாமியார் நீ கந்தசஷ்டி விரதம் இரு. உனக்கென்று முருகனே வந்து பிறப்பான் என்று சொன்னாராம். பார்வதியும் முழு நம்பிக்கையுடன் குளித்து, முழுகி ஆறு நாள் விரதம் காத்தாள் கடுமையான விரதம். அப்படித்தான் அவர்களுக்கு பிள்ளை பிறந்தது. எப்படி பேர் வைப்பார்கள்? பார்வதிக்கு பிறந்த பிள்ளையாயிற்றே! முருகேசன் என்றுதான் பேர் சூட்டினார்கள்.

அம்மா சொல்லுவாள், பிள்ளை பிறந்தபோது ஊர் முழுக்க அப்படி கொண்டாட்டமாக இருந்ததாம்.

ஆனால் விதி வேறு மாதிரி நினைத்திருந்தது. சின்னையாபிள்ளை காலை நாலு மணிக்கே எழும்பி புறப்பட்டு விடுவார் தோட்டத்துக்கு தண்ணீர் இறைக்க, நாலு மணியென்றால் 'கூ, கூ' என்று ஒருவரை ஒருவர் கூவி அழைத்துக் கொண்டுதான் புறப்படுவார்கள். தோட்டம் இரண்டு கல் தொலைவில் இருந்தது.

அன்று சின்னையாபிள்ளைக்கு சரியான அலுப்பு. மனைவியோடு இரவிரவாக சல்லாபம். நித்திரை சரியாகத் தூங்கவில்லை. 'துலா' ஏறி மிதித்துக் கொண்டிருந்தார். நித்திரை அசதியோ, வேறு நினைவோ கால் தவறி விட்டார். நெம்பு என்று நினைத்து வெறும் காற்றில் காலை வைத்ததுதான் வினை. பொத்தென்று கீழே விழுந்து தலையிலே பலமான அடி. உயிர் பொசுக்கென்று போய்விட்டது.

முருகேசனுக்கு அப்போது இரண்டு வயது. ஊருக்குள்ளே முருகேசன் பிறந்த வேளைதான் என்று பேசிக்கொண்டார்கள். பார்வதி தளரவில்லை. தோசைக்கடை போட்டாள். பிள்ளையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள்.

நான் ஐந்து வயதாக இருந்தபோது முருகேசன் நெடிதுயர்ந்து வளர்ந்த ஒரு முழு ஆம்பிளைப் பிள்ளை. பார்க்க லட்சணமாக இருப்பான். வெள்ளை வெளேரென்று வேட்டி கட்டி, சட்டையும் போடுவான். செல்லமாக வளர்ந்த பிள்ளையாதலால் ஊரிலே எல்லோருக்கும் அவனிடம் பகிடி பண்ண ஆசை.

புத்தம் புது சைக்கிள் வைத்திருந்தான். அதில் கொம்புவைத்த ஒரு குதிரை முன் இரண்டு கால்களையும் தூக்கியபடி நின்று கொண்டிருக்கும். சைக்கிள் பெல் மூன்று. இன்னும் வண்ண வண்ணமாக வினோதமான பல அலங்காரப் பொருட்கள் அந்த சைக்கிளில் பூட்டியிருக்கும். நாங்கள் சின்னப் பிள்ளைகளாக அதைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தது நினைவிருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ப பேசாத படம் ஓடின காலம். முருகேசன் டவுனுக்குப் போய் இந்தப் படங்களைப் பார்த்துவிட்டு வருவான். பிறகு அந்தக் கதைகளை விஸ்தாரமாகச் சொல்லுவான். எல்லோரும் வாயைப் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

இந்த நேரம்தான் அவனுக்கு காய்ச்சல் வந்தது. காய்ச்சல் என்றால் சாதாரண காய்ச்சல் இல்லை. நெருப்புக் காய்ச்சல். அப்போதெல்லாம் நெருப்புக் காய்ச்சல் வந்து தப்பினவர்கள் வெகு சிலரே.

பார்வதி தோசைக் கடையை மூடிவிட்டாள். மகன் பக்கத்திலேயே பழியாய்க் கிடந்தாள். நெல்லியடிப் பரியாரி அடிக்கடி வந்து மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார். ஊர் முழுக்க என்ன நடக்கப் போகுதோ என்று பயந்தபடியே இருந்தது. நிலைமை ஒரு நாள் மோசமாய் போய்விட்டது. என்னுடைய அப்பா கொழும்புக்கு பயணமாவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். அம்மா சொல்கிறாள் முருகேசன் பாடு நாளைக்குத் தாங்காது போல இருக்கு. நின்று பார்த்திட்டு போங்கோ.

அன்று பின்னேரம் அம்மா பார்வதியைப் பார்க்கப் போனாள். நானும் பின்னாலேயே போனேன், ஆனால் என்னைக் கிட்ட வர வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். முருகேசன் அடித்துப் போட்ட வாழைத் தண்டு போலக் கிடந்தான். பார்வதி அழுதபடியே பக்கத்தில், அந்த உருக்கமான காட்சி என் மனதை விட்டு நீங்கவே இல்லை.

அம்மாதான் சொன்னாள். பார்வதி அப்போது ஒரு நேர்த்திக் கடன் செய்தாளாம். அப்பா, நல்லூர்க் கந்தா, இது நீ கொடுத்த பிள்ளை, நீயே திருப்பி எடுக்கலாமா? இந்தத் தத்தில் என் பிள்ளை தப்பினால், நூறு நாளைக்கிடையில் அவன் உன்னுடைய கோயில் வெளிப் பிரகாரத்தை பிரதட்டை (அங்கப்பிரதட்சணம்) பண்ணுவான். அப்பா, என்னை கைவிட்டு விடாதே.

எல்லோரும் அதிசயிக்கும்படி முருகேசன் தப்பிப் பிழைத்து விட்டான். பார்வதிக்கு சந்தோஷம். மறுபடியும் ஒரு குமரிப் பெண்ணாகவே காட்சியளித்தாள். அப்படியான ஒரு குதூகலத்தை ஒரு பெண்ணிடம் மிகவும் ரகஸ்யமான நேரங்களிலேதான் காண முடியும்.

நல்லூர்க் கந்தனுக்கு வைத்த 'கெடுவோ" நூறு நாட்கள்தான். அப்ப பங்குனி மாதம். கொளுத்தும் வெய்யில், நல்லூர் வெளிப் பிரகாரத்தை பிரதட்டை பண்ணுவதென்றால் லேசுப்பட்ட காரியமா? ஆனாலும் முருகப் பெருமானோடு விளையாட முடியுமா?

முருகேசனுக்கு உடம்பு முற்றிலும் தேறவில்லை. காய்ச்சல் களை இன்னமும் இருந்தது. நெருப்புக் காய்ச்சல் அவனை உலுக்கி எடுத்து விட்டது.

பார்வதி 'அடி அழித்த' படி முன்னுக்குப் போக, முருகேசன் பின்னால் பிறதட்டை செய்தபடியே வருகிறான். சில பந்து சனங்களும் அவர்கள் பின்னால் போகிறார்கள். சிலர் தண்ணி தெளித்தபடி, சிலர் வேப்பம் கொத்தை வீசியபடி.

உள்வீதி என்றாலும் பரவாயில்லை. இது வெளி வீதி. முருகேசனோ சொகுசாக வளர்ந்த பிள்ளை. 'முந்திப் பிந்தி' பிரதட்டை செய்த பழக்கமுமில்லை. மேற்கு வீதிக்கு வந்த போதே அவனுக்கு 'மேல் மூச்சு கீழ்மூச்சு' வாங்கியது. இனசனம் எல்லோரும் அவனுக்கு 'அரோஹரா' சொல்லி உற்சாகமூட்டினார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குவீதியும் வந்துவிட்டது. அவனுக்கு இதற்குமேல் தாக்குப் பிடிக்க இயலவில்லை. எழுந்து விட்டான். ஒரு கரித்துண்டை எடுத்து 'ஆச்சி, இனி எனக்கு தாங்காது மிச்சத்தை வந்து நாளைக்கு முடிக்கிறேன்" என்று விட்டு போய்விட்டான். பார்வதி திகைத்துப் போனாள். என்றாலும் மீதி தூரத்தை அவளே அடி அழித்து முடித்து விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

அடுத்த நாள் ஊர் முழுக்க இதே பேச்சுத்தான். சும்மா சும்மா முருகேசனைப் பகிடி பண்ணியவர்களுக்கு இது நல்ல சாட்டாகப் போய் விட்டது. அவனால் தலை நிமிர்த்தவே முடியவில்லை. குழந்தைகள் கூட அவன் முகத்துக்கு நேரே கேலி பண்ணத் தொடங்கிவிட்டார்கள்.

நமசிவாயம்பிள்ளைதான் கேட்டார். நக்கலாகப் பேசுவதில் எங்கள் ஊரில் டிகிரி வாங்கியவர்.

"என்ன முருகேசன் கரிக்கோடு போட்டியாமே கோயில் சுவரில்? ராத்திரி பெய்த பனியில் எல்லாம் நனைஞ்சு போச்சாமே! அப்ப நாளைக்கு எங்கையிருந்து தொடங்கப் போறாய்?

எல்லோரும் 'கெக்கே கெக்கே' என்று சிரித்தார்கள். முருகேசனுக்கு முகம் எல்லாம் சிவந்துவிட்டது. விசுக் கென்று போய்விட்டான்.

இப்படியாகத்தான் முருகேசனுக்கும் நமசிவாயம் பிள்ளைக்கும் ஒரு சின்னப் பகைமை வித்து முளைவிட்டது. அது ஒருநாள் விஸ்வரூபம் எடுத்ததை நான் என் கண்ணாலேயே பார்த்தேன். முருகேசனுக்கு நல்ல நீண்ட மூக்கு அவன் முகத்துக்கு அது நல்ல பொருத்தம். ஆனால் மூக்குத் துவாரங்களோ பெரிசு அப்படிப் பெரிசு. எல்லோரும் ஒரு சுருட்டுக் கொட்டகைக்குள் இருந்து சுருட்டு சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள். முருகேசனுடைய வெள்ளை வெளேர் என்ற வேட்டி கொடியில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அவன் மாற்று வேட்டி கட்டிக்கொண்டு வேலையிலேயே கண்ணாயிருக் கிறான்.

அப்ப இலுப்பைப் பூ காலம். 'கமகம" வென்று வாசம். ஒரு காற்று சுழன்று வீசியது. தூசோ தும்போ தெரியவில்லை. முருகேசன் 'அச்சூ' என்று தன் பலம் எல்லாத்தையும் பிரயோகித்து ஒரு தும்மல் தும்மினான். அது ஒரு அதிர வைக்கும் பயங்கரமான தும்மல்.

தொங்கலில் இருந்த நமசிவாயம் பிள்ளைதான் கேட்டார் "என்ன முருகேசன், மூக்குக்குள்ளே யானை பூந்திட்டுதோ?"

அவ்வளவுதான். முருகேசன் ருத்திரனாகவே மாறிவிட்டான். படாரென்று எழும்பினான், ரீல் கட்டையை நமசிவாயம் பிள்ளையை நோக்கி வீசி எறிந்தான். அவனுடைய வெள்ளை வேட்டியைக்கூட எடுக்கவில்லை. ஒரே மூச்சில் சைக்கிளில் பாய்ந்து எறிப் போய்விட்டான் அதுக்குப் பிறகு அவனை யாருமே பார்க்கவில்லை.

பார்வதி பதறிவிட்டாள். வீடுவீடாய்ப் போய்த் தேடினாள். போவோர் வருவோர் எல்லோரிடமும்



என்ன அந்த ஹோட்டல் வாசல்லை ஒரே கூட்டம்?

**கடை வாசல்லை இருந்த விளம்பரப் பலகையில் இங்கே உழுந்து வடை விற்கப்படும் என எழுதியிருந்ததை யாரோ இங்கே உளுத்த வடை விற்கப்படும் என மாற்றி எழுதி விட்டுப் போட்டார்களாம்!**

விசாரித்தாள். பொலபொல வென்று கண்ணீர் விட்டு அழுதாள். கடைசியாக நமசிவாயம் பிள்ளை விட்டு வாசலுக்கே சென்று மண்ணை வாரி வாரிக் கொட்டித் திட்டினாள். கிராமங்களிலே மண்ணை வாரிக் கொட்டித் திட்டுவது எல்லாம் சாதாரணமான காரியமில்லை. கடைசிக் கட்டத்தில் தான் கிளைமாக்ஸ்.

ஆனால் முருகேசன் போனவன் போனவன்தான். தகவலே இல்லை. கொஞ்ச நாள் ஊர்முழுக்க மௌனமாக இருந்தது போல்பட்டது. எல்லோருக்கும் உள்ளுக்குள்ளே ஒரு குற்ற உணர்வு,

முருகேசன் ருத்திரனாகவே மாறிவிட்டான். படாரென்று எழும்பினான், ரீல் கட்டையை நமசிவாயம் பிள்ளையை நோக்கி வீசி எறிந்தான்...

கடைசியாக ஒருநாள் ஒரு தபால் அட்டை வந்தது. பார்வதிக்கு படிக்கத் தெரியாது. அம்மாதான் வாசித்துக்காட்டினாள். முருகேசன் குருநாகலையில் இருக்கிறானாம். வெள்ளைச் சொண்டு நாகலிங்கத்தின் சுருட்டு கடையில் வேலை செய்கிறானாம். எடுபிடி வேலை. கவலைப் பட வேண்டாம் என்று எழுதியிருந்தான்.

பார்வதிக்கு ஒரு பக்கம் நிம்மதி என்றாலும் ஒரே மகன் தன்னை இப்படி விட்டுப் போய் விட்டானே என்ற ஏக்கம், அதற்குப் பிறகு பார்வதி பார்வதியாகவே இல்லை. எப்பவும் அவள் முகத்தில் வேதனைதான் குடி இருக்கும்.

"என் மகன் என்ரை கடைசி காலத்தில் வருவானோ?" என்று கவலைப்படுவாள். ஒவ்வொரு நாளும் அம்மாவிடம் வந்து ஒரு பாட்டம் அழுதுவிட்டுப் போவது அவளுக்கு வழக்கமாகிவிட்டது.

கடிதத்திற்கு மேல் கடிதம் போட்டபடியே இருந்தாள் பார்வதி. ஒரு பதிலும் இல்லை. பார்வதிக்காக பல பேரும் கடிதம் எழுதினார்கள். ஒரு முறை வாத்தியார் எழுதினார். இன்னொரு முறை அம்மா எழுதினாள் ஒருநாள் சங்கக்கடை சுப்பிரமணியம், கடைசியில் நமசிவாயம் பிள்ளை கூட எழுதினார். அவர் தன் பங்காகவும் ஒரு வரி சேர்த்திருந்தார். அது பார்வதிக்குத் தெரியாது. 'நான் ஏதோ ஒரு பகிடிக்காகத்தான் அப்பிடிச் சொல்லிவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PULAMAI MEDIA

PRODUCTION (PVT) LTD

**CONTACT US**

+94 741 238 937

Video Editing | 2D, 3D Animations | Graphic Designing

Wedding Videos | White Board Animation | Advertisements

Content Writing | Social Media Managements

Vocal artists | 3D Architechural Visualization

Colour Correction & Grading | VFX

Mail: info@pulamaimedia.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பெரிசு படுத்தாதே தயவு செய்து வந்து விடு. உன் அம்மாவைப் பார்க்க பெரிய பாவமாக இருக்கிறது' என்று.

முருகேசன் வரவே இல்லை. மூன்று வருடம் ஓடிவிட்டது. அப்ப எனக்கு வயது எட்டு. எல்லோரும் முருகேசனை மறந்து விட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். பார்வதி, அவள் தாயல்லவா? மறப்பாளா ?

ஒவ்வொரு நாள் காலையும் ஆறு மணிக்கு கொழும்பு ரயில் கொக்குவில் ஸடேசனில் வந்து நிற்கும் சத்தம் எங்கள் வீடு வரைக்கு கேட்கும். பார்வதி வாசலிலே வந்து பழி கிடப்பாள்.

ரயிலிலே இருந்து இறங்கியவர்கள் எங்கள் ஒழங்கைக்கு வந்து சேர பத்து நிமிடமாவது பிடிக்கும். இவள் தலையில் கை வைத்து பார்த்த படியே நிற்பாள், யாராவது சூட்கேசுடன் தூரத்தில் வந்தால் ஒரு கணம் திடுக்கிட்டு சிறிது தூரம் ஓடிவந்து பார்ப்பாள். பிறகு ஆள் அடையாளம் தெரிந்தவுடன் விரத்தியுடன் திரும்பிப் போய்விடுவாள்.

ஒருநாள் பின்னேரம் வழக்கம் போல் பார்வதி அழுதபடியே வந்தாள், அன்றைக்கு அம்மாவிடம் போகவில்லை. அப்பாவிடம் தான் நேரே போனாள். அவள் சொன்னாள்.

"முருகேசன் உங்கடை சொல்லுக்கு கட்டுப்பட்டவன். நான் எத்தனையோ காயிதம் போட்டுவிட்டன், அவன் திரும்பிப் பார்க்கவில்லை, எனக்கு வயித்தைக் கலக்குது. என்ரை பிள்ளையைப் பார்க்காமல் செத்து விடுவேனோ என்று பயமாயிருக்கு." அதற்கு அப்பா பதிலே கூறவில்லை, மாறாக பெட்டியில் இருந்து ஒரு 'போஸ்ட் கார்டை' எடுத்து எழுதினார். வேறு ஒன்றும் இல்லை ஒரு பாடலைத்தான் எழுதினார். திகதியோ, எழுதியவர் பெயரோ இல்லை, எல்லோருக்கும் தெரிந்த ஒரு பாடல் தான் அது

**'வற்றாத பொய்கை வளநாடு தந்து**
**மலைமேலிருந்த குமரா**
**உற்றார் எனக்கு ஒரு பேரும் இல்லை**
**உமையாள் தனக்கு மகனே**
**முத்தாரமாக மடிமீதிருக்கும்**
**முருகோன் எந்தன் உயிரே**
**வித்தரமாக ரயில் மீதிலேறி**
**வரவேணும் எந்தனருகே"**

இதை எழுதிவிட்டு அந்த தபால் அட்டையை அப்பா என் கையில் கொடுத்து "ஓடிப்போய் போட்டுவிட்டு வா" என்று சொன்னார்.

நான் சீவரத்தினம் கடையில் இருக்கும் தபால் பெட்டியை நோக்கி ஓடினேன் அந்தப் பாடலில் 'மயில் மீது என்று வரும் இடத்தில் அப்பா ரயில் மீது என்று மாற்றி எழுதியிருந்தார். மற்றும்படி பாடல் ஒரிஜினல் பாடலாகத்தான் இருந்தது.

(ஐம்பது வருடத்திற்கு முன்பு ஒருமுறை மட்டும் படித்த இந்தப் பாடலை நினைவில் வைத்து இங்கே கூறியிருக்கிறேன். இதில் பிழையிருந்தால் அது என்னுடையதுதான் மன்னிக்கவும்)

இந்தக் 'கார்டு' போட்டு நாலு நாள் ஓடிவிட்டது. ஐந்தாம் நாள் காலை நாங்கள் எங்கள் வீட்டு ஒழுங்கைப் புழுதியில் விளையாடியபடி இருக்கிறோம். கொழும்பு ரயில் வந்து போகும் சத்தம். பிறகு ஒரு பத்து நிமிடம் கழித்து தூரத்தில் ஒருவர் நடந்து வருகிறார். உயர்ந்த உருவம், கையில் சூட்கேஸ், வெள்ளை வெளேர் என்று வேட்டி முருகேசன்தான்.

முதலில் பார்த்தது பூரணிதான். அவளோ குமரிப்பெண் படலைக்கு அந்தப் பக்கம் வர இயலாது. இருந்தும் பார்த்துவிட்டாள். ஆண் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பெண்களின் கண்களுக்கு வேகம் அதிகம் தான்.

'குஞ்சு குருமான்' எல்லாம் முருகேசன் வந்திட்டார், முருகேசன் வந்திட்டார் என்று கூவியபடியே ஒழுங்கையை நிறைத்து விட்டார்கள்.

இந்தக் காட்சிதான் என் மனசில் ஐம்பது வருடமாக அழியாமல் இருக்கிறது. பார்வதி வெளியே வந்து நிற்கிறாள். கையை இடுப்பில் ஊன்றியபடி உற்றுப் பார்க்கிறாள். நாலடி முன்னுக்கு வந்து இன்னொரு முறை பார்க்கிறாள். கைகால்கள் எல்லாம் இப்ப தள்ளாடுது. கண்ணிலே தாரை தாரையாகக் கண்ணீர். ஏதோ சொல்ல வாயெடுக்கிறாள் ஒன்றும் வரவில்லை. நாக்கு தளதளக்குது. நிற்கக்கூட முடியவில்லை.

முருகேசன் சூட்கேஸை பொத்தென்று போட்டு விட்டு ஓடி வந்து தாயைக் கட்டிப் பிடிக்கிறான். 'என்ரை பிள்ளை, என்ரை பிள்ளை' என்று பார்வதி மகனைக் கட்டிக் கொள்கிறாள். தடவித் தடவிப் பார்க்கிறாள். முத்தமிடுகிறாள் தலையைக் கோதுகிறாள். பிறகு இன்னொரு முறை தடவி விடுகிறாள். மீண்டும் முத்தமிடுகிறாள். ஒரு நூறு பேர் சேர்ந்து விட்டார்கள். இந்தக் காட்சி நீண்டுகொண்டே போகிறது. தாயும் மகனும் குடிசைக்குள்ளே போனதும் ஆரோ சூட்கேஸை உள்ளே கொண்டுவந்து வைக்கிறார்கள்.

அடுத்த ஒரு கிழமை பார்வதி நிலத்திலே நடக்கவில்லை, ஆகாயத்தில்தான் உலாவினாள். பிறகு பயம் பிடித்துக்கொண்டது அவளுக்கு. முருகேசன் தன்னை விட்டுத் திரும்பி போய் விடுவானோ என்று. ஆனால் நல்லூர் கந்தன் அதற்கும் ஒரு வழி வகுத்திருந்தார். எங்களுக்குத்தான் அது அப்ப தெரியவில்லை.

பார்வதி ஒருநாள் படுத்தபடி நித்திரையிலேயே போய்விட்டாள். எங்கள் ஊர் முழுக்க இதே கதைதான். செத்த வீடு மிக விமரிசையாக நடந்து முடிந்தது.

நாலாம் நாள் காரியங்கள் எல்லாம் நிறைவேறியவுடன் முருகேசன் மீண்டும் 'ரயிலேறி' விட்டான்.



**கந்தர்** - சுகாதார பரிசோதகர் ஏன் கடைகளைச் சோதனை செய்வதில்லை

**முருகர்** - இப்ப அவருக்கு கொரொணா சோதனை நடக்குதாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவைத் துணுக்குப் போட்டி 07





## இந்தப் படத்துக்கு ஒரு நகைச்சுவைத் துணுக்கு எழுதவும்

**விதிமுறைகள்:**

1. துணுக்கு பத்துச் சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.
2. உங்கள் ஆக்கத்தினை வருகிற **20.11.2021** முன் அனுப்பி வைக்க வேண்டும்.
3. தெரிவு செய்யப்பட்ட மூன்று துணுக்குகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.
4. அதில் வெற்றிபெறும் ஒரு துணுக்கு வரும் மார்களி இதழில் வெளியாகும்.
5. வெற்றி பெற்றவருக்குப் பரிசாக **1000**ரூபாய் **30.12.2021** இற்குள் வழங்கப்படும்.
6. **editor@Siriththiran.com** எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாக அல்லது **"சிரித்திரன், 65, வேலப்பர் ஒழுங்கை (கனகரத்தினம் கல்லூரி முன்வீதி), அரியாலை, யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்குத் தபால் மூலமாக உங்கள் ஆக்கங்களை அனுப்பவும்.

---

## நகைச்சுவைத் துணுக்குப் போட்டி 05 இன் வெற்றியாளர்



**கட்டியும் நிமிராத வால், தட்டியும் நிமிராத நம் மனிதநேயம்.**

**ராணி சிவா, லண்டன், (யாழ்.திருநெல்வேலி)**

## பழ/சமரசம்

உடலுக்கு நலம்தரும்
ரசம்தான் பழரசம்!
உலகிற்கு நலம்தரும்
ரசம்தான் சமரசம்!!

- முருகு

## இறுதித் தெரிவுகள் – 06

காரைத் தனித்து இயக்க பெற்றோலும் இல்லை மாட்டு வண்டியில் செல்லும் அளவிற்கு துணிவும் இல்லை

சிவசுதன் நடேசன்
இராசாவின் தோட்ட வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

காண்பதற்கு அரிதான மாட்டுவண்டிப் பயணம் போல் அருகின நம் பாரம்பரிய பண்பாடுகளும்.

டக்ஸனா கிருஷ்ணானந்தன்
கிளிநொச்சி.

ஆடம்பரம்
வேண்டுமென்று
அடுத்தவர் முதுகிலேறி
சவாரி செய்கின்றன
இரண்டு எருமை
மாடுகள்!?!

சண்முகநாதன் பாலசுதன்,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.



---

**நகைச்சுவைத் துணுக்குப் போட்டி – 06**

பெயர்: ..........................................................................

முகவரி :.......................................................................

..........................................................................

தொலைபேசி இலக்கம்:......................................................

உங்கள் நகைச்சுவைத் துணுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜென்கதை


இளைஞன் ஒருவனின் தந்தை இறந்து விட்டார். அவரின் ஈமச்சடங்குகளைச் செய்துமுடித்தான்.

அவர் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்தான்.

வாழ்நாளில் அவர் யாருக்கும் எந்த உதவியும் செய்தது இல்லை. யாரிடமும் இனிமையாகப் பேசியது இல்லை.

அவர் செய்யாத பாவங்கள் இல்லை. அவருக்கு நரகம்தான் கிடைக்கும். சொர்க்கம் கிடைக்க வாய்ப்பு இல்லை என்று நினைத்தான்.

தந்தையை எப்படியாவது சொர்க்கம் செல்ல வைக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று சிந்தித்தான். எல்லாம் செய்ய வல்ல புத்தர் பெருமானின் நினைவு அவனுக்கு வந்தது. புத்தர் பெருமானைத் தேடிச் சென்று அவரை வணங்கினான். 'என் தந்தை சொர்க்கம் செல்ல வேண்டும். நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன். எத்தனை புரோகிதர்களை வைத்துச் சடங்குகள் செய்யச் சொன்னாலும் செய்கிறேன்" என்றான். அவனை அன்புடன் பார்த்தார் புத்தர் பெருமான். "இங்கே வழிபாட்டுப் பானைகள் உள்ளன. அவற்றுள் இரண்டை எடுத்துக் கொள். ஒன்றில் வெண்ணெயை நிரப்பு. இன்னொன்றில் கற்களை நிரப்பு.



## சடங்குகள் செய்தால் சொர்க்கமாகுமா?

சிறிது தொலைவில் குளம் ஒன்று உள்ளது. "அந்தக் குளத்தில் வெண்ணெய்ப் பானையையும் கற்கள் பானையையும் போடு. என்ன நடக்கிறது என்று பார்த்து வந்து சொல்" என்றார்.

புத்தர் பெருமான் சொன்னது போல ஒரு பானையில் வெண்ணெயையும் மற்றைய பானையில் கற்களையும் நிரப்பினான். இரண்டு பானைகளையும் எடுத்துச் சென்று அந்தக் குளத்தில் போட்டான். அங்கே அதிசயம் எதுவும் நிகழவில்லை. ஏமாற்றத்துடன் புத்தர் பெருமானிடம் வந்த அவன் "பெருமானே! நீங்கள் சொன்னது போல இரண்டு பானைகளையும் குளத்தில் போட்டேன். வெண்ணெய்ப் பானை மிதந்தது. கற்கள் பானை மூழ்கி விட்டது. எந்த அதிசயமும் நடக்கவில்லை" என்றான்.

'தண்ணீரில் மிதப்பது வெண்ணெயின் இயல்பு. மூழ்குவது கற்களின் இயல்பு.

நரகத்திற்குச் செல்லும் ஒருவனை எப்படி சொர்க்கத்திற்கு அனுப்பமுடியும்? அவரவர் செய்த வினையை அவரவர் அனுபவித்துத்தான் தீர வேண்டும்" என்றார் பெருமான் அவர்கள்.

# வாழ்த்துரை



'சிரிப்பே சீவியமாம்' என்ற
'சிரித்திரன்' புகழைப்பேசி,
'சிரித்திரன் சுந்தர்' பெற்ற
சேய்க்கு மறுபிறப்பு நல்கி,
'சிரித்திரன்' புதிதாய்த் தந்தார்!
திசை மீண்டும் சிரிக்க வைத்தார்!
'சிரித்திரு' என்றார்... சிந்தை
சிரிப்பினால் திருந்தச் செய்தார்!

தீபத்தின் ஒளிச் சிரிப்பு
தெருக்களின் இருள் விரட்ட,
சாபங்கள் விலக வேண்டி
சந்தப்பா ஒலிக்க சூழும்
தீப்பிணி தொலைய நேரும்
'சிரித்திர' னோடு.... எங்கும்
ஞானத்தின் ஒளியும் பொங்க
நல்வாழ்த்து யானும் சொன்னேன்!

**- தனபாலசிங்கம் ஜெயசீலன்**
**யாழ்.மாநகர ஆணையாளர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சொல்லாட்சி

## செல்

**மனிதர்களுக்கு** காணப்படும் ஆட்சி அதிகாரம் போன்று சொற்களுக்கும் ஆட்சி அதிகாரங்கள் உள்ளன. அவ்வாறான சொற்கள் பல தமிழ் பரப்பில் கொட்டிக் கிடக்கின்றன.

அவ்வாறுள்ள சொற்களில் இம்முறை சிரித்திரன் தாங்கிவரும் சொல்லாக "செல்" என்ற சொல்லினை நோக்கமுடியும். செல் என்பதற்கு தமிழ் மொழியில் பல்வேறு இடங்களில் பலவகையான அர்த்தங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணமுடிகிறது.

தமிழின் பல்வேறு காலப்பரப்பில் 'செல்' எனும் ஒற்றை வார்த்தை பல பொருள்தரும் ஒன்றாக பயன்படுத்தப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. 'செல்' என்பதை வினை சொல்லாக நோக்கும் போது செல்லுதல், சென்றான், எனும் ஏவல் வினையினைச் சுட்டி நிற்கிறது. அதேசமயம் கறையான்களையும் 'செல்'எனும் வார்த்தையில் அழைப்பதுமுண்டு. நூல் நிலையங்களில் நீண்ட காலமாக அடுக்கி வைக்கப்பட்டு பராமரிக்கப்படாத புத்தகங்கள் பல செல்லினால் அரிக்கப்பட்டு பயனற்றுப் போன சம்பவங்களும் எம்மிடையே உள்ளன.

என்றும் எம் வாழ்க்கையில் பயணம் என்பது நாம் வாழ்வின் இறுதி வரையும் செல்வதனைக் காண்கின்றோம். பயணம் என்ற சொல்லின் பொருள் தரும் ஒத்த கருத்துச் சொல்லாக 'செல்' என்ற சொல்லையும் நாம் பயன்படுத்தி வருகின்றோம். தமிழ் மொழியில் காணப்படும் சொற்கள் எவ்வாறான பலம் கொண்டுள்ளது என்பதனை நாம் இவற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

யுத்த நேரத்தில் கொத்தாக எதிரியை அழிப்பதற்கு செல் என ஆங்கிலத்தில் அழைக் கப்படும் குண்டுகளை மழையாகப் பொழிந்து எதிரிகளுடன் பயணக் கைதிகளாக இருக்கும்






**சின்ராசு :** என்ன போத்தல்களுடன் போகிறார்கள். குடிப்பதற்கு தண்ணி தட்டுப்பாடா?

**கோபாலு :** இல்லை. வண்டி ஓடுவதற்கு பெற்றோல் தட்டுப்பாடாம்.

பொதுமக்கள் பலரும் கொல்லப்படுவதனையும் நாம் அறிந்திருக்கிறோம்.

இவற்றைவிட சங்க இலக்கியத்திலும் பல இடங்களில் 'செல்' என்ற சொல் கையாண்டிருப்பதனை பார்க்க முடிகிறது. கம்பராமாயணத்தில் இராமர் காட்டுக்குச் சென்றதனால்


**ஆசை வெறிக்கு மாற்றாக அன்பையும்**
**பிடிவாதத்துக்கு மாற்றாக விட்டுக் கொடுக்கும் தன்மையையும்**
**மோதலுக்கு மாற்றாக சமரசத்தையும்**
**அடித்துப் பிடுங்குவதற்கு மாற்றாக தியாகத்தையும்**

இவ்வுலகிற்கு சொல்லிச் சென்றார். என நீதி நூல்கள் விதந்துரைப்பதனைக் காணலாம்.

'செல்' என்பது வெறுமனே கட்டளையிடும் சொல்லாக அன்றி தேவையான நேரத்தில் பொருத்தமான கட்டளைகளை ஏற்று அதன்படி செயலாற்றுவதையும் சுட்டி நிற்கிறது என்பது இதிலிருந்து புலனாகின்றது. எனவே செல் என்பது இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றாப்போல் பல அர்த்தங்களைக் கொண்ட சொல்லாக தமிழ் மொழியில் கையாளப்படுவதனைக் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சோடி



## மாணவரின் நிலை

மூன்றாம் அலையின் தாக்கத்தின் பின் ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன.

**- கல்வி அமைச்சர்**

எமது சம்பள பிரச்சனைக்கு அரசாங்கம் தீர்வு தராவிடில் ஆசிரியர்கள் எவரும் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடப் போவதில்லை.

**- ஆசிரியர் சங்கம்**




## பணமதிப்பு

நான் மத்தியவங்கி ஆளுநராக பதவியேற்றவுடன் நாட்டின் பணமதிப்பிழப்பை நிவர்த்தி செய்வேன்.

**- அமைச்சர் நிவால்ட் கப்ரேல்**

மத்தியவங்கியின் ஆளுநர் நிவால்ட் கப்ரேல் பதவியேற்றதிலிருந்து ஒரு மாதத்திற்குள் வெளியிட்டுள்ள 1368 பில்லியன் பணத்தினால் நாட்டில் பண மதிப்பிழப்பு ஏற்படவுள்ளது.

**- முன்னாள் மத்தியவங்கி ஆளுநர்.**





## டொலருக்குத் தீர்வு

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

**- அரசாங்கம்**

ஜனாதிபதியிடம் அனுமதி கோரப்பட்டு விற்பனை செய்யவுள்ள அரச சொத்துக்கள் விபரம் வெளியீடு

**- தேசிய தொழிற்சங்கங்கள்.**

## ஏன் இப்படி

வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் இலங்கையின் வளர்ச்சிக்கு உதவவேண்டும். ஒரே மக்களாக நாட்டை வளர்ப்போம்.

**- ஜனாதிபதி**

வடக்கில் தமிழர்களை சிறுபான்மையினராக மாற்ற அரசு திட்டமிட்டு செயற்படுகிறது. குடியேற்றம் செய்கிறது.

**- சார்ஸ் நிர்மலநாதன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிப்படத்திற்குக் கருத்திடு

**இந்த வரிப்படத்தை என்னவென்று கண்டறிந்து அது தொடர்பில் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்**

## போட்டி 05



## விதிமுறைகள்

01. ஆக்கம் 100 சொற்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
02. ஆக்கத்தினை 20.11.2021ஆம் திகதிக்கு முன்னர அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. வெற்றிபெறும் ஆக்கம் அடுத்த இதழில் பிரசுரமாகும்.
04. வெற்றிபெற்ற ஆக்கத்திற்கு 1000ரூபா பரிசு வழங்கப்படும்.
05. பரிசுகள் 30.12.2021ஆம் திகதிக்கு முன் வழங்கப்படும்.
06. editor@siriththiran.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும். அல்லது "65, வேலப்பர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பவும்.

## வரிப்படத்திற்குக் கருத்திடு போட்டி 04 இன் வெற்றியாளர்



1972இல் வியட்நாமியப் போரின் கோரத் தன்மையினை உலகிற்குக் காட்டும் அவலக்காட்சி. அமெரிக்கா வியட்நாமிய நிலங்களில் வீசிய "நேபாம்" வகைக் குண்டுகளுக்கு இரையான சிறுவர்கள் உறவுக ளையும் தொலைத்து உடல் பற்றியெரிய சாலையில் ஓடும் இக்காட்சியே உலக அரங்கில் அரசியல் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியது.

அமெரிக்க வல்லரசின் போர் வெறிக்கான சாட்சியமான ஓர் புகைப்படம். கிம்ஃபுக் என்ற ஒன்பது வயதுச் சிறுமி ஒருவர் உடலில் எரிகாயங்களுடன் நிர்வாணமாக ஓடும் காட்சி உலகை உலுக்கியது.

தனக்கு ஏற்பட்ட அவமானங்களிலிருந்து மீண்டு "கிம்ஃபுக்" நிறுவனம் எனும் தொண்டு நிறுவனத்தை அமைத்து வியட்நாமிய போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுவதோடு அவர்களின் தாயாகவும் இருந்து வருகிறார்.

மருத்துவக் கனவுடன் கல்விகற்ற கிம்ஃபுக்தான் படத்திலுள்ள சிறுமி என இனங்கண்ட வியட்நாமியக் கம்யூனிச அரசு அவரை மருத்துவப்படிப்பிலிருந்து நிறுத்தி பரப்புரை செய்யும் அரச ஊழியராக நியமித்து போரின் அடையாள காட்சிப் பொருளாக்கினர்.

பின்நாளில் கனடாவின் யோர்க் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதி பட்டமும், யுனெஸ்கோ இவரின் தன்னலமற்ற சேவையை அங்கீகரித்து நல்லெண்ணத் தூதுவராகவும் நியமித்திருக்கின்றது.

**டக்ஷனா கிருஷ்ணானந்தன்**
**கிளிநொச்சி.**

## பாராட்டுப் பெறுவோர்

1. **சண்முகநாதன் பாலசுதன்**
   **அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.**
2. **கார்த்திகா சச்சிதானந்தம்**
   **யாழ்ப்பாணம்**
3. **மதுசீலன் கேதீஸ்வரன்**
   **செங்கலடி, மட்டக்களப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள் கதை




ரஜித்திரா விமலதாசன்

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.."**

**எனும் திருக்குறளை அடிப்படையாக கொண்ட கதை**

அழகான குடும்பம் அம்மா அப்பா இரண்டு சகோதரிகள் ஒரு சகோதரன் என நன்றாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். அம்மா வீட்டில் இருந்தார்.




அப்பா ஒரு வைத்தியர் சகோதரன் வெளிநாட்டில் தங்கி வேலை செய்து கொண்டிருந்தார். அப்பா வைத்தியர் என்ற காரணத்தினால் கொரோணா நிலமையிலும் தன் குடும்பத்தினரைப் பற்றி யோசிக்காமல் பொதுமக்களின் நலனுக்காக பொதுநலமாக யோசித்துக் கடமை புரிந்தார் வைத்தியர். அவரை அறியாமலே கொரோணாவில் பாதிக்கப்பட்டார். அதுமட்டுமல்ல மனைவி இரண்டு பிள்ளைகளும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த உலக மக்களின் நன்மைக்காக தன் உயிரைப் பற்றி யோசிக்காமல்பொதுநலமாகயோசித்துதன்குடும்பத்திற்கு தேவையானதைச் செய்து கொடுத்துக்கொண்டே மற்ற உயிர்களையும் போராடிக் காப்பாற்றிக்கொண்டிருந்தார்.

ஆயினும் அவரால் தன் மகனைக் காப்பாற்ற முடியவில்லை. எத்தனை உயிர்களைக் காப்பாற்றிய வைத்தியர் சுயநல மாக யோசித்திருந்தால் தன் மகனை காப்பாற்றியிருப்பார். ஆனால் பொதுநலமாக யோசித்து தன் மகனை இழந்து விட்டார்.

பொதுநலமாக யோசிப்பது எவ்வளவு பெரிய ஒரு விடயம். இந்தக் கொரோணா காலத்திலும் அதனால் பெற்ற மகனையும் மற்ற உயிர்களையும் சரிசமனாகப் பார்த்த வைத்தியருக்கு இந்த உலகம் என்ன பரிசளித்தது என்று ஊடகத்துறைகள் வினாக்களை எழுப்பியதற்கு ஒரு பத்து வயதுச் சிறுமி பதிலளித்தார்.

ஏன் நாங்கள் பொதுநலமாக இருக்க வேண்டும் என்று யோசிக்கவில்லை.

வைத்தியர்களுக்கு அவர்களின் குடும்பத்தினர் களுக்கு உயிர் முக்கியமில்லையா? உங்கள் உயிர்களை காப்பாற்றுங்கள் என்று வைத்தியர்கள் கூறிவிட்டு வீட்டில் இருந்தால் நோயாளிகளின் நிலமைகள் என்ன? நீங்கள் நினைத்த நேரத்தில் தேவையற்ற காரணங்களுக்காக வெளியில் செல்வது பொதுவிழாக்கள் நடத்துவது அவசியமா? இல்லையா என்று உங்கள் மனதிற்கு தோன்றவில் லையா?

முகக்கவசம் அணிவது உங்கள் நலனும் உங்களை சேர்ந்த உறவுகளின் நலனும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

முகக்கவசம் அணிந்ததை தெருவில் வீசுகின்றீங்கள் ஏன் மறுபடி அதே நடைபாதையில் நீங்கள் மிதிக்க மாட்டீங்கள் என்று நினைக்கின்றீங்களா?

என்று அந்தச் சிறுமி வினாக்களை எழுப்பினாள்.

அந்த சிறுமியின் கேள்விகள் யார் மனதில் பதிந்ததோ இல்லையோ தன் மகனின் உயிரை இழந்த அந்த பொதுநல மருத்துவருக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது. தன்னுடைய கஷ்டங்களை சில வயது வந்தவர்களே உணராத நிலையில் ஒரு சிறுமி அறியாத வயதில் பொதுநலமாக யோசித்ததை நினைத்து ஆனந்தம் கொண்டு தன் செலவில் அந்த சிறுமியின் வைத்திய படிப்பிற்கு உதவி செய்ய முன்வந்தார்.

சிறுமியின் பெற்றோரும் ஆனந்தம் கொண்டனர்.

மனிதநேயம் ஏதோ ஒரு மூலையில் வாழ்வதனை நம் இதயத்திலும் கொண்டுவந்தால் எவ்வளவு நன்றாக இந்த உலகம் மட்டும் அல்ல. எங்கள் மனங்களும் பூந்தோட்டமாக மாறும் என்று கூறிக்கொண்டே மனித நேயம் கொண்ட மனிதர்களால் தான் இந்த உலகம் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மனிதநேயம் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

**பக்க அனுசரணை: குணரத்தினம் கிருபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணங்களின் பயணங்கள்...

"பயணச்சுவை" போட்டியில்
தெரிவான கட்டுரை




திவாகரன் செல்வநாயகம்
கல்லடி, மட்டக்களப்பு.

**அதிகாலை** 4 மணிக்கு அம்மா போட்டு தந்த டீயைக் குடிச்சிட்டு நல்ல குளிர் தாங்கக் கூடிய சேட்டும், அந்த நேரம் கொரோனா என்றதால மாஸ்க் உம் போட்டுகொண்டு பக்கத்து வீட்டு சக்தி அண்ணாவையும் பின்னால ஏத்திகொண்டு மூதூர் நோக்கி பயணத்தை தொடங்கியாச்சி.

மட்டக்களப்பு - வாழைச்சேனை - நாவலடி சந்தி - வாகரை - செருவில தாண்டி திருகோணமலை பக்கம்வாற நேரம் மூதூர்க்கு போக முதல் நீலாபொல என்று ஒரு பெயர் பலகையோட ஒரு சந்தி வரும்.

முதல் பாரதிபுரம் என்று தானாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இடத்தில் பெயர் பலகை இருந்ததாம். அதை கழட்டிட்டு இப்ப கொஞ்ச நாளாகத்தான் நீலாபொல என்ற சிங்கள ஊர் பெயர் பலகை வைத்தார்களாம். (ஊராக்கள்தான் சொன்னாங்க)

நீலாபொல சந்தியில ஒரு சாப்பாட்டு கடை இருக்கு செருவில கடந்து வாற நேரம் திறந்து இருந்தது அந்த கடை மட்டும்தான்.

அங்க பிளேன்டி உம் குடிச்சி 3 பரோட்டாவும் சாப்பிட்டம். அப்போ அந்த நேரம் அவளவாக பசிக்கல்ல அதிகாலை நேர பிரயாணம் என்றதால களைப்பும் இருக்கல்ல என்றாலும் காட்டுக்குள்ள போன பிறகு பசி எடுத்தால் என்ன செய்றது என்று கதைச்சிக்கொண்டே சாப்பிட்டு முடிக்க நேரம் 7 மணிக்கு கிட்டத்தட்ட வந்திட்டு.

கைகாவலுக்கு 3 மரக்கறி ரொட்டியும் வாங்கி எடுத்திட்டு நீலாபொல வீதியால போய்க்கொண்டே இருக்கம்.

வீதிக்கு அருகாகவே பெரிய வாய்காலும் அது நிறையத் தண்ணீரும் நீண்ட தூரம் வரை எங்களுடன் வந்துகொண்டே இருந்தது.

அப்போ சக்தி அண்ணா சொல்றார் "இன்னும் 8 மணி கூட ஆகல்ல, காட்டு மிருகங்கள்ட நடமாட்டம் குறைந்திருக்காது, நாம எப்படியாச்சும் எட்டு மணி வரைக்கும் நேரத்தை கடத்த வேணும்."

ஓம் அண்ணா எனக்கும் அதுதான் யோசனையா இருக்கு,

நான் சொல்ல முதல் நீங்களே சொல்லிட்டீங்க..

அங்கே என்னென்ன மிருகங்கள் இருக்கும்..

அவைகளிடமிருந்து எப்படி தப்பிப்பது..

அப்படி இப்படி என்று நிறைய பயம் கலந்த கதைகளை கதைத்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தோம்.

போகும்போது கங்குவேலி எனுமிடத்தில் 8 மணி வரை நேரத்தை கடத்தி விட்டு லிங்கபுரம் காட்டு பகுதியின் எல்லையில் உள்ள அணைக்கட்டில் மோட்டார் சைக்கிளினை ஏற்றிக் கொண்டு காட்டுக்குள் இறங்குவதற்கு வழியை தேடிக்கொண்டே 2-3 கிலோமீட்டர்கள் பயணம் செய்தோம்.

காட்டுக்குள் செல்வதற்கென பிரதான வழிகள் ஏதும் இல்லை என்பதால் சரியான பாதையை கண்டுபிடிப்பதும் பின்னர் போன வழியால் திரும்பிவந்து ஊருக்குள் சேருவது என்பதும் மிகவும் கடினமான வேலை.

அணைக்கட்டிலிருந்து காட்டுக்குள் மோட்டார் சைக்கிளை இறக்க முடியாதவாறு யானை வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. கடைசியாக யானை வேலி முடிவடையும் இடத்தில் காட்டுக்குள் ஆட்கள் சென்று வந்த அடையாளங்களுடன் ஒரு வழிப் பகுதியைக் கண்டு பிடித்தோம்.

அதே வழியால் நாமும் சற்று தூரம் பயணிக்க கழுமரம் போன்ற அமைப்பில் கீழே பெரிய அளவான கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட அமைப்பு ஒன்று எம்மை வரவேற்றது.

அதைக் கண்டதும் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி காட்டுக்குள் இறங்கி விட்டோம் எனும் பயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் சரியான பாதையில் தான் பயணிக்கிறோம் என நினைத்து மகிழ்ச்சியில் இருந்தோம்.

சில நாட்களுக்கு முன்னர் அந்த இடத்தில் ஏதோ சடங்கு நடைபெற்றிருக்க வேண்டும் என நினைக்கிறேன். பூசைப் பொருட்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன.

அந்த இடத்திலும் நின்று வணங்கி விட்டு சில புகைப்படங்களும் எடுத்துவிட்டு வாகனங்கள் சென்று வந்த பாதையிலேயே தொடர்ந்து லிங்கபுரம் காடு நோக்கி பயணித்தோம்.

மண்ணில் உரலை வைத்து வைத்து எடுத்ததுபோல பாதச்சுவடுகள் தெரியத் தொடங்குகிறது. அவ்வளவாக பயப்படவில்லை எது நடந்தாலும் சமாளிப்போம் இனி பின்வாங்க முடியாது என்ற நிலையில் அடி பார்ப்பதற்காக சக்தி அண்ணா கிரங்கிச் சென்றார்.

நானும் அவர் பின்னாலே மோட்டார்சைக்கிளை மெதுமெதுவாக எடுத்துக்கொண்டு சென்றேன். நாம் செல்லும் பாதையில் இருந்து யானையின் பாதம் விலகிச் சென்று கொண்டே இருப்பதால் அந்த யானை தற்போது இந்த இடத்தில் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு மீண்டும் சற்று வேகமாகவும் அவதானமாகவும் சென்று கொண்டிருந்தோம்.

அடி பார்க்க தெரியாதவன் காட்டு வழியில் பயணிக்க தகுதியற்றவன் என கூறுவார்கள். காட்டில் மணலில் பதிந்து இருக்கும் கால் தடங்களை வைத்தே என்னென்ன இடர்கள் என்னென்ன மிருகங்களால் வரும் என முன்கூட்டியே நாம் கணிக்க வேண்டும்.

அப்போதுதான் தாக்குதல்கள் நடத்தப்பட்டாலும் சமாளிக்கும் சந்தர்ப்பம் நம்மிடம் இருக்கும்.

அனேகமான மிருகங்கள் மனிதரைப் போன்று எடுத்தவுடன் தாக்காது. எப்படியும் நம்மிடமிருந்து விலகிச் செல்லவே எத்தனிக்கும் அவை அவ்வாறு விலகிச்செல்ல இடம் கொடுப்பதே நம்மால் செய்யக்கூடிய முதலாவது வேலை.

## வாழ்த்துரை



"சிரித்திரன்" 1963இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கிய ஒரு நகைச்சுவை இதழ். இந்த இதழின் பெயர் என்ன பொருளைப் புலப்படுத் துகிறது? "சும்மா இரன்", "அதில பார்த்து இரன்" என்று யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிலே கூறுவது போல, "சிரித்து இரன்" என்று இந்த இதழைப் படிப்பவர்க ளுக்கு ஆசிரியர் சிவஞானசுந்தரம் கூறுவது போல அமைந்துள்ளது.

காத்திருந்து வாங்கிப் படிக்கும் இதழாகச் சிரித்திரன் வெளிவந்துகொண்டிருக்கிறது. இடையிலே ஆண்டுகள் மறைநிலையிலேயே இருந்தாலும் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்பதாக சிரித்திரன் இந்த ஆண்டு தொடக்கம் வரத் தொடங்கிவிட்டது.

"சிரித்திரன்" அரசியல், சமூக, பண்பாட்டு, வாழ்வியல் தொடர்பான விடயங்களைத் தொட்டுச் சென்றாலும், நம்முடைய வாழ்வியலின் அன்றாட நடைமுறைகள் பண்பாட்டு உன்னதங்கள், சீரழிவுகள் ஆகியவற்றிலேயே சிறப்பான கண்காணிப்பினைச் செய்தது. புதிய "சிரித்திரன்" இக்காலத்துக் கோலங்களை நன்கு கண்காணித்துத் தன் பங்களிப்பினை படிப்பவர்களுக்கு நல்கும் என்பதில் ஐயமில்லை. மிக நேர்த்தியான முறையில் சிரித்திரன் தன் பங்களிப்பினை நல்கவேண்டுமென என்னுடைய அன்பான வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வடைகிறேன்.

**வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகநாதன்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

அப்படி விலகிச்செல்ல முடியாவிடில் அவை தற்காப்புக்காக நம்மை தாக்கி விட்டுச் செல்லவே எத்தனிக்கும் அதற்கு இடம் கொடுக்காமல் காட்டு மிருகங்களை கண்டதும் நாம் அவற்றிடமிருந்து விலகிச் செல்வதே புத்திசாலித்தனம்.

நாம் போகும் வழியில் மரை, குரங்கு, மயில், உடும்பு, முயல் போன்றவையும் கண்ணிற்பட்டது. அவற்றை நாம் தொந்தரவு செய்யவில்லை எனினும் எம்மைக் கண்டவுடன் சற்று மறைவான இடத்திற்கு அவை சென்றுவிட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குள் ஒரு மணி நேர பயணத்தின் பின் திருமங்களாய் சிவன் கோவிலை வந்தடைந்தோம்.

மட்டக்களப்பில இருந்து அண்ணளவாக 90 கிலோமீட்டர் தொலைவிலும் கிளிவெட்டி பிரதேசத்தில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவிலும் இந்த லிங்கபுரம் என்ற காட்டுப் பகுதி உள்ளது.

முன்பு இந்த இடம் திருமங்களாய் என அழைக்கப்பட்டது. தமிழர்கள் செறிவாய் வாழ்ந்த இந்த பகுதி, 1964 இன் பின்னர் உருவான கலகங்களால் அடர்ந்த வன பகுதியாய் மாறி காடுகளானது என அறிய முடிந்தது. திருமங்களாய் சிவன் கோவில் ஓர் மிக புராதன சிவன் கோவில் தான் என முதல் பார்வையிலேயே அறிய முடிந்தது.

திருகோணமலை வரலாற்றை கூறும் திருக்கரசை புராணம் என்ற வரலாற்று நூலில் திருமங்களாய் பற்றி பல குறிப்புகள் உள்ளன.

**"இடைபிங் கலைம வானோ டிலங்கை நடுநின்ற மேரு நடுவாம் சுழுனை கடவும் பாலைவனம் கைகண்ட மூலம் படர்வொன்றி யெண்ணும் பரமாம் பரமே"**

என திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடும் தில்லைவனம் இந்த லிங்கபுரம் வனமாகவே இருக்க வேண்டும் என்பதும் ஒரு கதை. இது எவ்வளவு உண்மை என நிரூபிக்கும் அளவு அறிவு எனக்கில்லை. அறிந்தவற்றை ஒப்புவிக்கிறேன் அவ்வளவு தான். ஆர்வம் உள்ளவர்கள் ஆதாரத்தை தேடி எடுத்துக்கொள்ளலாம்.

கோவிலுக்கு வந்து சேர்ந்ததும் எல்லையற்ற மகிழ்ச்சி. இது கோவிலை கண்டதால் வந்த மகிழ்ச்சி என்பதை விட ஒரு விலங்கிடமும் நாம் மாட்டிக் கொள்ளவில்லை என்கின்ற மகிழ்ச்சி தான் எனலாம்.

வந்து இந்த இடத்தை பார்க்கும் போதே ஒரு வகை பயத்தையும் ஆச்சரியத்தையும் ஒரே நேரத்தில் என்னுள் உணர முடிந்தது.

ஏற்கனவே தொல்பொருள் ஆய்வாளர்கள் வந்து முழுமையாக ஆராய்ச்சிகளை முடித்த இடம் என்பதால் அத்திவாரம் வெட்டிய குழிகள் போல இருந்த குழிகள் கண்ணில் பட்டது ஆச்சரியம் இல்லை. எனினும் அங்கு இருந்த பழைமை வியக்க வைத்தது. கோவில் என சொல்லும் போது ஒரே ஒரு கட்டடம் தான் கட்டடம் போன்ற கட்டமைப்புடன் இருந்தது. மற்றவை எல்லாம்




உடைந்து விட்டது. புதிதாக யாரோ லிங்கம், நந்தி, பலிபீடம் என்பவற்றை பிரதிஷ்டை செய்துள்ளார்கள். அவை மட்டும் அங்கே புதியவை என முதல் பார்வையிலேயே அறியக்கூடியதாக இருந்தது.

சுற்று வட்டாரத்தில் நேர்த்தியாக பொழியப்பட்ட தூண்கள் மற்றும் குழிக்கற்கள் எவ்வளவு பிரம்மாண்டமான கோயில் அவ்விடத்தில் இருந்திருக்கும் என்பதை சான்று பகிர்கின்றன. முற்றுமுழுதாக கருங்கல்லால் செதுக்கப்பட்ட கோமுகி ஒன்றினையும் என்னால் அங்கு அவதானிக்க முடிந்தது.

சோழர் காலத்து சிவன் கோயில் என்பதால் அவர்களது கட்டடக்கலையில் கோமுகிக்கு கொடுக்கும் இடம் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை இது பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

கோவிலின் முன்னால் சதுரவடிவ சுரங்கம் ஒன்றும் உள்ளது. எங்கு சென்று முடிகிறது என தெரியவில்லை. ஆனால் நிலத்துக்குக் கீழே வளைந்து செல்கிறது அதனுள் புற்கள் வளர்ந்துள்ளதால் மேலிருந்து கீழே என்ன இருக்கிறது என பார்க்க முடியவில்லை. எனினும் திருகோணமலை வரை சுரங்கம் செல்வதாக கதையொன்று உலாவுகிறது இதற்கும் சான்றுகள் என்னிடம் இல்லை.

அண்மைய ஆய்வுகளில் இங்கு 5 மிக பழமையான கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 3 கல்வெட்டுகள் கி.பி 10,11 நூற்றாண்டுக்கு உரியவையும் மீதி இரண்டு 14 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை எனவும் கருதப்படுகிறது.

சுற்றவர முழுமையாகப் பார்த்துவிட்டு காட்டில் கிடைத்த பூக்களை வைத்து சிவலிங்கத்தை வணங்கி விட்டு ஒரு மணிநேரத்தின் பின் மீண்டும் "நீலாப்பொல" கிராமம் நோக்கி வந்த வழியே பயணத்தை தொடர்ந்தோம்.

**அடுத்த பயணத்தில் சந்திப்போம்...**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்வாழ்வு?

மரணங்கள் மட்டும் இன்று
மிகமலிவுப் பொருட்களாச்சு!
மரணத்தின் அர்த்தம் மட்டுமல்ல
வாழ்க்கையதன்
அர்த்தமும் புரியாது
அகங்கள் அஞ்சித் தவிக்கிறது!

கர்வம், தடிப்பு, காசு, சாதி, மதம், பட்டம்,
உறவு, பிள்ளைகுட்டி, உருத்து,
நட்பு, பாசம், எல்லாம்
பெறுமானம்அற்று
பேச்சிழந்துகிடக்கிறது!
பெருந்தொற்று, தனிப்படுத்தல்,
பின்தொடரும் மரணநிழல்,
விரிக்கும் புதுக்கதைகள்...
மானுட விழுமியமும்
மரித்துக் கொண்டிருக்கும்
வரலாற்றைச் சொல்கிறது!

தொற்றால் கணவன் தனிமைப்பட்டுத்துவள,
தொற்றின் கொடூரத்தால் துடித்து
மனையாள் மரித்து
யார்க்கும் முகங்காட்டாதிருந்து
சேய்களும் பாராது
தீயிற்கிரையாக,

தேற்றுதற்கோ... துயர்பகிர்ந்து
ஆறுதல் சொல்வதற்கோ
அயல் அணுக ஏலாதுறைய,
உற்றார் உறவுநட்பும் ஊமைகளாய்
கண்ணீரை
ஒற்றித்துடைப்பதற்கோ
கிட்ட நெருங்கு தற்கோ
வழியற்றுடைய,
வார்த்தைகளில் சொல்ல வொண்ணா
உளத்துக்கத்தோடு
உதிரும் நாட்கள் சருகாய்!
இவ்வளவா ஆட்டம்?
இவ்வளவா வாழ்க்கை?
இவ்வளவா கற்பனைகள்?
இவ்வளவா வேசம்?
இவ்வளவுதானா இரந்துசேர்த்த
ஆசைவகை?
இவ்வளவு அற்பமா எதார்த்தம்?
பெறுமானம்
இவ்வளவா உயிரின் இருப்புக்கும்?

வசதி வாய்ப்பு
எவ்வளவு இருந்தும் யார்எதுவும்
செய்ய ஏலாக்
கையாலாகாத்தனத்தோடு
கைகட்டி
'பொய்வாழ்வு' என்பதைப்புரிந்தும்
புரியாதும்

செய்வதறியாது திகைக்கிறது
வாழும் ஏக்கம்!
நேற்றைய நிலைவேறு...
நாளைய நிலை அறிவதாரு...?
மாற்றுவழி இல்லா
மரணப்பொறி இன்று... விதி
கூற்றாய்ப்பிடர் பிடித்துத்தள்ளிக்
குழிபறிக்க
தோற்கும்பலம், செல்வம்!
சுரத்திழந்தெம் நிஜம் யதார்த்தம்!

- தனபாலசிங்கம் ஜெயசீலன்



## சிரித்திரன் அகராதி

**புரோயிலர்:** கூடு கட்டி வசிக்கும் ஒன்றரை மாதப் பயிர்.

**பரீட்சை:** நான்கு மாதம் உண்டதை 2 மணிநேரத்தில் வாந்தி எடுப்பது.

**சீனி:** பதுக்கும் பொருட்களில் தற்போது முதலிடத்தை வகிப்பது.

**வைத்தியர்:** புரியாத கையெழுத்தில் தலையெழுத்தை மாற்றுபவர்.

**அரசாங்க உத்தியோகம்:** கச்சேரிக் கோடியில் தவமிருந்து பெறும் பிள்ளை வரம்.


**தனிமைப்படுத்தல்:** வீட்டிலிருந்து தனியே சென்று வைத்தியசாலையில் கூடியிருப்பது.

**மன்னார்:** தோண்டத் தோண்ட தலைகள் வரும் மர்மதேசம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகாபாரதத்தில்

## சொல்லப்படாத உண்மைகளும் சொல்லப்பட்ட பொய்களும்

தமிழ்மணி அகளங்கன்

மனித வாழ்க்கையில் பொய் சொல்லாத ஒரே மனிதன் அரிச்சந்திரன் மட்டுமே. ஏனையவர்கள் ஏதோ ஒருசந்தர்ப்பத்திலாவது பொய் சொல்லவேண்டியவர்களாக ஆகிவிடுகிறார்கள் என்பது இலக்கியங்கள் காட்டும் உண்மையாக இருக்கிறது.

பொய் சொல்லக்கூடாது. அது பாவம் என்பது எங்களுக்குச் சொல்லித்தரப்பட்ட அறக்கருத்தாகும். இருப்பினும் சொல்லப்படுகின்ற பொய்யினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாமல் எல்லோருக்கும் நன்மையே ஏற்படுமாயின் அப்பொய் மெய்யாகும் என்கிறார் திருவள்ளுவர்.

**"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்"**


இப்படிப் பொய்பற்றி ஒரு கருத்தைச் சொல்லும் திருவள்ளுவர் உண்மை என்பது என்ன என்பதையும் தனியாக வரைவிலக்கணப்படுத்துகிறார்.

எவருக்கும் சிறிதளவு கூட தீங்கு செய்யாத சொற்களைச் சொல்லுவது வாய்மை என்கிறார் திருவள்ளுவர்.

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்."**

உண்மை, வாய்மை, மெய்மை என்பவையெல்லாம் ஒரே கருத்துள்ள சொற்கள் என்றே நாம் பயன்படுத்துகிறோம். இருப்பினும் இவற்றுள்ளும் நுட்பமான வேறுபாடுகள் இருக்கின்றன என்கிறார்கள் தமிழறிஞர்கள். அதுபற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

மகாபாரதம் என்ற இதிகாசம் மக்களுக்கு வாழ்க்கைத் தத்துவங்கள் பலவற்றை வழங்கியுள்ளது. அந்த அற்புதமான இலக்கியத்தில் சொல்லப்படாத உண்மைகளும் உள்ளன. சொல்லப்பட்ட பொய்களும் உள்ளன என்பதுதான் ஆச்சரியம்.



### சொல்லப்படாத உண்மைகள்

#### சத்தியவதி

தாசராஜன் என்பவன் செம்படவர் குலத்துத் தலைவன். செம்படவர்களின் தொழில் மீன் பிடித்து விற்றல், மற்றும் ஆற்றில் படகு ஓட்டி பிரயாணிகளைக் கரைசேர்த்தல். இவர்களை வேடுவர்கள் என்றும் சொல்லுவார்கள்.

இராமாயணத்தில் வரும் குகனும் செம்படவனே. ஆயிரம் படகுகளுக்குச் சொந்தக்காரனாகிய குகனை வேடுவன் என்றே கம்பராமாயணம் சொல்லுகிறது.

தாசராஜனின் செம்படவர்கள் ஒரு பெரிய மீனைப் பிடித்துக்கொண்டுவந்து தாசராஜனிடம் கொடுக்கிறார்கள். அதனை வெட்டிப்பார்த்தபோது ஒரு ஆண்குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் இருப்பதைக்கண்டு ஆச்சரியப்படுகிறான்.

அக்குழந்தைகள் வசுராஜன் என்பவன் மூலம் உருவாகியவர்கள் என்று அறிந்து அவனிடம் ஒப்படைக்கிறான். அவன் ஆண்குழந்தையை தான் வளர்ப்பதாகவும் பெண் குழந்தையை தாசராஜனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கும்படியும் சொல்கிறான்.

பெண்பிள்ளைகளை வேறிடத்தில் வளர விட்டவர்கள் பலரை இலக்கியங்கள் மூலம் காண்கிறோம். குறிப்பாக தசரதனுக்கு சாந்தா என்று ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தை பட்டத்தரசிகளான கோசலை, சுமித்திரை, கைகேயி ஆகியவர்களில் ஒருத்திக்குப் பிறந்ததா அல்லது வேறு மனைவிக்குப் பிறந்ததா என்பதை அறியமுடியவில்லை.



அப்பிள்ளையை அவர் தனது நண்பனும் அங்க நாட்டு அரசனுமாகிய உரோமபாதன் என்பவனிடம் வளர்க்கக் கொடுத்துவிடுகிறான். அந்தச் சாந்தாவைத் திருமணம் செய்தவர் இருசியசிருங்கர் என்ற முனிவர்.

இவர் செய்துகொடுத்த புத்திர காமேஷ்டி யாகத்தின் மூலமே தசரதருக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகியோர் பிறந்தனர் என்பது இராமாயணம் தரும் செய்தி.

சூரசேனன் என்ற அரசன் தனக்குப் பிறந்த மகளுக்குப் பிருதை என்று பெயரிட்டான். அப்பெண்குழந்தையைத் தனது நண்பனான குந்திபோஜன் என்ற மன்னனிடம் வளர்க்கக் கொடுத்தான். குந்திபோஜன் வளர்த்ததால் அப் பெண் குழந்தையை குந்தி என்று அழைத்தனர்.

தாசராஜன் வளர்த்த பெண்பிள்ளையின் உடலிலிருந்து மீன் மணம் வீசியதால் அப்பெண்பிள்ளையை "மச்சகந்தி" என்று அழைத்தனர். மச்சம் என்பது மீனைக்குறிக்கும் சொல். கந்தம் என்றால் மணம் என்றுபொருள்.

மச்சகந்தி படகு ஓட்டுவதைத் தொழிலாகச் செய்தாள். முதல் மரியாதை படத்தில் ராதா பரிசல் ஓட்டுவதைப்போல என்று (நினைத்துக் கொள்ளுங்கள்.)

ஒரு நாள் பராசரர் என்ற முனிவர் ஆற்றங்கரைக்கு வந்தார், அவசரமாக அக்கரைக்குச் செல்லவேண்டுமென்று சொல்லி மச்சகந்தியின் படகில் ஏறினார். அவர் நினைத்த வேகத்தில் படகு செல்லவில்லை.

அவர் நினைத்திருந்த நேரத்தில் ஒரு பிள்ளை பிறந்தால் அப்பிள்ளை மிகப்பெரிய அறிவாளியாக, ஞானியாக உலகுக்குப் பயன்படக்கூடிய பிள்ளையாக வரும் என்று நம்பினார்.

நேரம் கடந்து போய்க்கொண்டிருந்ததால் மச்சகந்தியிடம் சொல்லி அவளைக்கூடி ஒரு பிள்ளையைப் பெற்றார். அப்பிள்ளையே வேதங்களை நான்காக வகுத்தவரும், மகா பாரதக் கதையை உலகத்துக்குத் தந்தவருமான வியாச முனிவர்.

பராசரரின் விருப்பத்துக்கு உதவிய காரணத்தால் அவர் மச்சகந்தியின் உடலில் இருந்த மீன் மணத்தை மாற்றி பரிமள வாசம் வீசும் படி செய்தார். அன்றிலிருந்து அவள் "பரிமள கந்தி" என்று அழைக்கப்பட்டாள்.

அஸ்த்தினாபுரத்து அரசன் சந்தனுவினால் காதலிக்கப்பட்டு திருமணம் செய்யப்பட்டு "சத்தியவதி" என்ற பெயரில் அரசியாக வாழ்ந்த அந்தப் பெண், அரசனிடம் தனது கடந்தகால வாழ்க்கையை மறைத்தே வாழ்ந்திருந்தாள்.

தனக்கும் சந்தனுவுக்கும் பிறந்த பிள்ளைகளின் மூலம் சந்ததி வளராமையினால் தனது ஒரு மகனான விசித்திர வீரியனின் விதவை மனைவிகள் மூலம் சந்ததியை உருவாக்க விரும்பிய சத்தியவதி தனது மகனான வியாசர் மூலம் திருதராட்டிரன், பாண்டு ஆகிய பிள்ளைகளை உருவாக்குகிறாள்.

சத்தியவதியினால் சொல்லப்படாதிருந்த உண்மை இது.

இதே போல குந்திதேவியினால் சொல்லப்படாத உண்மையும் ஒன்று உண்டு. குந்திதேவி துருவாச முனிவர் சொல்லிக்கொடுத்த மந்திரத்தை உச்சரித்துத் திருமணத்தின் முன்பே ஆண் பிள்ளை ஒன்றைப் பெற்றாள், பழிக்கு அஞ்சி ஆற்றிலே விட்டாள். அப்பிள்ளையே கர்ணன்.

மகாபாரதத்தில் மிகப்பெரிய சொல்லப்படாத உண்மைகளாக இருப்பவை இவை. சத்தியவதியின் சொல்லப்படாத உண்மையினால் நன்மையே விளைந்தது. ஆனால் குந்திதேவியின் சொல்லப்படாத உண்மையினால் பேரழிவே நிகழ்ந்தது.

**சொல்லப்பட்ட பொய்கள்.**

**கர்ணன்.**

தேரோட்டியின் மகனாக வளர்ந்ததால் தாழ்த்தப்பட்டவனாக, விற்பயிற்சிக்கு அருகதை அற்றவனாக அடிமைப் புத்திரன் என்ற பொருளில் சூத புத்திரன் என்று அவமானப்படுத்தப்பட்டான் கர்ணன்.

வில் வித்தை கற்கப் பரசுராமரிடம் சென்றான். அவரோ அந்தணர்க்கு மட்டுமே வில் வித்தை கற்பிப்பதாக சபதம் பூண்டு வாழ்ந்து கொண்டிருந்தகாலம் அது. கர்ணன் தான் ஒரு அந்தணன் என்று பொய் சொல்லி அவரிடம் வில் வித்தை கற்றான். அவன் அந்தணன் இல்லை என்று அறிந்துகொண்ட பரசுராமர் தன்னிடம் (அவன் கற்ற கல்வி தக்க சமயத்தில் பயன்படாமற் போகட்டும்) என்று சாபம் கொடுத்தார்.

தாழ்த்தப்பட்ட குலத்தவனாகப் பழிக்கப்பட்ட கர்ணன் உயர் குலத்தவன் என்று பொய் சொல்லிச் சாபம் பெற்றான். ஆனால் சத்திரியனான அருச்சுனன் அக்குலத்தைவிட மேற்குலமாகச் சொல்லப்பட்ட அந்தணர் குலத்தவன் என்று பொய் சொல்லி மதிக்கப்பட்டான்.

பாஞ்சாலியின் சுயம் வரத்தில் அருச்சுனன் அந்தணக் கோலத்தில் வந்து தன்னை ஓர் அந்தணன் என்று சொல்லி வில்லைவளைத்து இலக்கை அடித்து வெற்றி பெற்றுத் திரௌபதியைத் திருமணம் செய்தான்.

உண்மையில் அவன் சத்திரியனாக இருந்ததால் சத்திரியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைத் திருமணம் செய்ய அவன் சொன்ன பொய் பழிக்கப்படவில்லை.

பாண்டவரிலே மூத்தவனான தருமன் பொய்யே சொல்லாதவன் என்று புகழப்பட்டவன். ஆனால் மகாபாரதப் போரில் பதினைந்தாம் நாள் நடைபெற்ற போரின்போது மிகப் பெரிய பொய்யைச் சொல்லிப் பழிக்கு ஆளாகினான்.

துரோணாச் சாரியார் அன்று பாண்டவ சேனைக்குச் சேனாதிபதியாக இருந்தார். அவர் உயிரோடிருக்கும் வரை போரை வெல்லமுடியாது என்ற நிலையில் கிருஷ்ணர் ஒரு சூழ்ச்சி செய்கிறார்.

துரோணாச்சாரியாரின் கையில் ஆயுதங்கள் இருக்கும் வரை அவரைக் கொல்ல முடியாது எனத் தீர்மானித்து அவர் தனது ஆயுதங்களைக் கைவிடும் நிலையை உருவாக்க வேண்டும் என்று திட்டமிடுகின்றார்.

துரோணாச்சாரியாரின் மகன் அசுவத்தாமா ஒரு பெரு வீரன். அவனைக் கொன்றுவிட்டால் புத்திர சோகத்தில் துரோணாச்சாரியார் ஆயுதங்களைப் போட்டுவிட்டு செயலற்றவராகிவிடுவார். அப்போது அவரைக் கொல்லலாம் என்பது திட்டம்.

ஆனால் அசுவத்தாமாவைக் கொல்லவே முடியாதே. ஏனெனில் அவன் கொல்லப்பட முடியாதவன். மரணம் அற்றவன்.

அதனால் அசுவத்தாமா கொல்லப்பட்டான் என்று ஒரு வதந்தியைப் பரப்பினால் அதைக்கேட்டு துரோணர் செயலிழந்துபோவார். அப்போது அவரைக் கொல்லலாம் என்று திட்டமிடுகின்றனர்.

ஆனால் வதந்தியை துரோணர் நம்பார். அதனை உறுதிப்படுத்த அவரது நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் அவர் கேட்பார். அந்த நம்பிக்கைக்குரியவர் அவருக்கு அருகில் நிற்கவேண்டும். என்று தீர்மானிக்கின்றனர்.

அந்த நம்பிக்கைக்குரியவர் தான் தருமர். அவர் துரோணருக்கு அருகில் நின்று போராடிக்கொண்டிருக்க வேண்டும். துரோணர் உண்மையை அறிய தருமரிடம் கேட்கும் போது அசுவத்தாமா இறந்தது மெய் என்று பொய் சொல்ல வேண்டும் என்று திட்டமிடுகின்றனர்.

பொய்சொல்லி யுத்தத்தில் வென்று கிடைக்கும் இராச்சியம் எனக்குத் தேவையில்லை என்று மறுக்கிறார். கிருஷ்ணர் முதல் எல்லோரும் தருமரை வற்புறுத்துகின்றனர். தருமர் ஒப்புக்கொள்ளவில்லை.

இறுதியாக வீமன் "அசுவத்தாமா என்ற பெயரில் ஒரு யானை கௌரவர் பக்கத்தில் நின்று எமக்குப் பேரழிவு செய்கிறது. நான் அதனைக் கொன்று விட்டு அசுவத்தாமாவைக் கொன்றுவிட்டேன் என்று செய்தியைப் பரப்புகிறேன். அப்போது துரோணர் கேட்டால் ஓம் என்று ஒப்புக்கொள்ளுங்கள். அது பொய் ஆகாது" என்கிறான்.


தருமர் தடுமாறுகிறார். "அசுவத்தாமா இறந்தது மெய்யா? என்று, துரோணர் உங்களைக் கேட்டால் அசுவத்தாமா இறந்தது மெய்யே என்று சொல்லுங்கள்" என்று. கிருஷ்ணர் சொல்கிறார்.

அது பொய் நான் சொல்லமாட்டேன் என்று தருமர் அப்போதும் மறுக்கிறார். "அசுவத்தாமா இறந்தது மெய்யே. ஆனால் அது ஒரு யானை" என்று சொல்லும்படி கிருஷ்ணர் ஆலோசனை சொல்கிறார். வேறு வழி இன்றி தருமரும் ஒப்புகொள்கிறார். சரி "ஆனால் அது ஒரு யானை" என்று சொல்வதை கொஞ்சம் தாழ்ந்தகுரலில் சொல்லுங்கள் என்கிறார் கிருஸ்ணர். தருமர் ஒப்புக்கொள்ளவில்லை.

அதேபோல வதந்தி பரவுகிறது. நம்பமுடியாத துரோணர் தருமரிடம் கேட்கின்றார். தருமரும் "அசுவத்தாமா இறந்தது மெய்யே. ஆனால் அது ஒரு யானை" என்கிறார். "ஆனால் அது ஒரு யானை" என்று தருமர் சொன்னதைக் கேட்கமுடியாதபடி கிருஷ்ணர் வெற்றிச் சங்கை ஊதிவிடுகிறார்.

நம்பிய துரோணர் ஆயுதங்களைப் போட்டுவிட்டு தேரினின்றும் இறங்கி தரையில் அமர்ந்து தியானத்தில் இருக்கிறார். அவரைக் கொல்வதற்கென்றே வேள்வித்தீயில் பிறந்த திட்டத்துய்மன் அவரைக் கொன்றுவிடுகிறான்.

தருமர் சொன்னது பொய்யா மெய்யா. வாய்ச் சொல்



மெய். ஆனால் எண்ணம் பொய். அதுவரையில் தரையில் படாமல் ஓடிக்கொண்டிருந்த தருமரின் தேர் அதன்பின் தரையில் ஓடியது என்கிறார் வியாசர்.

**பாண்டவர்களின் பொய்**

பன்னிரண்டு வருட வனவாசம் முடித்து ஒரு வருட அஞ்ஞாத வாசகாலத்தை அனுபவிப்பதற்காக விராட நாட்டுக்குச் சென்ற பாண்டவர்களும் பாஞ்சாலியும் தங்கள் பெயர்களை வேறாகச் சொல்லி, தாங்கள் முன்பு செய்த தொழில்களை வேறாகச்சொல்லித் தங்கள் உருவங்களை மாற்றியே அங்கு வாழ்ந்தார்கள். அதுவும் பொய்யே.

"பொய்யில்லாமல் வாழ்க்கையே இல்லை என்று ஆகிவிட்டது." என்று இன்று சொல்கிறோம். ஆனால் பொய் இல்லாமல் ஒருபெரும் இதிகாசமே இல்லை. சொல்லப்படாத உண்மைகளாலும், சொல்லப்பட்ட பொய்களாலும் கட்டி எழுப்பப்பட்டதே மகாபாரதம் என்ற இதிகாச இலக்கியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறுங்கதைப் போட்டி 1ஆம் இடம்**

புனைப்பெயர்: செச்சோப்பி
*செல்லையா ஜோர்ஜ் பிறேம்குமார்.*
*(Selliah George Premkumar)*



# பொறுப்பு



கட்டை பண்டார இரண்டு மாதத்துக்கு முன் செத்துப்போனான். பேராதனைப் பல்கலைக்கழகத்திலை நாலு வருடம் ஒண்டாய்ப் படிச்சனாங்கள். எங்கடை வகுப்பிலை இரண்டு பண்டாராக்கள். இவனுக்கு உயரம் கொஞ்சம் குறைவு எண்டபடியால் முதல்நாளே இவனுக்கு கட்டை பண்டார எண்டு பேர் வைச்சாச்சு. குடி கூத்தில்லாத அமைதியான பெடியன். இப்ப அவன்ரை வீட்டுக்குத்தான் எங்களோடை படிச்ச இன்னும் இரண்டு பேரோடை போய்க்கொண்டிருக்கிறேன்.

சிங்கள தமிழ் பிரச்சனை தலைவிரித்தாடிய காலத்திலை நாலு வருடங்கள் எப்பிடிப்போச்செண்டு தெரியாது. பட்டம் பெற்ற கையோடை வேலை தேடுற படலம் தொடங்கியது. இலங்கையிலை வேலை கிடைச்ச நாங்கள் கொஞ்சப்பேர் இஞ்சை இருக்க மிச்ச எல்லாரும் வெளிநாட்டுக்கு வேலை தேடிப் போயிட்டினம்.

இலங்கைக்குள்ளை வேலைபாத்துக் கொண்டிருந்த எங்களுக்கிடையிலையே தொடர்புகள் அறுபட்டுப் போச்சுதெண்டால் வெளிநாட்டைப்பற்றி சொல்லவேணுமே.

சிநேகிதப் பெடியங்களும் பெட்டையளும் எந்தெந்த நாடுகளுக்கோ போய் அந்தந்த நாடுகளின்ரை குடியுரிமையையும் பெற்று குடியும் குடித்தனமுமாய் வாழத்தொடங்கீட்டினம். கட்டை பண்டார வெளிநாடு போகேல்லை. எப்பவோ இரண்டொரு முறை கண்டிருக்கிறேன். அந்தவேளையிலையெல்லாம் ஒரு நல்ல சாப்பாட்டுக்கடைக்குப்போய் ஒரு பிடி பிடிப்பதோடை எங்கடை சந்திப்பு முடிந்துவிடும்.

இருபத்தியோராவது நூற்றாண்டு தனியாக வரவில்லை. அது பிறந்த சில வருடங்களிலேயே எங்களுடைய கைகளில் கைப்பேசியைத் திணித்துவிட்டது. செங்கல் அளவிருந்த கைப்பேசி தேய்ந்து தேய்ந்து கைக்கடக்கமாகி திறன்பேசி என்ற பெயருடன் வட்ஸ்அப்பைத் தனக்குள் அடக்கி இன்று ஒவ்வொருவரின் அத்தியாவசியமாகிவிட்டது.

இந்தக்காலத்தில்தான் எங்கடை வகுப்பிலை இருந்த பரதனுக்கு புதுமையான ஆனால் நியாயமான ஒரு எண்ணம் உதித்தது. வகுப்பிலை இருந்த தமிழ் பேசுகிற எல்லோரையும் ஒன்றிணைத்து வட்ஸ்அப் குழுமம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற அந்த எண்ணத்தை உடனடியாகவே செயற்படுத்தத் தொடங்கிவிட்டான். பிறகென்ன நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சிநேகிதருடன் இணைந்திருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி.

வட்ஸ்அப் குழுமம் ஒருவாறு கருவுற்று உயிர்பெற்றுப் நடமாடிப் பழைய நினைவுகளை மீட்பது. பல்கலைக்கழக நாள் நையாண்டிகள். வேடிக்கைப்பதிவுகள். உலக நடப்புகள் பற்றிய அலசல் என தாண்டவமாடத்தொடங்கியது. அப்போதுதான் கட்டை பண்டாரவின் மரணம் பற்றிய செய்தி இந்த வட்ஸ்அப்பினூடாக அதிர்ச்சிச் செய்தியாக வந்தது.


'கட்டை பண்டாரவின் மனைவி ஓர் ஆசிரியை. ஒரேயொரு மகள். பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டில் கல்விகற்கிறாள். மாரடைப்பின் காரணமாக இறந்துபோனான்' என அந்த செய்தி மேலும் தெரிவித்தது.

மரண வீட்டிற்குச் சென்று மலர்ச்செண்டு ஒன்று வைக்கமுடியாதா? என்றவாறு வட்ஸ்அப்பில் கலந்துரையாடல் தொடர்ந்தது.

எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லை. நாங்கள் எங்களுடைய துக்கத்தை அவனது குடும்பத்திற்குத் தெரிவித்து எமது அங்கலாய்ப்பையும் அவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கு எதற்காக மலர்ச்சாலைக்கு நாங்கள் பணம் கொடுக்கவேண்டும் என்பது எனது வாதம்.

"அப்படியெண்டால் செத்தவீட்டுச்செலவிலை ஒருபங்கை நாங்கள் பொறுப்பெடுப்பமா?" என வெளிநாட்டில் அடைக்கலம் புகுந்திருக்கும் ஒரு சிநேகிதி யோசனையை முன்வைத்தா. வெளிநாட்டில வதியும் அவளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிங்களவர்களின் மரணவீட்டுக் கலாச்சாரம் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏன், தோசைக்கூட்டமாகிய எங்களில் பலருக்கே அந்தக் கலாச்சாரம் தெரியாது.

"பொறுப்பெடுக்கலாந்தான். ஆனால் செத்தவீடு சிங்களக் கிராமத்திலை நடக்குது. ஊர் முழுக்க ஒண்டு சேர்ந்து திருவிழா மாதிரி செத்தவீட்டை நடத்துவினம். குளிர்பானங்கள், பிஸ்கற் இத்யாதிகளுடன் மூண்டு நேரச் சாப்பாட்டையும் போட்டுத்தான் அவங்கள் அனுப்புவாங்கள். அதுக்கெண்டே மரணவீட்டு உதவிச் சங்கம் எண்ட பேரிலை ஒவ்வொரு சின்னக் கிராமத்திலேயும் சங்கம் இருக்குது. அந்த சங்கத்தின்ரை வேலைக்குள்ளை வேறை ஆக்கள் வாறதை அவை விரும்புகிறதில்லை. அதிலும் நாங்கள் தோசையள்." என்று எனது கருத்தை பதிவிட்டேன்.

தமிழ் கலாசாரம் போலவே அவர்களுக்கும் எட்டுச்சிலவு, துடக்குக்கழிவு, மூண்டு மாத அன்னதானம், ஆண்டுத் திவசம் என செத்தவீட்டுக்கொண்டாட்டங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். அவற்றில் ஏதாவது ஒன்றிற்கு உதவ முடியாதா? என்றவாறு கருத்தாடல் போய்க்கொண்டிருந்தது.

அப்போதுதான் வட்ஸ்அப் குழுமத்தைத் தொடங்கிவைத்த பரதன் தனது கருத்தை முன்வைத்தான். "கட்டை பண்டாரவின்ரை மகள் இறுதியாண்டு படிக்கிறபடியால் நாங்கள் ஏன் அவளுக்கு உதவி செய்யக்கூடாது?" வெளிநாட்டிலை வசித்து வருகிற பரதன் சொன்ன கருத்தை உடனடியாகவே நான் ஆதரித்தேன். பரதனின் யோசனையை யாரும் எதிர்க்கவில்லை.

கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற வெளிநாட்டுப் பணத்துடன் இலங்கைப் பணமும் சேர்ந்து பெரியதோர் தொகை கிடைத்தது. அதனை எடுத்துக்கொண்டுதான் இன்னும் இரண்டு பேரோடை கட்டை பண்டாரவின்ரை வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். நாங்கள் வருவது பற்றி அறிவிக்காமலே செல்வது என மூவரும் தீர்மானித்திருந்தோம்.

கட்டை பண்டாரவின் மனைவியும் மகளும் முதலில் எங்களைக்கண்டு திகைத்தாலும் மதிய உணவுடன் எங்களுக்கு அளித்த வரவேற்பை விபரிக்கமுடியாது. புறப்பட ஆயத்தமானபோதுதான் நாங்கள் சேகரித்துக் கொண்டுவந்த தொகையைக் கொடுத்தோம். கட்டை பண்டாரவின் மனைவி மறுத்துவிட்டாள்.

"இத்தொகையை உங்களது நாளாந்த செலவுகளுக்கென்று கொடுத்து பண்டாரவுடன் எமக்கிருந்த நட்பைக் கொச்சைப்படுத்த நாம் விரும்பவில்லை. பண்டாரவின் மகளின் கல்வி பற்றிய பொறுப்பு எங்களுக்கும் இருப்பதை உணர்ந்தபடியினாலதான் நாங்கள் இதனைச் செய்தோம். நீங்கள் பண்டாரவைக் கௌரவப்படுத்துவதாயின் இதனை ஏற்று மகளின் கல்விக்கு மட்டுமே இதனைப் பாவியுங்கள்."

அவளால் எதுவும் பேசமுடியவில்லை. நிமிடங்கள் கடந்தபின் விம்மலுடன் வாய்திறந்தாள். "செத்தவீட்டை எப்பிடி நடத்திறது? அதனைத் தொடர்ந்து வாற அன்னதானங்களை எப்பிடிச்செய்யலாம் எண்டுதான் நானும் நாங்கள் எல்லாரும் யோசிச்சமேயொழிய பிள்ளையின்ரை படிப்பைக்குறிச்ச நீண்டதூரப்பார்வை எங்களுக்கு இருக்கேல்லை." அதற்குப் பிறகு அழத்தொடங்கிவிட்டாள்.

"வாற மாதம் அவரின்ரை மூண்டாம் மாத அன்னதானம் வைக்கிறம். நீங்கள் தந்த இந்தக் காசிலை ஒரு சதமும் அதுக்கெண்டு எடுக்கமாட்டன். அவளின்ரை படிப்புக்குத்தான் முழுதையும் சிலவழிப்பன் எண்டு சத்தியஞ் செய்யிறன். அண்ணாமாரே, நீங்கள் தமிழ் இனம். நாங்கள் சிங்களவர். என்ரை மகளின்ரை எதிர்காலத்தைக் குறிச்சு நீங்கள் எல்லாரும் வைச்சிருந்த எண்ணத்துக்கு முன்னாலை " அதற்கு மேல் அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 07

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | சூ | | | 2 டெ | | |
| | ■ | ■ | 3 | | | | ■ | ■ |
| | ■ | ■ | | ■ | ■ | | ■ | 5 |
| | 4 ம | | | | ■ | | 8 | |
| | | 6 | | | 9 த | | | |
| ■ | ■ | | ■ | | | ■ | | |
| 7 | | க | | | | | | |
| | ■ | | ■ | | | 10 | | |
| | ■ | | ■ | 11 பொ | | | | ■ |

## இடமிருந்து வலம்

1. தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன்
2. கொரோணாவை விடக் கொடியது என்கிறார்கள் வைத்தியர்கள்.
3. அழகுத் தெய்வம்
4. இப்போது இலங்கையில் இதன் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு போகிறது.
7. மா, பலா, வாழை
10. யானைக்குப் பிடிப்பது
11. ஒருவரை கௌரவிக்க அணியப்படும் ஆடை

## மேலிருந்து கீழ்

1. நளனின் காவியம்
2. உலகில் தூய்மையான நாடுகளில் ஒன்று
3. மதுரையை எரிக்கத் துணிந்தவள்
4. இதற்கு அடிமையானவர்கள் தாமே தம்மையிழப்பார்
5. பாஞ்சாலி சபதம் இடம்பெறும் இதிகாசம்
6. அடக்கம் ஒன்றுதான் பெண்களின்........
7. பாரி மன்னனின் புகழ் இதனால் பரவியது.
8. இந்தத் தடையிருந்தும் மக்கள் நடமாட்டம் அதிகமாகவே உள்ளது.
9. கடந்த சிரித்திரனில் வெளியான கதைஅமுதம்
10. மனிதனுக்கு இதன் மேல் தீராக் காதல். (தலைகீழாகவுள்ளது)
11. நாட்டின் முதுகெலும்பே இன்று முடங்கியுள்ளது. (தலைகீழாகவுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி - 5 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.கொரோணா 2.பெற்றோல் 4.எண்ணம் 6.இன்பம் 7.இடுகாடு 9.சிரித்திரன் 12.காளை 13.நவ்வி 15.அன்னம்

**மேலிருந்து கீழ்**

1.கொலைகாரன் 2.பெண் 3.தட்டுப்பாடு 5.கம்பன் 6.இமை 7.இன்னல் 8.மதி 9.சிற்பி 10.பரதன் 11.சுமை 12.கானகம் 14.விலை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | | 6 | | |
| | 8 | | 3 | | 2 | | 5 | 7 |
| 4 | | 6 | | | | | | |
| | 7 | 9 | | 4 | | | 1 | 8 |
| 1 | | | | | | | | 2 |
| 6 | 3 | | | 5 | | 7 | 9 | |
| | | | | | | 1 | | 3 |
| 2 | 6 | | 8 | | 1 | | 4 | |
| | | 5 | | 3 | | | | |


# சுடொக்கு விளையாட்டு 06

- 9X9 கட்டங்கள் இணைந்து உருவாகிய இந்தச் சுடோக்கு விளையாட்டில் சில எண்கள் மட்டும் தரப்பட்டிருக்கும். மிகுதிக் கட்டங்களை 1 - 9 வரை யான எண்களைக் கொண்டு நிரப்புதலே உங்களுக் குத் தரப்பட்ட சவால். நிரையிலோ நிரலிலோ ஒரு எண் ஒரு தடவைக்கு மேல் இடம்பெறக் கூடாது.
- சுடோக்குப் புதிரிலுள்ள இலக்கங்களை உங்களால் மாற்ற முடியாது.
- ஒரு சுடோக்குப் புதிருக்கு ஒரு விடையே உண்டு.


**சுடொக்கு 5 இன் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 8 | 6 | 9 | 3 | 5 | 4 | 1 |
| 4 | 3 | 9 | 5 | 7 | 1 | 8 | 2 | 6 |
| 1 | 5 | 6 | 4 | 2 | 8 | 3 | 9 | 7 |
| 9 | 2 | 3 | 1 | 5 | 7 | 6 | 8 | 4 |
| 8 | 4 | 7 | 3 | 6 | 2 | 1 | 5 | 9 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 2 | 7 | 3 |
| 7 | 6 | 1 | 2 | 8 | 4 | 9 | 3 | 5 |
| 5 | 9 | 2 | 7 | 3 | 6 | 4 | 1 | 8 |
| 3 | 8 | 4 | 9 | 1 | 5 | 7 | 6 | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மனைவி :** இந்த டெலிபோன் எங்க வீட்டிற்கு வேண்டாம்.
**கணவன் : ஏன்?**
**மனைவி :** மகளின் காதலர்களாலும் உங்க கடன்காரர்க ளாலும் அமைதியாக இருக்க முடியவில்லையே!



**தரகர் : எப்படிப்பட்ட மாப்பிள்ளையை விரும்புகிறீர்கள்?**
**தவறணை முதலாளி :** மாப்பிள்ளை படிப்பில்லாமல் இருக்கலாம், உத்தியோகமில்லாதவனாக இருக்கலாம் ஆனால் குடிகாரனாக இருக்கக் கூடாது.




**மனைவி : நீங்கள் கொழும்பிலிருந்து கொண்டு வந்த கோழிகளைக் காணோமே?**
**கணவன் :** கவலைப்படாதே கொழும்புக் கோழிகளுக்கு அன்ரனாவில் தூங்கித்தான் பழக்கம்.



**மாலா : உன் சிநேகிதி கண் ஒப்பரேசன் செய்து ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாளாமே! போய்ப் பார்க்கவில்லையா?**
**சீலா :** இப்போ நான் போய்ப் பார்த்தால் நான் புதுக்கச் செய்வித்துப் போட்டிருக்கும் நகைகள் அவள் கண்ணிற்குத் தெரியாது... சுகப்படட்டும் போய்ப்பார்ப்பம்

**மனைவி :** மகனை கண் டாக்டருக்குப் படிப்பிப்போம் வருங்காலத்தில் கண் டாக்டருக்குத்தான் செல்வாக்கு.
**கணவன் : ஏன்?**
**மனைவி :** ரீவி பார்த்து எல்லாருக்கும் கண் பழுதுபட்ட கேஸாக இருக்கும்... கண் டாக்டருக்கு ஏகப்பட்ட கிராக்கியாக இருக்கும்.

# பின் சிரிப்பு



**என்ன ஏதோ விபத்தில் அம்பிட்டுப் போனீங்களா? பன்டேஜ் பண்ணியிருக்கே!**
ஒரு குடிகாரனும் பைத்தியக்காரனும் சண்டை பிடிச்சாங்க சமாதானம் பண்ணிவிடப் போனேன். இரண்டு பேரும் சேர்த்து மண்டையை உடைச்சிட்டாங்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தியடிச் சமாச்சாரம்

– பரதன் சாமி

**மணியம்** : என்னடாப்பா நேற்று கடைக்குப் போனனியாம் காலமை போய் பின்னேரம் தானே வந்தனியாம் கடைக்குப் போறனெண்டு வேற எங்கையோ போயிருக்கிறாய் போல?

**காராளி** : உனக்கு நெகே என்னோட தனகாமல் இருக்கேலா நீ எந்த நாட்டில இருக்கிறியோ தெரியாது. இப்ப கடைக்கு சாமான் வாங்கப் போனால் குறைஞ்சது ஐயாயிரம் எண்டாலும் கொண்டு போக வேணும் இல்லாட்டி ஒரு சாமானும் ஒழுங்கா வேண்ட ஏலாது.

**மணியம்** : அதென்டா உண்மைதான் காராளி. நான் முந்தநாள் ஐயாயிரம் கொண்டு போய் ஒரு சின்ன பையில தான் சாமான் வேண்டிக் கொண்டு வந்தனான்.



**காராளி** : உனக்கு விளங்குதுதானே நான் நேற்று போனது சீனியும், மாவும் வேண்டுறதுக்கு. சீனி ஒருமாதிரி பவுண் விலையிலை வேண்டிப் போட்டன். அங்கர் ஒண்டு வேண்டுறதுக்கு நான் பட்டபாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும். இப்ப ஆடு மாடு வளக்கிறது எண்டாலும் சரியான பராமரிப்பு இருக்க வேணும் பராமரிப்பு இல்லாமல் மாடை மட்டும் வேண்டிப்போட்டு பால் கறக்கிற வேலையள் எனக்குச் சரிவராது.

**மணியம்** : அங்கர் இப்ப எங்கையடா கிடக்கு நீ வேண்டுறதுக்கு அங்கர் இறக்குமதி தானே நிப்பாட்டிப் போட்டாங்களாம் இனி எங்கை வேண்டுறது. அதுதான் என்னை மாதிரி ஆடு மாட்டை வளத்து பால் குடியுங்கோ எண்டுசொன்ன கேக்கிறியளே? தோட்டத்துக்கை முந்தியை மாதிரி புல்லுகள் வந்தா புடுங்கேலாது. புடுங்க கூப்பிட்டால் முதல்மாதிரி யாரும் வேலைக்கும் வரமாட்டினம் அதுதான் மருந்தடிக்கிறது. உனக்குத் தேவையென்டால் மாட்டுக்குப் புடுங்கிப் போடன்.

**காராளி** : இப்ப எங்கையடா புல்லுக்கிடக்கு தோட்டம் எண்டு ஒண்டைத் தொடங்கி வயலுகள் தோட்டங்களுக்கை இருக்கிற புல்லுகள் எல்லாத்தையும் மருந்தடிச்சு அழிக்கிறாங்கள் இதுகளை யாரிட்டச் சொல்லுறது? சொன்னாலும் விளங்காது உதுகளுக்கு மினக்கட எனக்கு நேரமில்லை. எனக்கு எவளவு வேலையள் இருக்கு.

**மணியம்** : நீ எங்கை உத்தியோகத்துக்குப் போறியே மாட்டை நல்லா அவிட்டு மேயக்கட்டி வளக்கலாம்தானே ஆடு, மாடு வளக்காமல்இப்பிடி எல்லாரும் இருக்கிறதாலதான் நாட்டுக்கு இந்த நிலைமை நான் பசுப்பால், ஆட்டுப்பால் எல்லாம் குடிக்கிறதால எனக்கு மாவும் தேவையில்லை. சீனியும் தேவையில்லை

**காராளி** : நீ சொல்லுறதும் சரிதான் இப்பிடி நாங்கள் சுயதொழில் செய்தால் எந்த தட்டுப்பாடும் வராது இருந்தாலும் நேரம் வேணுமே?.. இப்ப கதைக்க நல்ல ருசியாக்கிடக்கு ஆடு மாட்டை மேய்க்கிறதெண்டால் சும்மா வேலையே?

## Mrs.டாமோடிரன்

***mr.டாமோடிரன்: டார்லிங் வட் இஸ் த டீவாளி***

***Mrs.டாமோடிரன்: டீ வாங்க பாவிக்கிற வாளி***

***Mr.டாமோடிரன்: ஓ... குட் டார்லிங்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ் ஒன்றின் வாக்குமூலம்



கோகிலா மகேந்திரன்

சிறுகதை

**கூர்பின்ரை** முதல் உயிர் நான்! மன்னிக்க வேணும் எனக்கு உயிர் இருக்கோ இல்லையோ எண்டு கன காலம் தலையைப் போட்டு உடைச்சு இப்ப நான் ஒரு அங்கி இல்லை எண்டு தள்ளி வைச்சிட்டினம். நான் ஒரு தனிப் பெருங்கூத்து.

கடைசியாய் வந்த மழைக்கு முளைச்ச அகந்தையின்ரை பிள்ளையள் இவை. எங்களை விட்டால் வேறை மனுசரில்லை எண்ட பெரிய எண்ணம் இவைக்கு! இவைக் கெண்டால் ஆருக்கெண்டு நினைக்கிறியள்? மனுசருக்குத்தான். வேறை ஆருக்கு? அது தான் இப்படிக்கிடந்து உலையினம்! உழலினம்!

இந்தப்பூமி பிரபஞ்சத்தின் ஒரு பகுதியா...? நாலரை பில்லியன் வருஷங்களுக்கு முதல் தோன்றினதாம். அவைதான் சொல்லினம் பெரிய கண்டு பிடிப்புக்காறர்தானே! நாங்கள் கிட்டத்தட்ட மூண்டரை பில்லியன் வருஷங்களுக்கு முதல் இந்த மாநிலத்துக்கு வந்திட்டம். ஆனா 1935 ஆம் ஆண்டுதான் எங்களை இவை கண்டு பிடிச்சவை. நாங்கள் அந்தளவு சின்னாக்கள் எண்டபடியா - உருவத்திலை - இவையின்ரை கண்ணுக்குத் தெரியாமலே எங்கடை ஆட்சி நடந்து கொண்டிருந்தது. என்ரை தம்பி சின்னவன் ஒருத்தன் இருக்கிறான். அவன்ரை விட்டம் ஆக 20 நனோ மீற்றர் தான் இலத்திரன் நுணுக்குக்காட்டி கண்டு பிடிச்ச பிறகுதான் எங்களிலை பலபேரைக் கண்டவை.

நாங்கள் என்னெண்டு இந்த உலகுக்கு வந்தனாங்கள் எண்டதிலையும் இவைக்குத் தெளிவில்லை. பரம்பரை அலகுகள் தனியப் பிரிஞ்சிருக்கலாம். பற்றீரியாவிலை சில பகுதியளை இழந்திருக்கலாம். வேற்றுக்கிரக வாசிகளாய் இருக்கலாம். கலாம்... கலாம்... சுக்கிலம்... பரதம் எண்டு ஒரு சின்ன விஷயத்துக்கும் ஆளுக்கொரு கொள்கையும் போலி ஆய்வு முடிவும் வைச்சுக் கொண்டு கோஷம் போட்டுக் கொண்டு திரிவினம். எது உண்மை எண்டு ஒருத்தருக்கும் தெரியாது. அதுக்குள்ள "நான்" எண்ட ஆணவம் வேறை!

ஒண்டு நிச்சயம். நாங்கள் இந்த வையத்தின்ரை பூர்விகக் குடி. இவை ஒரு இடத்திலையும் பூர்வீகக் குடியளை நிம்மதியா இருக்க விடுறேல்லை. தெரியுந்தானே! பிந்தி வந்து இடம் பிடிக்கிறது. அநியாயம் அக்கிரமம் செய்து வெருட்டுறது. பிறகெல்லாம் தங்கடை எண்டு நிறுவுறது. உது பிறவிக்குணம். சில வேளை சாட்டுக்கு மன்னிப்புக் கேக்கிறது. அதுக்கிடையிலை எல்லாரையும் தங்களைப் போலை மாத்திறது! பெரிய விளையாட்டுக்காரர். எங்களுக்குத் தெரியும் எங்களையும் தங்கடை சமயத்துக்கு மாத்தப் பாப்பினம். அவைக்குத் தங்கடை சமயம் பற்றித் தெளிவில்லை. ஆனா மற்றவையை மாத்திறதிலை முன்னுக்கு நிப்பினம்.

நீரிலை அங்கியள் தோன்றி மெல்ல நிலத்துக்கு வந்து மாக்கந்தியா முதல் பூக்கும் தாவரங்கள் வரை அதுகள் விருத்தி அடைஞ்சு, சூழலுக்குப் போதிய ஒட்சிசனை வழங்க, விலங்குகள் இஞ்சாலை ஜதராவிலை இருந்து முலையூட்டி வரை தங்கடை பாட்டுக்கு அமைதியா வாழக் கடைசியா வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கினாக்கள் இவை. தங்களுக்கு, "ஹோமோ சேப்பியன்ஸ்" எண்டு இங்கிலிசிலை ஸ்ரைலா ஒரு பேரும் வைச்சுக் கொண்டு! எனக்கும் இப்ப "சாஸ் கோவ் 2" எண்டொரு நாகரீகப் பேர் வைச்சிருக்கினம். தாங்கள் வந்து முந்நூறாயிரம் வருஷந்தான் எண்டு ஒத்துக் கொண்டு பிறகேன் பூர்விகக் குடியளோடை கொழுவுப்படேனம்? தாங்கள் கூர்ப்பிலை வலு உச்சமாம். பெரிய சாதிக்காறர்தான். ஆசை எண்ட விஷம் குடிச்சுத் தாங்களே போட்டுக் கொண்ட தங்கக் கிரீடம்.

இந்தப் பூவுலகிலை எத்தினையோ வகை வகையான உயிரிகள் இருக்குத்தான். உயிர்ப்பல்வகைமையிலை ஒவ்வொண்டும் தன்ரை இருப்புக்குப் போராடுதுதான். எல்லாரையும் அழிச்சுப் போட்டுத் தான் மட்டும் வாழ வேணும் எண்ட மொக்குச் சுயநலம் வேறை ஒருத்தருக்குமில்லை. மற்ற உயிரியள் இயற்கையோடை சண்டைக்கும் போறேல்லை.



இயற்கை எல்லாத்தையும் ஒட்டு மொத்தமா அழிச்சு பிரட்டிச் செயற்கை உலகமாக்கிறம் எண்டு வெளிக்கிட்ட முதல் மோசக்காரர் இவைதான். தங்கடை நரம்புத் தொகுதி பற்றியும் மூளையின்ர விருத்தி பற்றியும் புழுகடா புழுகெண்டு புழுகித் திரிஞ்சவை! இண்டைக்கு ஒரு கல அமைப்புக் கூட இல்லாத என்னோடை மல்லுக்கட்ட ஏலாமல் முழுசினம். இவையின்ர குஸ்தியள் ஒண்டும்' என்னோடை சரிவராது. என்ரை பாட்டுக்கு வெளியிலை விட்டால் ஒண்டும் செய்யமுடியாத ஆள் நான். இவையின்ரை கலத்துக்கை ஒரு ஒட்டுண்ணியாப் பூந்திட்டன் எண்டால் எல்லாத் திருவிளையாடலும் செய்வன். "திருவிளையாடல் 2" எண்டு ஒரு படம் தயாரிக்கட்டன்.

வேணுமெண்டால்! விருந்து வழங்கியான தங்கடை உடம்புக்கை என்னைப் பூரவிடமால் கதவு பூட்டத் தெரியாத வெறும் பேயர் இதுகள் என்னோடை மோதுதுகள்.

எனக்கு நூறு பில்லியன் சகோதரம் இருக்குக் கண்டியளோ! ஒண்டு போனால் பத்தெண்டு வருவம். 'பாரதப்போர்' மாதிரித்தான் இருக்கும். உயிர் எங்கையிருக்கோ அங்கெல்லாம் இருப்பம் நாங்கள். "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்..." என்று

## வாழ்த்துச் செய்தி



இலங்கையில் சிரிப்பிற்கு ஓர் சஞ்சிகையென்றால் அது எம் சிரித்திரனே. இந்தியாவிற்கு விகடன் என்றால் இலங்கைக்கு சிரித்திரன் என அன்றொரு காலத்தில் இருந்தது.

1963ஆம் ஆண்டு சிவஞான சுந்தரம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 32 வருடங்களாக சஞ்சிகை உலகில் சிந்தனைச் சிறப்பாலும், கேலிச் சித்திரங்கள், கருத்தோவியங்கள் போன்ற படைப்புகளாலும் சிரித்திரன் சஞ்சிகை தனக்கென தனியிடத்தை நிலைநிறுத்தியது.

இது ஜனரஞ்சகமாக இருந்ததனாலேயே சுந்தர் அவர்கள் பின்னாளில் சிரித்திரன் சுந்தர் என அழைக்கப்பட்டார். அவரின் மறைவிற்குப் பின்னால் சிரித்திரன் எனும் விளக்கு மிளிர்ந்து விட்டு சில வருடங்களில் அணைந்துவிட்டது. இருந்த போதும் சிரித்திரன் சஞ்சிகையானது "புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம்" எனும் நிறுவனத்தினால் "செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்" எனும் மகுடவாசகத்திற்கிணங்க இவ்வாண்டு தனது பயணத்தை மீண்டும் ஆரம் பித்து எட்டு மாதங்கள் கடந்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைக்கின்றேன்.

தரத்தினை இழக்காது அன்றுபோல் இன்றும் சுடர்விட்டெரிகிறது. சிரித்திரன் இலங்கையில் மட்டுமல்லாது அனைத்து நாடுகளிலும் அதன் புகழ் மென்மேலும் ஓங்கவேண்டுமென சிறப்பு மலர் ஊடாக மனதாரவாழ்த்துகின்றேன்.

**வாமதேவன் தியாகேந்திரனின் (தொழிலதிபர்)**
**தியாகி அறக்கொடை நிறுவனம்,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டுப்போட்டுப் பாடட்டன். தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்று கடவுளைச் சொல்லுறவை ஒருவேளை எங்களைத்தான் கடவுள் எண்டு நினைக்கினமோ தெரியா? ஆழ்கடலிலையும் இருப்பம், அன்ராக்ரிக்ராவிலையும் இருப்பம். நீரிலையும் வாழுவம், நிலத்திலையும் வாழுவம். ஆனா எங்களை இவை "அம்பிபியா" எண்டு சொல்லுறேல்லை. ஏனெண்டா எங்களுக்கு உயிரில்லையெல்லோ!

"கொரோணா வைரஸ் காத்தாலை பரவுது" எண்டு கண்டு பிடிக்கினமாம் இப்பத்தான்! சிரிப்பாக் கிடக்கு எனக்கு!

*1918 - 20* இலை முதலாம் உலகயுத்த காலத்திலை என்ரை அண்ணன் ஒருத்தன் ஒரு பிடி பிடிச்சுக் கிட்டத்தட்ட நாப்பது மில்லியன் பேரின்ரை கதையை முடிச்சவன். யுத்தமும் நடந்ததாலையோ என்னவோ எத்தினை பேர் செத்ததெண்ட கணக்கே தெரியாது இவைக்கு! சும்மா கணக்கு விடுவினம். மழுப்பிக் கிழுப்பி எழுதுவினம். மொழி படிச்சிட்டினம் எல்லோ... அப்ப பிரட்டிப் பிரட்டிப் பேசுறது சுகம். இவையின்ரை நாக்கும் நல்லா வளையும் உறுதியா நில்லாது. அந்தக் காலத்திலை இவைக்கு இந்தத் 'தடுப்பூசி' எண்ட சொல்லும் தெரியாது.

உலக யுத்தம் எண்டாப் போலை ஞாபகம் வருது நாங்கள் ஒண்டும் செய்யாமல் பேசாமல் எங்கடை பாட்டிலை இருந்தாலும் இவை தங்களுக்குள்ளை தாங்கள் அடிபட்டு அழியிறதிலை நம்பர் வண்' ஆக்கள்! நீ பெரிசோ நான் பெரிசோ எண்டு தொடங்கி... கண்ணைக் கட்டி... உலகப் போர் ஆக்கி, முதலாம் உலகப் போரிலை நாப்பது மில்லியன் பேர் சுடலைக்குப் போய் - சுடலைக்குப் போனதும் நிச்சமில்லை... அதிலையும் பாடம் படிக்காமல் பிறகுதொடங்கி, இரண்டாம் உலகப்போரிலை எழுபத்தைஞ்சு மில்லியன் பேரைப் புதைச்சு, புதைச்சதோ எரிச்சதோ எண்டு கேக்க வேண்டாம்... இன்னும் அடங்காமல் இப்ப மூன்றாம் உலகப் போருக்கு 'ரெடி' இரகசியமாய் வேலை செய்யினம். வெளிலை "கோல்ட் வார்" எண்டு பேர் வைப்பினம். பெரிய பெரிய ஆயுதம் எல்லாம் கண்டுபிடிச்சு ஆளுக்காள் ஒழிச்சுப் பிடிச்சு விளையாடுவினம்.

வேறை எந்த உயிரினமும் இப்பிடித் தங்களுக்குள்ளை அடிபட்டு மில்லியன் கணக்கிலை துலையிறேல்லைப் பாருங்கோ. மூளை கெட்டதுகள் எண்டு நான் முதலே சொன்னன் தானே! மற்ற அங்கியள் தங்கடை அடிப்படைத் தேவைக்கு சாப்பாடு, வாழிடம், காற்று, ஒளி, இனப்பெருக்கம் எண்டு போட்டி போட்டாலும் ஐஞ்சு, பத்து, ஐம்பது, நூறு சாகும். இயற்கை அனர்த்தம் வந்து ஏராளமாய் அழிஞ்சிருக்கும். அது வேறை கதை. இவைதான் தோல், நிறம், சாதி, சமயம், மொழி, நாடு எண்டு பிடிபடாத சொல்லுகளுக்குள்ளை பிடிபட்டு அழிஞ்சு போகினம் "எல்லா நாட்டையும் பிடிக்கப் போறன்" எண்டு ஒருத்தர் கொம்பு முளைச்சு வெளிக்கிடுவார். "பிடிச்சுப் போட்டு என்னப்பா செய்யப் போறாய்?: எண்டு கேட்டால் "நிம்மதியா இருக்கப் போறன்" எண்டு சொல்லுவார். " "பிடிக்காமலே இருந்தா அதிக நிம்மதி கிடைக்கும்" எண்டு விளங்கிறேல்லைப் பாருங்கோ! மூளை கூடவோ? மந்தம் அவ்வளவு.



அப்ப... கதையைப் பாதிலை விட்டிட்டன். இவையின்ரை ஆணவத்தை அழிக்கத்தான் எங்களைப் போலை ஆக்கள் இடைக்கிடை வெளிக்கிடுறது. கி.பி *1346-53* இலை 'பிளேக்' எண்டு பேர் வைச்சினம் ஒரு பிரச்சனைக்கு. அவன் எங்கடை பக்கத்து வீடு. ஓமோம் பற்றீரியா "பேரிராச்சியம் பற்றீரியா" எண்டு பள்ளிக்கூடத்திலை படிப்பிப்பினம் வடிவா. அவன் இவையைப் போட்டு ஆட்டிப் படைச்சு ஒரு இருநூறு மில்லியன் பேர் போய்த் துலைஞ்சவை. *1928* இலை அலெக்சாண்டர் பிளெம்மிங் எண்டொருத்தர் வந்து பற்றீரியாவைப் பிடிக்கிறதுக்கு வழி காட்டிக்குடுத்திட்டார். அதுக்குப் பிறகு "இனி ஒருத்தரும் சாகமாட்டினம்" எண்டு கொலரை உயத்திக் கொண்டு திரிஞ்சினம்.


என்ரை அக்கா ஒருத்தி "பெரியம்மை" எண்ட பேரிலை, பல நூற்றாண்டு காலமா இவையைப் போட்டுப் பிரட்டி எடுத்தவள். எங்கடை ஆக்கள் அம்மாளின்ரை வருத்தம் எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதன் தான் செய்யும் தவறுகளுக்கு சிறந்த வக்கீலாகவும் பிறர் செய்யும் தவறுகளுக்கு சிறந்த நீதிபதியாகவும் இருக்கிறான்.**

வேப்பிலையைக் கட்டித் தொங்க விட்டிட்டுக் கிடந்தினம். வேறை ஒண்டும் செய்ய ஏலாது எண்டு விளங்கிப் போச்சு. கிட்டத்தட்ட 4ம் நூற்றாண்டு தொடங்கி 20ம் நூற்றாண்டு வரைக்கும் விட்டு விட்டுத் துரத்திக் கடைசியா ஒருமாதிரி 1980ம் ஆண்டிலைதான் "உலகத்திலை பெரியம்மை இல்லை" எண்டு சொல்ல விட்டவள். "பாவங்கள் கனகாலம் ஆச்சு பிழைச்சுப் போட்டன்" எண்டுதான் விட்டவள். அப்பவாவது 'ஈகோ' அடங்கியிருக்க வேணுமெல்லோ! இல்லை. 1800 களிலை பெரியம்மை அக்காவாலை வருஷத்துக்கு நானூறாயிரம் பேர் இயமன் வீட்டுக்குப் பக்கம் போனவை. கடைசி நூறு வருஷத்திலை மட்டும் ஐந்நூறு மில்லியன் பேருக்கு 'மரணம்' எப்படியிருக்கும் எண்டு காட்டினவள் அக்கா அதிலை தப்பின கனபேர் கண் தெரியாமல் கடைசி வரைக்கும் தடவிக் கொண்டு திரிஞ்சவை 'குருடர்' ஆக்கினவள் எண்டு சொன்னால் அடிக்க வந்திடுவினம் இவை. "விழிப்புல வலுவிழப்பு" அல்லது "மாற்றுத் திறனாளி" எண்டுதான் சொல்ல வேணும் எண்டு சொல்லுகளைப் பிடிச்சுக் கொண்டு தூங்குவினம். செயலிலை படு மோசமான ஆக்கள்.

'எட்வேட் ஜென்னர்' எண்ட ஒருத்தருக்குப் பிறகு 'தடுப்பூசி' எண்டைதைப் பிடிச்சு கொண்டினம் "இனி எங்களைப் பிடிக்கேலாது. நாங்கள் வளர்ச்சி அடைஞ்சிட்டம்" எண்டு பிதற்றிக் கொண்டு ஒழுக்க விழுமியங்கள் எல்லாத்தையும் கை நழுவ விட்டிச்சினம்.



இவை தோன்றின காலத்திலை மனுசக் குரங்குகளாய் ஆடை இல்லாமல் குகைகளிலை இருந்தவை. நாகரீகத்தின்ரை உச்சிக்கு வந்திட்டம் எண்டு சொல்லி முழு உடலையும் மறைக்க ஆடை அணிஞ்சு "ஒருத்தனுக்கு ஒருத்தி" எண்டு ஒழுக்கத்தோடை இருந்தினம். நாங்களும் இவையைப் பாத்து வாயைக் பிளந்தம். நல்லாத்தான் இருக்கினம் எண்டு வாயூறினம். இனி இதுக்கு மேலை நாகரீகத்தை எங்கை கொண்டு போறதெண்டு தெரியாமல் மெல்ல மெல்ல 'சுதந்திரம்' எண்ட பெயரிலை வாழ்க்கை நெறிமுறை எல்லாத்தையும் கைபறிய விட்டினம். மனத்திலை தோன்றினதையெல்லாம் இச்சைப்படி செய்யத் தொடங்கிச்சினம். ஒரு கட்டுப்பாடில்லை. 'கட்டற்ற' எண்ட சொல்லு கோடி பொன் குடுத்தாலும் கிடையாத மதிப்புப் பெற்று ஓடித்திரிஞ்சுது இவையின்ர வாயிலை! ஆரும் ஆரோடையும் படுக்கலாமாம். அதிலை என்ன பிழையாம் எண்டு திரும்பி விலங்கு வாழ்க்கைக்கு வந்திச்சினம், கிட்டத்தட்ட உடுப்புப் போடாமல் திரியிறது பெரீய நாகரீகமாச்சுது. வையகத்தின்ரை வளமெல்லாத்தையும் முடிஞ்சளவுக்கு சுரண்டி சமூக வாழ்க்கையை விட்டு விலகித் தனியனுகளாய் இருக்க விரும்பிச்சினம். குடும்ப அமைப்புத் தேவையில்லை எண்டினம். ஆளுக்கு நாலுகார் மூண்டு ஹெலிக்கொப்டர் வைச்சு ஓடித்திரிஞ்சால் சரி எண்டினம்.

"பிறந்த நாள் விழா எண்டால் ஹெலிக்கொப்டராலை வானத்திலை பேர் எழுதுறது. கலியாணம் எண்டால் சின்ன விமானத்திலை மாப்பிளை அழைக்கிறது.

"எண்டு அளவுக்கு மிஞ்சிக் கெடுப்பட்டு ஆரவாரப்பட்டினம். என்னாலை மற்ற உயிரிகளுக்கு எவ்வளவு இடைஞ்சல் எண்ட நினைப்புக் கிஞ்சித்தும் இல்லை 'சொறி' எண்டு தொட்டதுக் கெல்லாம் சொல்லிப் போட்டு, பூமித்தாயை எப்பவும் சொறிஞ்சு கொண்டு பறந்தினம். நாளுக்கு ஒரு நாட்டிலை வாழுறதுதான் பெரீய கெட்டித்தனம் எண்டும் காசு சேக்கிறது மட்டும்தான் மனிச இலக்கு எண்டும்... சொல்லி முடியாது!

பாத்திட்டுத் தாங்கேலாமல் இவன் மச்சான் 'எயிட்ஸ்' பாணத்தை ஏவி விட்டான். "ஒழுங்கா வாழத் தெரியாதவை எல்லாம் ஒழிஞ்சு போங்கோ" எண்டு சாபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டவன். தடுப்பூசி, மருந்து, மாத்திரை ஒண்டும் வழிக்கு வராமல் திணறி 2005- 2012 இவை முப்பத்தாறு மில்லியன் பேர் வானுலகத்துக்கு வழி பிடிச்சுப் போய்ச் சேந்தினம். அங்கை போய் 'புஷ்பக விமானம்' ஓட்டட்டன். இவைக்கு மாறுற நோக்கம் இல்லை. "உன்னைத் திருத்து உலகம் திருந்தும்" எண்டு மேடை மேடையாய்க் கத்துவினம். செய்யமாட்டினம்.

"கொம்பேறிப் பாயும் குரங்கில் இருந்து பிறந்தவன் மனுஷன்" எண்டு சினிமாவுக்குப் பாட்டு எழுதினது இவைதான். குரங்கு ஒரு தாவர உண்ணி இவையின்ர உடலமைப்பும் தாவர உணவுக்குரியதுதான். கூரான நகமோ வளர்ச்சி அடைந்த வேட்டைப் பல்லோ இவைக்கு இல்லை. இரைப்பை சிறுகுடல், அதுகளின்ரை அமைப்பும் நீளமும் இதுகளாலையும் இவை தாவர பட்சணியைத்தான் ஒத்திருக்கினம். இயற்கை இவையை அப்படித்தான் படைச்சது. இவைக்குத்தான் 'கெடு' விடாதே! மச்சம் சாப்பிடப் போறம் எண்டு வெளிக்கிட்டு, முதலிலை கோழியும் ஆடும் எண்டு தொடங்கி, இப்ப நாயும் பூனையும், பல்லியும் பாம்பும், தவளையும் எலியும், வௌவாலும் வாத்தும் எண்டு கண்டதெல்லாம் வெட்டிப் பெரும் எடுப்பிலை இரத்தமும் நிணமும் இறைச்சியும் சேரும் வியாபார நிலையங்களை நடத்தி, இப்ப வௌவால் கொரோணாவைக் கொணந்திட்டுதெண்டு கத்தீனம்.

**"ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" என்றும்"**

**"அவி சொறிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று"**

என்றும் எழுதினாக்களும் இவைதான். இப்ப என்ரை வலையிலை அகப்பட்டுக் கொண்டினம்.

வைரஸ் எண்டால் என்ன? ரேபீஸ் வைரஸ் மாதிரி ஆர்.என்.ஏ யோடை வந்தாலும் சமாளிப்பம். பெரியம்மை மாதிரி டி.என்.ஏ யோடை வந்தாலும் சமாளிப்பம் எண்டும், இரண்டு பட்டிகை எண்டாலும் வழி தெரியும், ஒரு பட்டிகையெண்டாலும் பாதை தெரியும் எண்டும் திமிரோடை இருந்தவை இப்ப முழிசத் தொடங்கீனம். ஆர்.என்.ஏ, டி.என்.ஏ தடுப்பூசி கூடப் பல கேள்விகளோடைதான் நிக்குது.

ஒண்டே முக்கால் வருஷத்திலை 46 லட்சம் அவுட். 'தடுப்பூசி ரெடி' என்டினம். நாங்கள் விகாரத்துக்கு ரெடி எண்டம். இனிமேலும் மானசீகமாய் போருடை போட்டுக் கொண்டு திரிஞ்சு பிரயோசனமில்லை.

இந்த முறை இவை எங்களோட சர்வதேச உடன்படிக்கை ஒண்டு கைச்சாத்திட வேணும் அதிலை

**1. காடுகளை அழிக்க மாட்டம்.**

**2. ஆயுதம் தயாரிக்கவெண்டு களவா இயற்கை வளங்களைச் சுரண்ட மாட்டம்.**

**3. சூழலை மாசுபடுத்த மாட்டம்**

**4. ஞாலத்தின்ரை வெப்பநிலை உயர விடமாட்டம்.**

**5. தொழிற்சாலை விருத்தி எண்ட பேரிலை கண்டபடி பச்சைவீட்டு வாயுக்களை வெளிவிடுற வேலையள் செய்யப்படாது.**

எண்ட மாதிரிப் பல சரத்துக்களை உள்ளடக்கி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட வேணும். நாங்கள் எங்கட 'கப்சிட்' ஆலை கையெழுத்துப் போடுவம். இவை பேந்தும் மனுசகுலம் சார்பிலை ஆர் கையெழுத்துப் போடுறதெண்டு அடிபடுவினம்.

காசு அதிகாரம் ஆரிட்டைக் கூட இருக்கெண்டதை வைச்சுத் தீர்மானிக்கப் பாப்பினம். பேந்து பொறுப்பெடுக்க மாட்டினம்.

நானும் கனக்க அலம்பி என்ன பிரியோசனம்? சுருக்கமாச் சொன்னால், தானும் ஒரு முலையூட்டி விலங்கு என்பதை ஒத்துக்கொண்டு மற்ற உயிர்களைப்போலை எளிமையாய், இயல்பாய், இயற்கையோடை சேந்து வாழவேணும் இவை.

தடுப்பூசி கண்டுபிடிக்கலை எல்லே! ஒராள் கண்டுபிடிச்சவை மற்றாள் போடமாட்டன் எண்டு நிற்கும். ஒராள் தன்ரை தடுப்பூசிதான் திறம் எண்டு. மற்றாள் அதிலை காசு சேர்க்கிற வழியை யோசிக்கும். உவை உப்புடிக் குத்துப்பட, அந்த இடைவெளியிலை நாங்கள் கூர்ப்பிலை முன்னேறி விடுவம். பிறகு அல்பா பரவுது, பீற்றா பரவுது, டெல்ரா பரவுது, மூ பரவுது, நூ பரவுது எண்டு... கிரேக்க எழுத்துக்களைப் பாடமாக்கிக் கொண்டு இருக்கட்டன்.

எதுக்கும் ஒரு அளவிருக்குக் கண்டியளோ 'பாவம் மனுசர்' எண்டு விட்டுக் குடுக்கிறதுக்கும் ஒரு எல்லை இருக்கு. நாலு காலும் நடுவிலை ஒரு வாலுமா வரட்டும்.

கூர்ப்பை நடத்திக் கொண்டு போற ஒரு முக்கியமான செலுத்தி நாங்கள் எண்டது இவைக்குத் தெரியும். இயற்கைக்குச் சார்பாத்தான் கூர்ப்பு நகரும்.


'ஊழிக்காலம்' எண்டு புலம்பிறவையும், 'கலிகாலம்' எண்டு அழுறவையும் தொடரட்டும் தங்கள் தொழிலை.

"நின்னருள் வேண்டுகிறோம் எங்கள் நீதியும் தர்மமும் நிலைப்பதற்கே பாரதி இது இவையிலை ஒராள்தான் சொன்னது இயற்கையைப் பார்த்து! இப்ப இவை என்னைப் பார்த்து வேண்டட்டும் "நல்ல கவிதை எண்டால் பொற்கிழி குடுப்பம்".

'ஊழி பெயரினும் தாம் பெயரார்' எண்டு சொல்லப்பட்ட மனிசர் இவை. இவைக்கு இப்ப ஊழிக்காலம்! "வேறை கிரகத்துக்குப் போப்போறம்" எண்டு சிலபேர் வெளிக்கிடுனமாம். நாங்கள் இவை போறதுக்கு முந்தியே அங்கை இருக்கலாம்!

சந்திப்பம்! முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VISION NEXT 100 YEARS...

EMPOWERING THE NATION



## புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம்
## CENTRE FOR CREATIVITY AND INNOVATION

65, Velappar Lane, Stanley College Front Road, Jaffna.
E-mail : info@visionnext100years.org
Web : visionnext100years.org
+94 21 2222 974 | +94 75 741 7332



இச் சஞ்சிகையானது 65 வேலப்பர் ஒழுங்கை (கனகரத்தினம் கல்லூரி முன் வீதி), யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம் (CENTRE FOR CREATIVITY AND INNOVATION) நிறுவனத்தால் 693 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள New Evergreen Printers நிறுவனத்தினால் 2021 ஆண்டு புரட்டாதி மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org